சநகர சபை, யாழ்ப்பாணம்,

பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 15 புதன்கிழமை (28.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 153

# பயங்கரவாதத்தை துடைத்தெறிய இலங்கை - இந்தியா கூட்டு முயற்சி

## ஏனைய சார்க் நாடுகளையும் இணையுமாறு கிருஸ்ணா அழைப்பு



கொழும்பு, ஏப்ரல் 28

பயங்கரவாதத்தை முற்றாகத் தோற்கடிப்பதில் இலங்கையும் இந்தியாவும் நல்ல புரிந்துணர்வுடன் பரஸ்பர ஒத்துழைப்புடன் - மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்திருக்கிறார்.

பூட்டானில் நேற்று நடைபெற்ற 'சார்க்'வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்தில் பேசும்போது இத னைத் தெரிவித்த அவர், இரு நாடுகளும் முன்னெடுக்கும் இந்தப் பயங்கரவாத எதிர்ப்பு நட வடிக்கையில் 'சார்க்' அமைப்பிலுள்ள ஏனைய நாடுகளும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## பூட்டானில் இன்றும் நாளையும் 16ஆவது 'சார்க்' உச்சிமாநாடு

கொழும்பு, ஏப். 28

'சார்க்' அமைப்பின் 16 ஆவது உச்சி மாநாடு பூட்டான் தலைநகர் திம்புவில் இன்று ஆரம்பமாகின்றது.

எட்டு உறுப்புநாடுகளின் தலைவர்கள் பங்குபற்றும் இந்த சார்க் உச்சிமாநாடு இன் றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இந்த உச்சிமாநாட்டின்போது, பிராந்தி யத்துக்கான மிக முக்கிய விடயங்கள் குறித்து 'சார்க்' நாடுகளின் தலைவர்கள் விரிவாக ஆராய்ந்து தீர்மானங்களை எடுக்க வுள்ளனர்.

'சார்க்' அபிவிருத்தி நிதியத்துக்கான நிரந் தர செயலகமும் பூட்டானில் இன்று ஆரம் பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த உச்சிமாநாட்டிற்கு முன்னோடி யாக 'சார்க்' வெளிவிவகார அமைச்சர் களின் 32 ஆவது கூட்டத்தொடர் நேற்று நடைபெற்றது.

எட்டு தெற்காசிய நாடுகளினதும் வெளி விவகார அமைச்சர்கள் இந்தக் கூட்டத் தொடரில் கலந்துகொண்டனர்.

இன்று ஆரம்பமாகவுள்ள 16 ஆவது 'சார்க்' உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற் காக 'சார்க்' அமைப்பின் தற்போதைய தலை வரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே பூட்டான் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## முன்னாள் போராளிகளைப் பார்வையிட ஐ.நா. அதிகாரிகளுக்கும் அனுமதியில்லை!

கொழும்பு, ஏப்.28

முன்னாள் புலிப் போராளிகள் அர சினால் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தடுப்பு முகாம்களுக்குச் செல்ல முடியா மல் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை நேற்று கவலை தெரிவித்தது. ஐக்கிய நாடு கள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தா னிகராலயத்தின் பேச்சாளர் அட்ரெச் மஹோ சிக் இவ்வாறு கவலை வெளியிட்டார்.

இம்முகாம்களில் சுமார் 12 ஆயிரம் பேர் வரை தடுத்து வைக்கப்பட்டிருக்கக்கூடும்

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. சபையின் உயர் அதிகாரி பஸ்கோ அடுத்த மாதம் இலங்கை வருகிறார்

### ஆனால் யுத்தக் குற்றம் குறித்துப் பேசமாட்டார்

கொழும்பு, ஏப்.28

மே மாதத்தில் இலங்கை வருவதற் கான அனுமதியை ஐக்கிய நாடுகள் சபை யின் அரசியல் விவகாரங்களுக்கான தலை மையதிகாரி லைன் பஸ்கோ இலங்கை அரசிடம் கோரியுள்ளார். எனினும், அவர் இலங்கை வரும் பட்சத்தில் இலங்கையில் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக ஆலோ சனை வழங்குவதற்கான குழுவை அமைப் பது பற்றிய பேச்சுகளில் ஈடுபடமாட்டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(24ஆம் பக்கம் பார்க்க)

### கடந்த 5 வருடங்களில்

## அதிக மனித உரிமை மீறல்கள் நடந்த நாடுகளின் பட்டியலில் இலங்கையும்!

கொழும்பு, ஏப்.28

கடந்த 5 வருட காலப்பகுதியில் பெரி யளவிலான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்ற உலக நாடுகளில் ஒன்றாக இலங்கை உள்ளது என்று சிறுபான்மை யினரின் உரிமைகளுக்கான சர்வதேச குழு (Minority Rights Group International) நேற்று அறிவித்தது.

சர்வதேச மனித உரிமைகள் நிலை மைகள் குறித்து இந்த அமைப்பு வெளி யிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த 5 வருட காலப் பகுதியில் உல கின் பல நாடுகளில் மனித உரிமை மீறல் சம்பவங்களும், மனிதப் பேரவலங்களும் பெரிதும் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக இலங்கை, பாகிஸ்தான், ஏமன் ஆகிய நாடு

(24ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டில் பீதி தணியவில்லை

## பாடசாலைகளுக்கு காலையும் பிற்பகலும் தினமும் திரண்டு செல்லும் பெற்றோர்கள்!

யாழ்ப்பாணம், ஏப். 28

குடாநாட்டில் அநேகமான பாடசா லைகளுக் குத் தங்களின் பிள்ளைகளைப் பெற்றோர் காலையில் கூட்டிச் செல்வதும், பிற்பகல் பாடசாலை முடிந்ததும் அங்கு சென்று அழைத்துச் செல்வதும் தொடர்கிறது.

குறிப்பாக வலிகாமப் பகுதிப் பெற் றோர் கதிகலங்கிப் போயுள்ளனர். அங்கு நாளாந்தம் பல்வேறு வதந்திகள் காட்டுத்தீ போல் பரவி வருவதால், பெற்றோர் பெரும் பீதியுடன் காணப் படுகின்றனர்.

வலிகாமம் பகுதியிலுள்ள பெற்றோர் களில் அநேகர் பாடசாலைகளுக்குப் பிள் ளைகளைக் கூட்டிச்சென்று பிற்பகல் வரையும் அங்கேயே காத்திருந்து அழைத்து வருவதையும் காணமுடிகிறது.

மாணவர்கள் கடத்தப்படுவதாகக் கடந்த நான்கு நாள்களாக வதந்திகள் பரவி வரு வதால், மக்கள் பதற்றமும் பீதியும் அடைந் துள்ளனர்.

ஆனால், இவ்வாறான சம்பவங்கள் ஏதும் இடம்பெறவில்லை என்று பொலி ஸார் பொதுமக்களுக்கு அறியத்தரு கின்றனர். வதந்திகளை நம்பி ஏமாற வேண்டாம் என்றும் அவர்கள் அறிவுறுத் துகின்றனர். (ஒ-29-86)

### மாணவன் கபிலநாத் படுகொலை வழக்கு:

## விசாரணையைத் துரிதப்படுத்துவதற்கு பொலிஸாரின் ஒத்துழைப்பு வேண்டும்

### சாவகச்சேரி நீதிவான் டி.ஐ.ஜிக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 28

சாவகச்சேரி வர்த்தகரின் மகன் கபி லநாத் கடத்தப்பட்டுப் படுகொலை செய் யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்த பொலி ஸார் ஒத்துழைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வட மாகாண பிரதிப் பொலிஸ் மா அதி பருக்கு (டி.ஐ.ஜிக்கு) சாவகச்சேரி நீதி வான் ரி.ஜே. பிரபாகரன் மேற்கண்டவாறு நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

இந்த வழக்கு நேற்று நீதிவான் ரி.ஜே. பிரபாகரன் முன் விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

(24ஆம் பக்கம் பார்க்க)

KOKUVIL HINDU COLLEGE

KHC VS JHC Battle of the HINDUS

JAFFNA HINDU COLLEGE

Official Media Sponsor உதயன் @Kokuvil Hindu College grounds 30th & 1st of May 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத கடற்பயணத்தை தடுப்பதற்கு அரசு பிரயத்தனம்

## அதற்கென கடற்படையில் விசேட பிரிவு

கொழும்பு, ஏப். 28

அரசியல் தஞ்சம் கோரி வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களின் சட்டவிரோத கடற்பயணங்களை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் கடல் வலயப் பாதுகாப்பைப் பலப்படுத்த அரசு பகீரத முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

இலங்கையின் தற்போதைய யுத்தமற்ற சூழலிலும் கணிசமான இலங்கையர்கள் குறிப்பாகத் தமிழர்கள் வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமான முறையில் கடல் வழியாகச் சென்று அந்நாடுகளில் அரசியற் தஞ்சம் கோரி வருகின்றனர்.

இதனால் சர்வதேச ரீதியில் இலங்கை அரசு பெரும் அழுத்தங்களை எதிர்கொள்கின்றது. எனவே, இந்நிலைமையை முடிவுக்குக் கொண்டுவர விசேட கடற்படைப் பிரிவு ஒன்றைக் கடமையில் நிறுத்த அரசு உத்தேசித்துள்ளது.

இவ்விசேட கடற்படை அணியில் குடியகல்வு அதிகாரிகள், குற்றப்புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள், புலனாய்வு அதிகாரிகள், கடற்படையினர் ஆகியோர் உள்வாங்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விசேட கடற்படை அணியினரின் வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு வெளிநாட்டுத் தூதரகங்களின் உதவி மற்றும் ஒத்தாசைகளும் கோரப்பட உள்ளன. (சி)


### இளைப்பாறிய வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் பதிவு வைத்திய உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவைக்கு இணைத்தல்

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவதற்காக இளைப்பாறிய வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் பதிவு வைத்திய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உத்தியோகத்தர்கள் இளைப்பாறும் போது அவர்கள் கடைசியாகப் பெற்ற சம்பளம் அத்துடன் விசேட படிகளும் வழங்கப்படும். விரும்பும் உத்தியோகத்தர்கள் 05.05.2010ஆம் திகதிக்கு முன்னர் தங்களது விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை 'செயலாளர், சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணம்' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

இ.இரவீந்திரன்,
செயலாளர்,
சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு,
வடமாகாணம். (C/567042)

### LH-30 வான் விற்பனைக்கு

பாடசாலைச் சேவை, பிரத்தியேக வாடகைச் சேவைக்குப் பயன்படுத்தக்கூடிய, 17 இருக்கைகளைக் கொண்ட, மிகவும் நல்ல நிலையில் உள்ள LH-30 (TOYOTA HIACE 53-XXXX தொடரிலக்கமுடைய) வான் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
இல.148,கோயில்வீதி,
(புனிசென்முன்பாக)
யாழ்ப்பாணம்.
T.P 0774528818

### யாழ் நகரில்

**British College of Higher Studies** ஏற்பாட்டில்

வேலைவாய்ப்பைத் தேடும் இளைஞர் யுவதிகளுக்கு 100% வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தரும்/உறுதிப்படுத்தும் முகமாக அவர்களின் ஆளுமையை விருத்திசெய்யும் **(Personality Development)** பயிற்சிப் பட்டறைகள் **(Work shops)**

**இப் பயிற்சி நெறியில் உள்ளடங்குபவை**

- நேர்முகத்தேர்வினை எவ்வாறு எதிர் கொள்வது?
- அங்கு கேட்கும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது?
- எப்படியான ஆயத்தங்களிற்கமைய உங்களைத் தயார்படுத்துவது?
- உங்களிடம் உள்ள ஆவணங்களை எவ்வாறு முறைமைப்படுத்துவது?
- அலுவலகத்தில் பேசக்கூடிய ஆங்கிலமும், அதற்கான உரையாடற் பயிற்சிகளும்
- முகாமைத்துவம் (Management)
- மனிதவளப் பயன்பாடுகள் (Human Resource Management)
- அலுவலகப் பிரயோகத்திற்கான கணினிப் பயிற்சிகள் (Ms.Windows, Ms Word, Excel, Power Point, Accounting)

பயிற்சியின் முடிவில் தரம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்

**பயிற்சிப் பட்டறைகள் : 15 மணித்தியாலங்கள்**
சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களிலும் நடாத்தப்படும்

பயிற்சிப் பட்டறையில் பங்குபெறும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்களின் பதிவுகளை தாமதமின்றி முன்கூட்டியே பதிவு செய்து உங்கள் நேரஅட்டவணையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இப் பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவருக்கும் எமது நிறுவனத்தினால் சுயவிபரக்கோவை (Bio-Data) தயாரிக்கப்பட்டுத் தொழில் வங்கியிலும் (Jop Bank) இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

**British College of Higher Studies**
No. 15, Sirambiyadi Lane (Off Stanley Road), Jaffna.
web: www.bchs.lk Email:info@bchs.lk Tel: 021-2224550, Mobile:0777222422, 0714299935, 0773501499

### தவறிவிட்டது

234/6, செபஸ்தியார் லேன், ஒட்டுமடம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆனந்தராசா நகுலன் (781544000V), ஆனந்தராசா ஜெயந்தி (758600831V) ஆகியோரின் தே.அ.அட்டை மற்றும் ATM காட் என்பன கோப்பாய் பிரதேச செயலகத்திற்கும் புத்தூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: ஆனந்தராசா நகுலன், தோப்பு தெற்கு, புத்தூர். T.P. 0776116775

### வீடு வாடகைக்கு

ஆடியபாதம் றோட், திருநெல்வேலி, கேணியடி வைரவர் கோவிலுக்கு அருகில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. (ரேஸ்ரி கொம்பனிக்கு பின்புற வீடு).
தொ.பே.இல. 0778449687 (97384)

### தவறிவிட்டது

சதானந்தன் சிவநாயகி ஆகிய எனது பிரான்ஸ் வதிவிட கடவுச்சீட்டு (பாஸ்போட்) 26.04.2010 அன்று யாழ்.நகரில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும்.

கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். கபிலன் ஸ்ரோர்ஸ், கண்டிவீதி, மீசாலை வடக்கு, மீசாலை. 0776049151 (97387)

### ஆடு விற்பனைக்கு

யமுனாபாரி இன ஆட்டுக்கடாக்கள் இரண்டு (2) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: த.கனகரத்தினம்,
இல. 234/6, செபஸ்தியார் வீதி, ஒட்டுமடம். (97368)

### தேவை

அலுவலகத்தில் பணியாற்றக் கூடிய ஒருவர் (ஆண்) தேவை.
வயது 50- 60வரை (சி/567040)

**பரணி தொழில்நுட்ப சேவை,**
**166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
**0718474325**


## ஜெயந்தி தின விழா

யாழ்ப்பாணம், ஏப்.28

சிவஸ்ரீ முருகுப்பிள்ளை 'கடவுள் சுவாமி' களின் 105ஆவது ஜெயந்தி தின விழா இன்று காலை 8மணிக்கு தொண்டைமானாறு செல்வச்சந்தியில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் முருகப் பெருமானுக்கு விசேட அன்னபிஷேகம் நடைபெற்று, சுவாமிகள் வாழ்ந்த இடத்தில் விசேட வழிபாடுகளுடன் பூஜை, பஜனை, பிரார்த்தனை, ஆன்மீகப் பேருரைகள் என்பன நடைபெறும். தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. (ஒ-10)

## வீட்டு மின்னிணைப்பு பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஏப்.28

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் வீட்டு மின்னிணைப்புப் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்.பயிற்சி நிலையத்துக்கான இவ் விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்து எதிர்வரும் மே 15ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட முகாமையாளர், என்.ஏ.ஐ.ரி.ஏ (NAITA), இலக்கம் 71, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதகுதிகளாக க.பொ.த (சா/த) வரை கல்வி கற்றிருப்பதுடன் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16தொடக்கம் 35வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-10)

## இராஜகோபுரம் புனர் நிர்மாணம்

புங்குடுதீவு, ஏப்.28

புங்குடுதீவு, மடத்துவெளி பாலசுப்பிரமணிய ஆலயத்தின் இராஜகோபுரப் புனர்நிர்மாணப் பணிகள் சித்திரைப் பௌர்ணமிதினமான இன்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இவ் ஆலயத்தின் இராஜகோபுரப் பணிகள் கடந்த காலத்தில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-6-188)


### தேவை

பிரபல அச்சகம் ஒன்றை இயக்குவதற்கு முகாமையாளர் தேவை. இவர் அச்சகத்துறையில் குறைந்தது 10 வருட அனுபவமும், தமிழ், ஆங்கில அறிவும், தமிழ், ஆங்கில ஒப்புநோக்குநர் வேலை அனுபவமும் உள்ளவராக இருப்பது கட்டாய தேவை. நிர்வாக ஒழுங்கு, மெஷின் சம்பந்தமான அறிவும் உடைய ஒருவர் தேவை. உடன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை (C/567047)


## மரண அறிவித்தல்கள்

### மார்க்கண்டு கந்தையா



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு கந்தையா நேற்று (27.04.2010) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-சிவக்கொழுந்து தம்பதியினரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- சின்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், அருமையின் அன்புக் கணவரும், அரியமலர், அரியநாயகம் (மாவட்ட நீதிபதி, மல்லாகம்), புனிதமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராஜா, பிறேமாவதி, உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், டயானார்த்தி (சட்ட மாணவி), திரோராஜ் (மாணவன், சென்.ஜோன்ஸ் கல்லூரி), தீபன்ராஜ் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2010) புதன்கிழமை ஏழாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் ஏழாலை, உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை. (97371)

தகவல்:
குடும்பத்தினர்.

### முத்தையா செல்லத்துரை



உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த முத்தையா செல்லத்துரை நேற்று (27.04.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக் கணவரும், செல்வராசா, சாந்தினி, சுகந்தினி (சுவிஸ்), சிவாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாவதி, யோகசித்தன், வரதராஜா (சுவிஸ்), திலகேந்திரராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், துஷ்யந்தி, சுஜீகாந்த், சயானிகா, சுலக்ஷனா, பிரணவன், சானுஜா, சுமித்திரா, ராஜேஷ்கண்ணா, ராஜா தர்மேந்திரராஜ், தாட்சாயினி, கஜாயினி, நிஜாயினி, நிஜாந்தினி, எழிலன், வினுஜன், அஷ்வினி, அஷ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.04.2010) வியாழக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை, காக்கைதீவு, கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
கேணியடி. (97383)

தகவல்:
செல்வராசா
(மகன்).

### வெலிச்சோர் அல்பிரட்

(முன்னாள் சாரதி, கைதடி நவீல்ட் பாடசாலை)



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், பிடாரி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வெலிச்சோர் அல்பிரட் நேற்று (27.04.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெலிச்சோர்- எலிசபெத் தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கபிரியேல்- அன்னம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற யேசுதாசனின் சகோதரனும், மேரிமெனிக்காவின் அன்புக் கணவரும், வினோதினி, டக்ஷாயினி, ஜஸ்மினி, கிறேஷியன் (யாழ்.போதனா வைத்தியசாலை), நிரோஜியன் (டோகா-கட்டார்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ரகு மற்றும் ஸ்ரான்லி அமறா, கோகிலா, ஜெனிசிகா ஆகியோரின் அன்பு மாமனும், கௌதமி, லக்ஷனா, கோபி, சுஜீவன், சஜீவன், நிறோஜிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.04.2010) புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஆனைக்கோட்டை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிடாரி கோவிலடி,
ஆனைக்கோட்டை. (97366)

தகவல்:
அல்பிரட் கிறேஷியன்,
அல்பிரட் நிறோஜியன் (மகன்மார்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சமச்சீர் அபிவிருத்தி மூலமே நல்லிணக்கத்தை எட்ட முடியும்!

யாழ்.குடாநாட்டு மக்களின் மன நிலையைப் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றது 'இன்ரர் பிரஸ் சேவீஸ்' (ஐ.பி.எஸ்.) செய்தியாளர் ஒருவரின் யாழ். அனுபவச் செய்திக்கட்டுரை.

யுத்தத்தை வெற்றிகரமாக ஒப்பேற்றி முடித்துவிட்டதாக அறிவித்துள்ள அரசுத் தரப்பினால், அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அப்பகுதி மக்கள் ஏமாற்றமும் அதிருப்தியும் வெளியிட்டுள்ளனர் என்பதைப் பட்டவர்த்தனமாகவே அந்தச் செய்தி நிறுவனம் அம்பலப்படுத்தியிருக்கின்றது.

அரசின் அபிவிருத்தி நடவடிக்கை நாடகங்கள் தொடர்பாக அக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் கவனிக்கத்தக்கவை.

* அபிவிருத்தித் திட்டங்களில் தாங்கள் உள்வாங்கப்படாமல், வெறுமனே பார்வையாளர்களாக மட்டுமே கருதப்படுகின்றார்கள் என்ற மனநிலையே யாழ். மக்கள் மனதில் உள்ளது.

* குடாநாட்டைப் பொறுத்தவரை அபிவிருத்தி என்பது புதிய வங்கிகளும், நிதி நிறுவனங்களும் ஆரவாரமாகத் திறக்கப்படுகின்றமையாகவே உள்ளன.

* யாழ்ப்பாணத்தில் புதிய வர்த்தக வாய்ப்புகளைக் கைப்பற்றுவதற்கு பலத்த போட்டி இடம்பெறுகின்றது. அதற்காகவே தென்னிலங்கையிலிருந்து 'படையெடுப்புகள்' நடத்தப்படுகின்றன.

* யுத்தத்தினால் யாழ்ப்பாணத்தில் சேதமடைந்த கட்டடங்களைத் திருத்துவதற்கு ஆக்கபூர்வமான எத்தனங்கள் எடுக்கப்படவில்லை. ஆனால் குடாநாட்டில் வர்த்தக வாய்ப்புகளை வசமாகச் சுருட்டிக் கொள்வதற்கான - நிதி மற்றும் வர்த்தகம் சம்பந்தமான - கட்டடங்கள் மட்டும் அவசர அவசரமாக எழுகின்றன.

* யாழ்ப்பாணத்தில் தமது வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்காகத் தமது புதிய கிளைகளை இங்கு அவசர அவசரமாகத் திறக்கும் வங்கிகள் கூட, தென்னிலங்கையரைக் கொண்டுவந்தே அதிகாரிகளாகவும், அலுவலர்களாகவும், வங்கி ஊழியர்களாகவும் நியமிக்கின்றன. உள்ளூர் மக்களுக்கு இத்தகைய புதிய வேலைவாய்ப்பில் குறிப்பிடத்தக்க இடம் அளிக்கப்படுவதில்லை.

* புதிது, புதிதாகக் குடாநாட்டுக்குள் கால் பதிக்கும் வங்கிகள் எல்லாம் யாழ். குடாநாட்டு மக்களின் சேமிப்பை - வைப்பை - உறிஞ்சிக் கொள்வதிலேயே அதீத கரிசனை காட்டுகின்றன. யாழ்ப்பாண மக்களின் உண்மையான அபிவிருத்திக்குத் தேவையான கடன் மற்றும் நிதி வசதிகளைக் கெடுபிடியின்றித் தாராளமாக - இலகு வழியில் - இலகுவசதியில் - வழங்குவதற்கு அவை முன்வருகின்றன இல்லை.

- இப்படி சுட்டிக்காட்டப்படும் குறைபாடுள் பல.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் குடாநாட்டு மக்களின் சேமிப்பைத் தந்திரோபாயமாகச் சுருட்டிக்கொண்டு அதனைத் தென்னிலங்கைக்கான முதலாகப் பயன்படுத்துவதிலும் -

யாழ்.குடாநாட்டுக்குத் தென்னிலங்கைத் தரப்பின் விற்பனைச் சந்தையாக மாற்றுவதிலும் - மட்டும்தான் உண்மையில் கவனம் செலுத்தப்படுகின்றதோ என்ற சந்தேகம் பெருத்த எடுப்பில் தமிழர்களுக்கு ஏற்படுகின்றது.

யாழ். குடாநாட்டுக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை, அங்குள்ள குடும்பம் ஒவ்வொன்றிற்கும் புலம்பெயர்ந்த தேசங்களில் நெருங்கிய உறவினர்கள் உள்ளனர். அந்த உறவுகளின் உதவிகள்தான் இத்தகைய கொடூர யுத்தத்திற்கு மத்தியிலும் அவர்களைத் துவண்டுவிடாமல் தலை நிமிர்ந்து நிற்க உதவின. அத்தோடு குடாநாட்டு மக்கள் இயல்பாகவே சேமிப்பில் விற்பன்னர்கள். இவ்வாறு வெளிநாட்டு உறவுகள் மூலம் தமக்குக் கிடைக்கும் பெருவாரி நிதியை சேமிப்பாக முதலீடு செய்து வைத்துக்கொள்வது யாழ்.குடாநாட்டின் இயல்பான கலாசாரத்தின் ஒருபகுதி.

அதை இலக்கு வைத்தே வங்கிகளும், நிதி நிறுவனங்களும் குடாநாட்டில் காய் நகர்த்துகின்றன என்பதே பொதுவான குற்றச்சாட்டு.

யுத்தத்தால் பாதிப்புற்ற யாழ்.குடாநாடு உட்பட்ட தமிழர் தாயகத்துக்குப் பெருவாரியான உதவிகள், ஒத்தாசைகள் தேவைப்படுகின்றன. பெருமளவில் நிதி உதவிகள், கடன் வசதிகள் போன்றவற்றை வாரி வழங்குவது மிக முக்கியமாகும். யாழ். குடாநாட்டின் அபிவிருத்திக்கு - பொருளாதார விருத்திக்கு - நிதி உதவி என்பது மிக மிக முக்கியமான தேவைப்பாடுகளுள் ஒன்று.

அதைக் குடாநாட்டு மக்களுக்கு வாரி வழங்குவதை விடுத்து, யாழ்.குடாநாட்டில் உள்ள மக்களின் எச்சசொச்ச மூலதனமான சேமிப்பைக் கூட அந்த மக்களுக்கு உதவியாக வழங்காமல் சுருட்டிக்கொண்டு - வாரி, உறிஞ்சிக்கொண்டு - தென்னிலங்கைக்குக் கொண்டு சென்று அங்கு முதலீடு செய்யும் தந்திரோபாயத்தை இனியாவது கைவிடுங்கள்.

இனப்பிரச்சினை பெரும் போராக நீடித்த காலத்தில் - அந்த யுத்தத்தைக் காட்டி, இப்படித் தமிழர்களின் நிதி வளத்தைச் சூறையாடி தென்னிலங்கையை வளர்த்தீர்கள். இப்போது யுத்தம் முடிந்து விட்டது. இனியாவது யாழ். குடாநாடு உட்பட்ட தமிழர் தாயகம் மீட்சி பெற உதவுங்கள். உதவித்திட்டங்களில் - குறிப்பாக நிதி வளங்களுடன் கூடிய திட்டங்களில் - தமிழர் தாயகப் பிரதேசத்துக்கு முன்னுரிமையும் முக்கியத்துவமும் கொடுங்கள். அப்போதுதான் இலங்கைத் தேசம் எங்கும் சமச்சீர் அபிவிருத்தி சாத்தியமாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அடிப்படைத் தேவைப்பாடான நல்லிணக்கத்தை எட்டுவதற்கு இந்த சமச்சீர் அபிவிருத்தி பற்றிய மனக்கருத்து மக்கள் மத்தியில் ஏற்படுவது அவசியமாகும்.

# கொடூர வன்முறைக் குற்றங்களால் குடாநாட்டில் பீதி; சூத்திரதாரிகளை மடக்கி சட்டத்தின் முன் நிறுத்துங்கள்!

## யாழ். மாவட்ட எம்.பி. சரா அவசர வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெருகி வரும் கடத்தல், கப்பம் கோரல், கொலை போன்ற கொடூரமான குற்றச்செயல்கள் மக்கள் மத்தியில் பெரும் பீதியையும், அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளன. இந்தப் பய உணர்வால் குடாநாட்டு மக்களின் வழமையான வாழ்வும், அன்றாட நடவடிக்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளுக்குச் செல்லும் சிறார்கள் மிகுந்த பயத்துடன் உள்ளனர். பெண்கள், வயதானோர் வீடுகளில் தனித்திருக்க முடியாத நிலையில் அடக்குமுறை அச்சத்துக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

இந்தப் பீதி உணர்விலிருந்து மக்களை விடுவிக்க உறுதியான - காத்திரமான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படவேண்டும். இக்கொடூரங்களுக்குக் காரணமான குற்றவாளிகள் தப்ப அனுமதிக்கப்படாமல் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும்.

- இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள பீதி நிலைமை குறித்துத் தமது அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இவற்றை மிக நிதானமாக, கவனமாகக் கையாண்டு, மக்களைப் பயத்திலிருந்து விடுவித்து, அமைதியான வாழ்வைத் தொடர்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். குற்றவாளிகளையும் குற்றத்துடன் தொடர்புடையவர்களையும் இனங் கண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். சமூகச் சீரழிவுகளைத் தடுக்க வேண்டும்.

யுத்த காலத்தில் அச்சத்துடன் ஒடுங்கியபடி வாழ்ந்து பல இழப்புகளுக்கு மக்கள் முகம் கொடுத்தமை போன்ற சூழல் மீண்டும் ஏற்பட்டுள்ளது. இயல்பான வாழ்வுக்காக ஏங்கியபடி மக்கள் பல்வேறு துன்ப, துயரங்களுக்கு முகம் கொடுத்தார்கள்.

இந்தக் குற்றவாளிகள் எமது மக்களை மீண்டும் பீதியான வாழ்வுக்குள் தள்ள முற்படுகின்றனர். அரசியல் சூழலை குழப்ப ஆயுத, அரசியல் பின்னணிகளுடன் அரங்கேறும் இந்த அராஜகங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

இவற்றை முறியடிக்கவும், வெளிச்சத்திற்குக் கொண்டுவரவும் மக்கள் விழிப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

சாவகச்சேரியில் மாணவன் கபிலநாத் கடத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்டமையைத் தொடர்ந்து ஆரம்பித்த இந்தப் பயங்கரக் கொடூரங்கள் இப்பொழுது மிக மோசமாகிவிட்டன. கபிலநாத் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான குற்றவாளிகள் இன்னும் இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. ஆயுத வன்முறை கலாசாரம் மக்களைப் பயம் நிறைந்த வாழ்வுக்குள் தள்ளியுள்ளது.

எனவே, ஆயுத அரசியல் வன்முறை கலாசாரத்தை முடிவுக்கு கொண்டுவர மக்கள் விழிப்புடன் அணிதிரள வேண்டும். - என்று உள்ளது.

# சீரணியில் இன்று தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.28

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயப் பெருந் திருவிழாவில் இன்று தேர்த் திருவிழா இடம்பெறும்.

காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து அருள் காட்சியளிப்பார்.

நாளை முற்பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

(சிறப்பிதழ் - 10ஆம், 15 ஆம் பக்கங்களில்)

# இலங்கையின் கலாசார விழாவுக்குத் தடை; குவைத் மனித உரிமை அமைப்பு கண்டனம்!

கொழும்பு, ஏப்.28

குவைத்தில் இலங்கையர்களின் கலாசார விழா இஸ்லாமிய கடுங்கோட்பாட்டாளர்களால் தடுத்து நிறுத்தப்பட்டமைக்கு அந்த நாட்டு மனித உரிமைகள் சமூகம் நேற்றுக் கடும் கண்டனம் தெரிவித்தது.

குவைத்தில் இலங்கையின் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் வகையில் மாபெரும் கலாசார விழா ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. இவ்விழாவுக்கான அனுமதியை குவைத் நாட்டின் உள்விவகார அமைச்சு வழங்கி இருந்தது.

அவ்விழாவில் குவைத்துக்கான இலங்கைத் தூதுவரும் பங்குபற்றியிருந்தார்.

ஆனால் இஸ்லாமிய விதிமுறைகளை மீறும் வகையிலான நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன என்று குற்றஞ்சாட்டி, இஸ்லாமிய கடுங்கோட்பாட்டாளர்கள் அந்த விழாவை அன்றையதினம் தொடர்ந்து நடத்த விடாமல் தடுத்து நிறுத்தினர்.

ஆனால் குவைத் நாட்டுப் பொலிஸாரோ இஸ்லாமிய விதிமுறை களை மீறும் வகையில் இலங்கையர்களின் விழா அமையவில்லை என்று தெரிவிக்கின்றனர்.

இந்நிலையிலேயே குவைத் நாட்டு மனித உரிமைகள் சமூகம் இலங்கையர்களின் விழா தடுத்து நிறுத்தப்பட்டமைக்கு கடுங் கண்டனம் வெளியிட்டது.

குவைத் நாட்டு உள்விவகார அமைச்சு இது சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று அது கோரியுள்ளது.

# பத்திரிகையாளரை அவமானப்படுத்தும் மேர்வின் சில்வாவுக்கு ஊடக அமைச்சா?

## சர்வதேச அமைப்பு கண்டனம்; உடனே பதவி நீக்கக் கோரிக்கை

கொழும்பு, ஏப்.28

ஊடகத்துறைப் பிரதி அமைச்சராக சர்ச்சைக்குரிய அரசியல்வாதி மேர்வின் சில்வாவை நியமித்துள்ளமைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு, அவரை அப்பதவியிலிருந்து அகற்றுமாறு பிரதமர் டி.எம்.ஜயரட்ணவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வேண்டுமென்றே தீ வைப்பவரை அந்தத் தீயை அணைப்பதற்குப் பொறுப்பாக எவராவது நியமிப்பார்களா என்றும் அந்த அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

இலங்கையில் பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்வதிலும் அவர்களை அவமானப்படுத்துவதிலும் முக்கியமானவராகத் திகழும் மிக மோசமான அரசியல்வாதியான மேர்வின், ஊடகத்துறைப் பிரதியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊடக சுதந்திரத்தின் மீது தாக்குதல்களை மேற்கொண்டவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட சர்ச்சைக்குரிய ஒருவரை நியமித்ததன் மூலம் இலங்கை அரசு தன்னை மீண்டும் வித்தியாசப் படுத்திக் காண்பித்துள்ளது.

இவ்வாறான நியமனங்கள் ஆளும் கட்சியின் தேர்தல் வெற்றிகளைப் பாதித்துள்ளன.

மேலும் தேசிய நல்லிணக்கம், புனர்நிர்மாணம் போன்றவற்றை முன்னெடுக்கும் அரசின் திறன் குறித்தும் தீவிர கேள்விகள் இதன் மூலம் எழுந்துள்ளன.

ஊடக சுதந்திரத்துக்கு எதிராகக் கடும் பகையுணர்வு காணப்படும் தருணத்திலேயே மேர்வின் சில்வாவின் நியமனமும் நிகழ்ந்துள்ளது.

புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வின் போது முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆற்றிய உரையை வெளியிட வேண்டாமென பாதுகாப்புச் செயலாளர் ஊடகங்களுக்குக் கடும் அழுத்தங்களைக் கொடுத்திருந்தார்.

இதன் காரணமாக எந்தத் தொலைக்காட்சியும் அவரது உரையை நேரடி ஒளிபரப்புச் செய்யவில்லை.

பல பத்திரிகைகள் சரத் பொன்சேகாவின் உரையைத் தமது இணையத்தில் வெளியிட்ட போதிலும் தமது அச்சுப்பதிப்பில் அவரது படம் எதனையும் வெளியிடவில்லை.

பாதுகாப்பு அமைச்சிடமிருந்து இவ்வாறான அழுத்தங்கள் வரும் போது பிரசுரிக்காமல் இருப்பதைத் தவிர வேறு வழியில்லை எனத் தெரிவித்த கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவர், அவ்வாறு செய்யாவிடில், பத்திரிகை இழுத்து மூடப்படும் அபாயத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் சொன்னார். (ஒ-சி)

# நாளை

| | |
|---|---|
| சித்திரை 16 | 29.04.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி | : பிரதமை |
| | பி.ப. 05.37வரை |
| நட்சத்திரம் | : விசாகம் |
| | பி.இ. 04.49 வரை |
| சுபநேரம் | : 07.28 - 08.58வரை |
| ராகுகாலம் | : 01.28-02.28 வரை |

# காணாமற்போன ஊடகவியலாளர் குறித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப்.28

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் காணாமற்போன 'லங்கா ஈ - நியூஸ்' இணையத்தளத்தின் ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட என்பவரைக் கண்டுபிடித்துத்தர வேண்டுமென்று கோரித் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவை அடுத்த மாதம் 10ஆம் திகதி வரைக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று ஒத்திவைத்தது.

கடந்த ஜனவரி 24 ஆம் திகதி முதல் காணாமல் போயிருக்கும் இந்த ஊடகவியலாளரைக் கண்டுபிடித்துத் தர மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமெனக் கோரி அவரின் மனைவி இம்மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

அவர் இதில் எதிர்மனுதாரர்களாக பொலிஸ் மா அதிபர், குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர், ஹோமகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கொஸ்வத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரைக் குறிப்பிட்டுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ரஞ்சித் சில்வா முன்னிலையில் இம்மனு நேற்று விசாரணைக்கு வந்தது. குறித்த ஊடகவியலாளர் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால்தான் கைது செய்யப்பட்டார் என்பது உறுதியாகத் தெரியாத நிலையில் அந்த ஊடகவியலளரைக் கண்டுபிடித்துத் தருமாறு யாருக்கு அறிவுறுத்தல்களைப் பிறப்பிக்க முடியும் என்று அந்த நீதிபதி மன்றில் வினவினார்.

இந்நாட்டுப் பிரஜைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது பொலிஸாரின் கடமை என்பதால் காணாமற் போயிருக்கும் ஊடகவியலாளரைக் கண்டுபிடித்துத் தர இந்நீதி மன்றம் பொலிஸாருக்குத் தான் உத்தரவிட வேண்டுமென மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் பதில் வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜகோபுரம் புனர்நிர்மாணம்



புங்குடுதீவு மடத்துவெளி பாலசுப் பிரமணிய தேவஸ்தான இராஜகோபுரப் புனர்நிர்மாணப் பணிகள் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக நிறுத் தப்பட்டு மீளவும் விஹிர்தி வருடம் சித்திரைப் பௌர்ணமி தினமான இன்று (28.04.2010) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் அனைத்து அடியார்களையும் பங்கு கொள்ளுமாறு ஆலயத்திருப்பணிச்சபை வேண்டி நிற்கின்றது.

வி.ஆர்.இராமநாதன்
அறங்காவலர்.

(சி/567036)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 601418641 முதல் 601434896 வரை. சீட்டிழுப்பு இல. 642 திகதி 26-04-2010

வெற்றி எண்கள்

31 39 45 52 T

ஜக்பொட் பரிசு ரூ. 16,943,680/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 16,943,680/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 2,000/= | 22,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 350 | 1,000/= | 350,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 650 | 1,000/= | 650,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14237 | 60/= | 854,220/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6915 | 40/= | 276,600/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 168327 | 20/= | 3,366,540/= |
| | | மொத்தம் ரூ. | 6,319,360/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - A.M. உபுல் நிஷாந்த - கல்கிசை.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - K.M. மேனக சமீர பண்டார - புத்தல.

ரூ.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| களுத்துறை | 601429504-8-16 |
| காலி | 601432125-7-12 |
| கொழும்பு | 601425836-4-45 |
| குருணாகல் | 601418796-8-24 |
| பொலன்னறுவை | 601428063-5-23 |
| நுவரேலியா | 601419931-3-36 |
| அம்பாந்தோட்டை | 601425506-1-11 |
| யாழ்ப்பாணம் | 601431848-1-24 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,719,360/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 17,399,770/=

தொடர் இல. 701375302 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஏப்ரல் 29 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கனத்தை வீதியின் அருகில் சிரிமா மாவத்தை, புளூமெண்டல் வீதி, கொழும்பு - 02
தொ.பே. 23353607

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


## வர்த்தகப் பெண்கள் குழு இன்று யாழ். விஜயம்

கைத்தொழில் மற்றும் வர்த்தக பெண்கள் சம்மேளன அமைப்பின் பிரதிநிதிகள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

பெண்களை முற்று முழுதாகக் கொண்ட இந்த அமைப்பின் பிரதிநிதிகள் மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்திக்கவிருக்கின்றனர்.

'சித்தாலேப' நிறுவனத்தின் பணிப்பாளர் வித்தியானி ஹெற்றிக் கொட தலைமையில் வரும் இக்குழுவினர் சிறு தொழில்களை ஆரம்பிக்கும் வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வர். (ஓ-1)

## சாவகச்சேரி நகருக்கு 'கேபிள்' தொலைபேசி

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் 'ரெலிக்கொம்' நிறுவனத்தினர் கேபிள் தொலைபேசி இணைப்புகளை வழங்கி வருகின்றனர்.

முதல் கட்டமாக நகர்ப்பகுதியில் உள்ள அரச திணைக்கள அலுவலகங்கள், வங்கிகள் போன்றவற்றுக்கு தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையோருக்கும் இந்த தொலைபேசி வசதி வழங்க ஏற்பாடாகியுள்ளது.

புதிதாக வழங்கப்படும் தொலைபேசி இணைப்புக்களுக்கு 021 227 0000 என இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.


## இந்திய கலாசார பண்பாட்டுக் கழகம்

ICCR

பெருமையுடன் வழங்கும்

மஹாகவி காளிதாஸின் சிறப்புமிகு காவியம்

# அபிக்ஞான சகுந்தலம்

நாட்டிய நாடகம் வழங்குபவர்கள்: அரு ஸ்ரீ கலையகம்



காதல், அவமானம்,
அவநம்பிக்கை,
மனஉறுதி,
இனிய மறு இணைப்பு,
இணைந்த
ஒரு காதல் காவியம்

தயாரிப்பு நெறியாள்கை: கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன்
மே 5 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு

வீரசிங்கம் மண்டபம்,
12 கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

அனுமதி இலவசம்



ஊடக அனுசரணை :

சக்தி Shakthi TV

Shakthi சக்தி FM


## தவறிவிட்டது

சரசாலை தெற்கு, சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த மு.பரஞ்சோதி என்பவரது தேசிய அடையாள அட்டை (651072085V) மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

லட்சுமி வெல்டிங் கராஜ்,
கண்டி வீதி, சாவகச்சேரி.
T.P. 0777293441

## அழியா நினைவில் ஆண்டுகள் எட்டு....



### அமரர் வைரவி சுபாஸ்

அன்னை மடியில்
24*10*1950

அரக்கர் அழிப்பில்
26*05*2002

திதி: சித்திரா பௌர்ணமி

எங்கள் குல விளக்கே
குடும்பத்தொளிச் சுடரே
ஆலயம் சென்ற உம்மை
அரக்கர்கள் அழித்து இன்றுடன்
ஆண்டுகள் எட்டு ஆனதுவே ஐயா,
ஆலயம் திறந்தின்று திருவிழா நடக்கிறது
இனி நீதி கிடைக்கும் அந்த நீசர்கள் அழிவர்,
நிம்மதியாய்ச் சாந்தி கொள்...

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. (97372) குடும்பத்தினர்.

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு: 08.01.1975
அநியாய அழிப்பு: 28.04.2008

### அமரர் தருமலிங்கம் சிவநேசன் (குட்டி)

28.04.2010

அன்புத் தெய்வமே!
தங்கள் அழகுவதனம் அழிந்து ஆண்டுகள் இரண்டாகிவிட்டாலும்
தங்களோடு நாம் வாழ்ந்த காலங்கள் இன்றும் பசுமையாய்
எம்நெஞ்சங்களில் இனிக்கிறதே!
தந்தைக்கு நல் மகனாய், மனைவிக்கு இனிய கணவனாய்
பாசமுள்ள உடன்பிறப்பாய், நல்ல நண்பனாய், பண்பாளனாய்
ஒரு ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு ஒப்பானவராய் வாழ்ந்தீர்
சொற்ப காலங்கள் அவனியில் வாழ்ந்தாலும் செல்வனே
சீரிய வாழ்வு கொண்டீர்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தமையால் அன்றோ
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டீரோ
ஈனர்கள் வாழும் பொல்லாத உலகில் நல் மனிதர்க்கு
எது இடம் என்பது போல் கணப்பொழுதில் எமைவிட்டு மறைந்தீரோ!
போர் மேகம் சற்றுவிலகி சுதந்திர ஒளிக்கீற்றலுக்கு ஏங்குது
எம் இனம் - அது எவ்வாறாயினும் எமக்கு
வாழ்வில் விடியல் எங்கே? வசந்தம் எங்கே?
எமக்கு நீரில்லாத வாழ்வு நீர் இல்லாத நிலத்துக்கும்
உப்பில்லாத உணவுக்கும் ஒப்பானதாகும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உம் நினைவுகளுடன்:
அன்பு மனைவி சி.மதனிகா
அன்புத் தந்தை தருமலிங்கம்

பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (97364)


முகாமைத்துவ உதவியாளர் போட்டிப்பரீட்சை வழிகாட்டி
பிரபல புத்தக நிலையங்களில் விற்பனையாகின்றன.
தொகுப்பு: த.தவசேகர்


## உள நெகிழ் கண்ணீர் அஞ்சலி



எமது மன்றின் தலைவர் கௌரவ மல்லாகம் மாவட்ட நீதிபதி க. அரியநாயகம் அவர்களின் அன்புத் தந்தையார்

### மார்க்கண்டு கந்தையா

அவர்கள் இயற்கை எய்திய செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைகிறோம்.
அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாருக்கு எமது மனநெகிழ் அஞ்சலிகளை உரித்தாக்குகிறோம்.

பதிவாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.
மாவட்ட / நீதிவான் நீதிமன்றம், ஆரம்ப நீதிமன்றம்,
மல்லாகம்.

(97761)

## கண்ணீர் அஞ்சலி




கௌரவ மல்லாகம், மாவட்ட நீதிபதி
க.அரியநாயகம் அவர்களின்
அன்புத் தந்தையார்

### மார்க்கண்டு கந்தையா


அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


அன்னாரின் துயரில் பங்குகொள்ளும்
சிறைச்சாலை அத்தியட்சகரும்,
உத்தியோகத்தர்களும்
[illegible] சிறைச்சாலை,
யாழ்ப்பாணம். (97380)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் ஆறுமுகப் பெருமான் தேருக்கு எழுந்தருளுவதை முதலாவது படத்திலும் பக்தர்கள் புடை சூழ சுவாமி தேரில் ஆரோகணித்து வீதி வலம் வருவதை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் பக்தர்கள் தூக்குக் காவடி எடுத்து நேர்த்திக்கடன்களை நிறைவு செய்வதை நான்காவது படத்திலும் அடியார்கள் சிதறு தேங்காய் அடித்து வழிபாட்டில் ஈடுபடுவதை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள் : நந்தன், குமரசிறி)

கடந்த கால போர் அனர்த்தங்களினால்

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 960 சிறுவர்கள் பெற்றோரை இழந்துள்ளனர்

யாழ்ப்பாணம்,ஏப்.28

கிளிநொச்சி - முல்லைத்தீவு மாட்டங்களில் கடந்தகால போர் அனர்த்தங்களினால் 960 சிறுவர்கள் தாய், தந்தையரை இழந்துள்ளதாகக் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

வடக்கு மாகாண பொது நிர்வாக பிரதிப் பிரதம செயலாளரும் கிளிநொச்சி மாதவ ஆச்சிரம சைவச் சிறுவர் இல்ல தலைவருமான தி.இராசநாயகம் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்தகாலங்களில் இடம்பெற்ற போர் அனர்த்தத்தினால் சிறுவர்கள் அனாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

960 சிறுவர்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர். முதற்கட்டமாக கிளிநொச்சி ஜெயந்தி நகரில் அமைக்கப்பட்டுவரும் மாதவ ஆச்சிரம சைவச் சிறுவர் மகளிர் இல்லத்தில் தாய் - தந்தையரை இழந்த 100 பெண்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இவ்வாறான சிறுவர்களைச் சேர்க்க விரும்புவோர் கிராம அலுவலர், நன்னடத்தை அதிகாரி மற்றும் உதவி அரசாங்க அதிபர் ஆகியோரின் சிபார்சினைப் பெற்று ஜெயந்தி நகரில் அமைக்கப்பட்டுள்ள மாதவ ஆச்சிரம பெண்கள் சிறுவர் இல்லத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

கடந்தகால போர் அனர்த்தங்களினால் மாதவ ஆச்சிரம் ஆண் - பெண் சிறுவர் இல்லங்கள் முற்றாக அழிந்துள்ளன. இதனால் 58 மில்லியன் ரூபா முற்றாக அழிவு ஏற்பட்டுள்ளது.

மேற்படி அழிவடைந்த கட்டடங்களை மீளப் புனரமைக்க வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் புலம்பெயர்ந்த தமிழ் உறவுகளும் நிதி உதவிகளை வழங்கி வருகின்றனர். விரைவில் மாதவ ஆச்சிரம சைவச் சிறுவர், ஆண்கள் இல்லம் திறக்கப்பட்டு ஆண்களும் சேர்த்துக் கொள்ளவுள்ளனர் - என்றார்.

இதேவேளை, மாதவ ஆச்சிரம சைவச் சிறுவர் மகளிர் இல்லத்தில் ஏற்கனவே வாழ்ந்துவந்தவர்கள் எந்தப் பதிவினையும் மேற்கொள்ளாமல் நேரடியாக ஆச்சிரமத்தில் வந்துசேரலாம் எனவும் ஆச்சிரம தலைவர் தி.இராசநாயம் தெரிவித்துள்ளார்.

ஏனையவர்களை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (50)

## தொடர் சொற்பொழிவு

வடமராட்சி,ஏப்.28

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மகாபாரதம் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

பண்டிதர் சைவப்புலவர் பொன்.சுகந்தன் இந்தச் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார். (204-236)

## சித்திரா பூரணை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.28

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் இன்று புதன்கிழமை சித்திரா பூரணை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

வில்லூன்றி விநாயகராலயத்தில் அதிகாலை விசேட அபிஷே கம், பூசைகளும் இடம்பெற்று காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் காலை 8 மணிக்கு வில்லூன்றி புனிதத் தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்ற பின் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தர்ம பரிபாலன சபை அறிவித்துள்ளது. (50-204)

## தீவகப் பகுதியில் மயிர்கொட்டிகளின் தாக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

தீவகப் பகுதியில் உள்ள பயன்தரும் மரங்கள் மற்றும் பயிர்வகைகளை மயிர்க்கொட்டிகள் தாக்கி வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

மயிர்க்கொட்டிகளின் தாக்கம் ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நடைபெற்றுவருவதனால் இவைகளை முற்றாக அழித்தொழிப்பதற்கு சுகாதாரப் பகுதியினர் தகுந்த நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டியது அவசியம் என தீவகப்பகுதி மக்களும் விவசாயிகளும் தெரிவித்தனர்.

மயிர்க்கொட்டிகளின் தாக்கம் காரைநகர், புங்குடுதீவு, ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-300)

## தற்செயல் நிவாரணம் பெறுவோரின் காசோலைகள் வந்து சேர்ந்தன

நவாலி,ஏப்.28

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் தற்செயல் நிவாரணம் பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களுடைய கொடுப்பனவுக்கான காசோலைகள் வந்து சேர்ந்துள்ளன.

பின்வரும் பெயர், முகவரியுடையவர்களை உடன் பிரதேச செயலகத்திற்கு வந்து இவற்றைப் பெற்றுச் செல்லுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார்.

ஓ.நவமலர்- வடலியடைப்பு, ஓ.செபமாலை - சென்.மேரிஸ் வீதி,பண்டத்தரிப்பு, மோ.குணவதனி - காயா வீதி, வடலியடைப்பு, க.மகேஸ்வரி-பாடசாலை வீதி, மானிப்பாய், த.வசந்தமலர் - முல்லையடி வீதி, பண்டத்தரிப்பு. (50-100)

## உலகப் புவி தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுக் கண்காட்சி நாளை

நல்லூர்,ஏப்.28

உலக புவிதினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலகம் நடத்தும் விழிப்புணர்வுக் கண்காட்சியும், கருத்தரங்கும் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். நாவலர் வீதி தியாகிகள் அறக்கொடை நிறுவனத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேலதிக அரசஅதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் என்.பிரதீபராஜாவும், கௌரவ விருந்தினராக தியாகிகள் அறக்கொடை நிறுவனப் பணிப்பாளர் செ.கமலநாதனும் கலந்துகொள்வார்கள்.

உலக புவி தினத்தையொட்டி நல்லூர் செயலகப்பிரிவு மட்டத்தில் நடத்தப்பட்ட விழிப்புணர்வுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவிருக்கின்றன. (க - 111)

## கோப்பாய் பாடசாலைகளின் கோலப் போட்டி

கோப்பாய்,ஏப் 28

கோப்பாய் கோட்ட பாடசாலைகளின் கோலப் போட்டிகள் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தரம் 1,2 வகுப்புகளுக்கு கோப்பாய் நாவலர் பாடசாலையிலும், தரம் 3,4,5 வகுப்புகளுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் காலை 9 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகி நடை[illegible] கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சித்திரவடிவேல் அறிவித்துள்ளார். (50-72)

## மணல் அனுமதிப் பத்திர திகதிகளில் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

நல்லூர் பிரதேச செயலகத்தால் மணல் பெறுவதற்கென வழங்க்ப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் முற்திகதியிடப்படவிருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் மணல் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களே இவ்வாறு முற் திகதியிடப்படவிருக்கின்றன. எனவே ஏற்கனவே மணல் அனுமதிப்பத்திரங்கள் பெற்றவர்கள் நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளருடன் தொடர்புகொண்டு தமது அனுமதிப் பத்திரங்களில் மாற்றங் களைச் செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (க)

## கராத்தே பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.மாவட்ட கராத்தே சங்கத்தின் அனுசரணையுடன் இலங்கை கராத்தே சம்மேளன ஆசிரியர்களினால் இன்று புதன் கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை யாழ்.மத்திய கல்லூரியில் கராத்தே பயிற்சிப் பாசறை நடத்தப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட கராத்தே சங்கத்தில் உள்ள அனைத்துக் கழகங்களையும் இந்தப் பயிற்சி பாசறையில் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட கராத்தே சங்கத்தின் செயலாளர் சென்[illegible].விஜயபாஸ்கர் கேட்டுள்ளார். (50-23)

## தேர்த் திருவிழாவில் தங்க நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய தேர்த்திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்களின் பெறுமதியான தங்கநகைகள் திருடர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன.

பக்தர்கள் கூட்டத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் ஒரு தாலிக்கொடியும் சங்கிலியும் திருட்டுப் போயுள்ளதாகப் பக்தர்களால் ஆலய நிர்வாகத்திடம் முறையிடப்பட்டுள்ளது. (50-16)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி,ஏப்28

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகையின் சித்திரை மாத இதழ் வெளியீட்டுவிழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்சஞ்சிகையின் வெளியீட்டுரையை சிரேஷ்ட ஆயுள்வேத வைத்தியர் வி.பாலகிருஸ்ணனும், மதிப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் திருமதி தவமலர் சுந்தரராசனும் நிகழ்த்துவார்கள். (50-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திய அரியதொரு புற்றுநோய்க் கண்காட்சி

புற்றுநோய் என்பது உடற் கலங்கள் உடலின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் தன்னிச்சையாக அசாதாரண முறையில் பெருக்கமடைவதால் ஏற்படும் வளர்ச்சிகள் (கட்டிகள்) எனக் கொள்ளலாம் இது உடலின் எப் பகுதியிலும் ஏற்படலாம். இலங்கையில் புற்றுநோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. வருடந்தோறும் சுமார் 12 ஆயிரம் புதிய புற்று நோயாளர்கள் இனங்காணப்படுகின்றனர். இவர்களில் பலர் நோய் முற்றிய பிந்திய நிலையிலேயே வைத்தியசாலைகளை நாடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று இலங்கையிலே மக்கள் உயிரிழக்கும் காரணிகளுள் புற்று நோயானது ஐந்தாவது இடத்தை வகிக்கின்றது. இது முதலாவது இடத்துக்கு முன்னேறினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இந்த விவரங்கள் யாவும் யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவும், மருதனார் மடம் 'கேன்' (Canc) புற்று நோய்க் காப்பகமும் இணைந்து நேற்று யாழ்.இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத் தில் நடத்திய புற்றுநோய் தொடர்பான விழிப்பு ணர்வுக் கண்காட்சியில் பெறப்பட்டவை.

இந்தக் கண்காட்சியினை மிகவும் நேர்த்தியுடன் ஒழுங்கமைத்து, மக்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் அமைவதற்கு மூலகாரணமாக இருந்த யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்று நோய் சிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி என்.ஜெயகுமார் பாராட்டுக்குரியவர். அவரை கண்காட்சியில் வைத்து நேரில் சந்தித்து உரையாடும் போது புற்றுநோய் தொடர்பான பல புதிய தகவல்கள்

தொகுப்பு
- ராஜராஜன் -

எமக்குக் கிடைத்தன. அவர் கூறுகையில்; புற்று நோயாளர்கள் நோய் முற்றிய, பிந்திய நிலையிலேயே வைத்தியசாலைகளை நாடுகின்றனர். இதனால் இவர்களுக்கு 'குணமாக்கல் முறையிலான சிகிச்சையை' எம்மால் வழங்க முடியாதுள்ளது. நோயை ஓரளவு கட்டுப்பாட்டில் கொண்டு வரலாம். ஆனால் பூரணமாகக் குணமாக்க இயலாது. நோயின் ஆரம்ப நிலையில் இவர்கள் வருவார்களாயின் பூரணமாகக் குணமாக்க முடியும் - இதில் முக்கிய விடயமொன்றையும் நாம் கவனிக்க வேண்டும் - ஆரம்ப நிலையில் உள்ள நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் போது அவர்களுக்குப் பக்க விளைவுகள் ஏற்படாத வகையில் சிகிச்சை முறைகள்



அமையும். ஆனால் முற்றிய நோயாளர்கள் சிகிச்சையின் பின் பக்க விளைவுகளையும் அனுபவிக்க நேரிடும்.

## இனியும் பாராமுகம் காட்டினால் விளைவுகள் விபரீதத்தில் முடியும்

இலங்கையில் ஆண்களில் ஏற்படும் புற்று நோய்களில் வாய், தொண்டைப் புற்றுநோயே முதலிடம் வகிக்கின்றது. இதற்கு முக்கிய காரணிகளாக தொடர்ச்சியான வெற்றிலை, புகையிலை, மதுபான பாவனைகளையும், அதிக உறைப்பு உண்பதையும் குறிப்பிடலாம். அதேபோன்று அநேகமான பெண்கள் மார்பகப் புற்றுநோயாலேயே பீடிக்கப்பட்டுள்ளனர் - இதைவிட கருப்பைக்கழுத்துப் புற்று நோயையும் குறிப்பிடலாம். இதற்குப் பெண்கள் அதிகளவு கொழுப்புப் பதார்த்தங்களை உண்ணுதல், குழந்தைகளுக்குப் பால் ஊட்டாமை, பரம்பரை ஆகியன காரணிகளாக உள்ளன.

இன்று யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் மாசுபட்டுள்ளதாகப் பலரும் கூறுகின்றனர். இதுவும் புற்றுநோய் ஏற்படுவதற்கு ஒரு காரணியாக உள்ளது - இப்பிரதேச விவசாயிகளின் அதீத உரப்பாவனை, மல கூடங்களின் கழிவு நீர் நிலத்தடிநீரில் கலத்தல் போன்றவற்றால் நிலத்தடி நீரில் நைற்றேட்டின் அளவு அதிகரித்துள்ளமையால் இதுவும் புற்றுநோய் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது மிகவும் கவலை தரும் செய்தியாகும் - இதைவிட மரக்கறிகளில் தோன்றும் கிருமிகளை அழிப்பதற்காக எவ்வித கட்டுப்பாடுமின்றி கிருமி நாசினிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தக் கிருமி நாசினிகள் புற்று நோயைத் தோற்றுவிக்கின்றன என்பதை இவற்றைப் பயன்படுத்தும் விவசாயிகளோ அல்லது பொது மக்களோ உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை-என்றார்.



Dr.ஜெயக்குமார்

இந்தக் கண்காட்சி குமாரசாமி மண்டபத்தின் மேல்மாடியிலுள்ள ஒரு மண்டபத்தில் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. தொண்டை, களம், நுரையீரல், இரைப்பை, குடல், சிறுநீர்ப்பை, தோல், மார்பகம், கருப்பைக்கழுத்து, சூலகம் என்பனவற்றில் புற்றுநோய் ஏற்படுவது தொடர்பான விளக்கங்கள் ஒவ்வொரு பிரிவிலும் இருந்தவர்களால் தெளிவாக வழங்கப்பட்டன. இது மிகவும் உபயோகமானதாக இருந்தது.

ஏராளமான பாடசாலை மாணவ மாணவிகள் இதனைப் பார்வையிட்டு, பயனடைந்து செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

இந்தக் கண்காட்சி மூலம் புற்றுநோய் தொடர்பாகக் சேகரித்த மேலதிக தகவல்கள் சில;

* புற்றுநோயின் ஆரம்பத்தில் அதன் அறிகுறிகளைக் காண முடியாது.
* மது, சூடான பானங்கள், பூஞ்சணம் பிடித்த உணவுகள், கருகிய உணவு, அதிக உப்பு, உரவகைகள், கிருமிநாசினி போன்றன புற்று நோயைத் தரவல்லன.
* புற்றுநோயைக் குணப்படுத்துவதற்காக கதிர்வீச்சு சிகிச்சை, சத்திரசிகிச்சை, மருந்து மூல மான சிகிச்சை என்பன வழங்கப்படுகின்றன.
* வலிகாமம் பகுதியில் அதிக விவசாய நடவடிக்கைகள் காரணமாக நீர், காற்று என்பன மோசமாகப் பாதிப்படைந்து காணப்படுகின்றன.
* அதீத கிருமி நாசினிகளின் பாவனை காரணமாக மரக்கறி உணவுகள் ஆபத்தானவையாக மாறியுள்ளன.
* மார்பு, இரத்தம், குடல் என்பனவற்றில் புற்றுநோய் தோன்றுவதற்கு பரம்பரையும் ஒருகாரணமாகும்.





## கண்காட்சியைப் பார்வையிட வந்த மாணவர்கள் சிலரின் கருத்துக்கள்...



**செல்வன் சி.கிருசாந்த் - வயது 17, யாழ்.இந்துக் கல்லூரி**

நான் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்கின்ற போதிலும், புற்று நோய் தொடர்பான பல தெரியாத விடயங்களை இந்தக் கண் காட்சியின் மூலம் அறிய முடிந்தது. இவற்றை நான் மற்ற வர்களுக்கும் கூறுவேன். இதனால் [illegible] தொடர்பாக விழிப்புணர்வு பெற முடி[illegible] மொத்தத்தில் இந்தக் கண்காட்சி மிகவும் பயனுள்ளதாகவே உள்ளது.



**செல்வி வி. தசாங்கினி-வயது 17, யாழ். இந்து மகளிர் கல்லூரி**

நான் உயிரியல் பிரிவில் கல்வி கற்றுக் கொண்டிருக் கின்றேன். இந்தக் கண்காட்சியின் மூலம் புற்றுநோய் தொடர்பாக பல புதிய தகவல்களை என்னால் பெறமுடிந்தது. இங்கே நான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் ஏனையோ ருக்கும் எடுத்துக்கூறி விழிப்புணர்வை ஏற்படுத்த முடியுமென நம்புகின்றேன். மேலும் எனது கல்விக்கும் இன்றைய கண் காட்சி உபயோகமானதாக அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியிலிருந்து யாழ்.மக்கள் மீள கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஓர் அரிய சந்தர்ப்பம்

## திறப்பு விழாவில் தலைவர் நிகால் பொன்சேகா

யாழ்ப்பாணம்,ஏப்.28

நீண்ட காலமாக வடமாகாண மக்கள் அனுபவித்துவரும் துன்பங்கள், துயரங்கள், பொருளாதார நெருக்கடிகள் ஆகியவற்றிலிருந்து அவர்கள் மீண்டெழுவதற்குக் கொழும்புப் பங்குச்சந்தை ஓர் அரிய சந்தர்ப்பம். இதனை அவர்கள் உரிய முறையில் வரவேற்பார்களென நாம் நம்புகிறோம்.



இவ்வாறு தெரிவித்தார் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தலைவர் நிகால் பொன்சேகா.

கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் ஐந்தாவது கிளையை நேற்று யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள கட்டடத்தில் திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாம் இப்பிரதேசத்துக்குப் புதியவர்களல்ல. கடந்த 2004ஆம் ஆண்டளவில் இதே கட்டடத்தில் நான்கு பங்குத்தரகர்களுடன் எமது சேவையினை யாழ்ப்பாண முதலீட்டாளர்களுக்கு வழங்கியிருந்தோம்.

அன்றைய காலகட்டத்தில் இருந்து வந்த அமைதி இன்மைச் சூழல் தொடர்ந்து இயங்குவதற்குக் கைகொடுக்கவில்லை. இதனால் எமது கிளை நடவடிக்கைகள் 2007ஆம் ஆண்டில் அதனை நாம் இடைநிறுத்த வேண்டி ஏற்பட்டது. தற்போது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இயல்பு நிலையினைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற திடசங்கற்பத்தில் இப்பிராந்தியத்தில் அமைதி தோற்றுவிக்கப்பட்டது.


வைபவரீதியான மீள்திறக்கும் இன்றைய நிகழ்வு மேலும் இயல்பு வாழ்க்கையைக் கோடிட்டுக் காட்டும் ஒரு நிகழ்வாக அமையும் என்று கூறலாம்.


இன்றைய அமைதிச் சூழலின் - சமாதானத்தின் லாபம் மற்றைய பகுதிகளில் கிடைப் பது போன்று, வடமாகாண மக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்பதில் அரசாங்கமும் நாமும் ஆவலுடன் இருக்கின்றோம்.

உலகளாவிய ரீதியில் பங்கு முதலீடு முக்கியமான முதலீட்டு கருவியாக, நீண்ட காலத்தில் மூலதன லாபத்தினை அதிகரிக்கும் விடயமாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

உண்மையில் கொழும்பு பங்குச் சந்தை 2009 ஆம் ஆண்டளவில் பாரிய சாதனைகளை நிலைநாட்டி இருக்கின்றது. சந்தைச் சுட்டெண்களும், புரள்வுகளும் மூலதனமாக்கலும் இரட்டிப்பாகியுள்ளன. சந்தைச் சுட்டெண்ணின் வளர்ச்சி 20 சதவீத அதிகரிப்பினைக் காட்டியுள்ளதுடன் ஆசியாவில் 3 ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.

தற்போது கொழும்பு பங்குசந்தையில் பட்டியலிடப்பட்ட 230 கம்பனிகள் இருக்கின்றன. வடபிராந்தியத்திலிருந்தும் எதிர்காலத்தில் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் உருவாகும் என்று பலமாக நம்புகின்றோம். அது நிறைவேற நீண்ட காலம் எடுக்கும் என்று நான் நம்பவில்லை - என்றார். (50-16)





நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது சுவாமி தேரில் ஆரோகணித்து வீதி வலம்வருவதையும் பக்தர்கள் பூரண கும்பங்கள் வைத்து வழிபடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : கரன்)

# கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் ஐந்தாவது கிளை யாழ்ப்பாணத்தில்

## அதன் தலைவர் திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம்,ஏப்.28

கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் ஐந்தாவது கிளை நேற்று யாழ். ஆஸ்பத்திரி வீதியில் யாழ்.பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள 398/1 ஆம் இலக்கக் கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தலைவர் ஏ.நிகால் பொன்சேகா இக்கிளையைத் திறந்து வைத்தார். இந்தக் கிளையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையுடன் இணைந்து யாழ்ப்பாண மக்களுக்கு சேவையாற்றவென ஆறு பங்குத் தரகர் நிறுவனங்கள் இணையவுள்ளன.

அதில் முதற்கட்டமாக எஸ்.கே.எம். லங்கா ஹோல்டிங்ஸ் பிறைவேற் லிமிட்டட், பாட்லீற் மலோரி ஸ்ரொக், த றோக்கர்ஸ் பிறைவேற் லிமிட்டட், ஆஷா பீபல் செக்கூரிட்டீஸ், கெபிற்றல் ட்ரஸ்ட் செக்கூரிட்டீஸ் ஆகிய பங்குத் தரகு நிறுவனங்கள் நேற்றுத் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்தன.

இந்த நிகழ்வில் இலங்கைப் பிணைகள் பரிமாற்று ஆணைக்குழுவின் தலைவர் உதயசிறி காரிய வாசம், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் அரச, தனியார் நிறுவனங்களின் பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.


இந்த நிகழ்வில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தலைவர் ஏ.நிகால் பொன்சேகா, இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழுத் தலைவர் உதயசிறி காரியவாசம் ஆகியோர் உரையாற்றினர்.

(50-16-224)

# நிவாரணம் வழங்கப்படுகிறது

கைதடி,ஏப்.28

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கான ஏப்ரல் மாதத்திற்கான நிவாரணப் பொருள்கள் கடந்த ஞாயிறு முதல் தென்மராட்சிமேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் வழங்கப்பட்டு வருவதாகவும் மேற்படி நிவாரணத்தை உரிய காலத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் சங்கத்தின் தலைவர் ரா. திருச்செந்தூர்நாதன் கேட்டுள்ளார். (50-288)




# புதிய பதில் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பிரதிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக டாக்டர் செல்வி சி.சிவராணி கடந்த 5ஆம் திகதி தொடக்கம் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். இவர் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியாக முன்னர் கடமையாற்றியவராவார். (50-300)

# 6 மாணவர்களும் 16 ஆசிரியர்களும்; கைதடியில் இப்படியும் ஒரு பாடசாலை

நாவற்குழி,ஏப்.28

கைதடி அரச முதியோர் இல்லத்திற்கு அருகில் இயங்கும் வன்னி இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலைய மாணவர்களுக்கான பாடசாலையே தற்போது 6 மாணவர்களுடனும், 16 ஆசிரியர்களுடனும் இயங்கி வருகின்றது.

சென்ற வருடம் ஏப்ரல் மாதம் கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்துடன் இணைந்ததாக 702 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையே தற்போது இவ்விதம் இயங்குகின்றது.

நலன்புரி நிலைய மக்களில் மிகப் பெரும்பாலானோர் மீளக்குடியமரச் சென்று விட்டதே மாணவரின் இக் குறைவிற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

தற்போதுள்ள 6 மாணவர்களில் ஒருவர் க.பொ.த சாதாரண தரத்திலும், மிகுதி 5 பேரும் உயர்தரத்திலும் கற்கின்றனர். ஏனைய வகுப்புக்களுக்கு மாணவர்கள் எவருமே இல்லை.

தற்போது இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் வன்னியிலிருந்து மக்கள் மீளக் குடியேறாத பிரதேசப் பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள். ஆதலால் அவர்கள் இங்கேயே தொடர்ந்தும் கடமையாற்ற வேண்டியுள்ளது.(50-121)

# காணாமல் போன மணல் திட்டுக்கள்

நாவற்குழி,ஏப்.28

கைதடி வடக்கு நவபுரத்திலிருந்து மட்டுவில் வடக்குச் செல்லும் மண் பாதையில் மட்டுவில் பக்கமாகவுள்ள வீதியில் உள்ள மணல் திட்டுக்கள் மிக அண்மையில் காணாமல் போயுள்ளன.

மணல் திருடர்கள் இவற்றை மிகவும் தந்திரமாக களவாடி விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதம் நாடாளுமன்றத் தேர்தல் கடமைகளின் நிமித்தம் பெருமளவு பொலிஸார் ஏப்ரல் 6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளில் ஈடுபடுத்தப்பட்ட தருணம் பார்த்து இம்மணல் திருட்டு கனகச்சிதமாக அரங்கேறியுள்ளது.

கைத்தொலைபேசிகள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றின் வழித்துணையும் உழவு இயந்திரம் மூலம் மணல் ஏற்ற உதவியுள்ளன.

இவ்வீதி முன்பு 8 அடி அகலப் பாதையாகவே இருந்தது. தற்போது பெரிய லொறி போகக் கூடியளவு அகலப் பாதையாகி விட்டது. கட்டட நிர்மாணத்திற்கு மணல் கிடைப்பதன் கடினத்தன்மை உள்ளூர் மணல் வளங்கள் அபகரிக்கப்பட்டு சூழல் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றது. (50-121)

# 4 ஆயிரத்து 85பேர் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில்

வடமராட்சி,ஏப்.28

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் பருத்தித்துறை, வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் இதுவரை நாலாயிரத்து 85 பேர் இணைந்துள்ளனர்.

இந்த ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்தோரில் 14 பயனாளிகள் தற்போது ஓய்வூதியம் பெற்று வருவதாக பிரதேச செயலக சமூக சேவைப் பகுதியினர் தெரிவித்தனர்.

இதேவேளை சமூக பாதுகாப்பு சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் பயனாளிகளை இணைத்துக் கொள்வதில் பருத்தித்துறை பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவு கடந்த 2007 ஆம் ஆண்டில் முதலாம் இடத்தையும், 2009 ஆம் ஆண்டு இரண்டாம் இடத்தையும் யாழ். மாவட்டத்தில் பெற்றுக் கொண்டுள்ளது. (50-236)

# மாதாந்த உதவிப் பணம் மீளாய்வுப் பணி

வடமராட்சி,ஏப்.28

பருத்தித்துறை வடமராட்சி பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள் தொடர்பாக மீளாய்வு செய்யும் பணி கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினால் கிராம சேவையாளர்களின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் மீளாய்வுப் பணி கடந்த வாரம் தொண்டைமானாறு தெற்கு, தொண்டைமானாறு வடக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டது.

இப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஏனைய 33 கிராம சேவையாளர் பிரிவுகளில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்கள் தொடர்பாக அடுத்துவரும் கிழமை நாள்களில் மீளாய்வு செய்யப்படவுள்ளது. (50-236)

# முதியோர் கௌரவிப்பு

நாவற்குழி,ஏப்.28

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையம் தனது 54 ஆவது வருட நிறைவு விழாவின் ஓர் அங்கமாக முதியோர் கௌரவிப்பை கடந்த ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடத்தியது.

நிலையத்தலைவர் ப.துபிலனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் நாகேசர் இராஜலிங்கம் கலந்து கொண்டார்.

நிலைய அங்கத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த 85 முதியோர்கள் தலா 2 ஆயிரம் ரூபா பணம் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்விற்குரிய முழு நிதியையும் சனசமூக நிலையத்தின் இங்கிலாந்துக் கிளையினர் அனுப்பிவைத்தமை குறிப்பிடத்தக்கது. (50-121)

# 'அருணலு' மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.28

கொமஷல் வங்கியின் சாவகச்சேரி கிளையில் 'அருணலு' திட்டத்தில் இணைந்து கடந்த ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 30 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வங்கி மண்டபத்தில் நடைபெறும்.

கிளை முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு விருந்தினர்களாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி சியாமளா கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்வர்.

இத்திட்டத்தின் மூலம் இவ்வருடம் 2 லட்சத்து 52 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (50-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IIS CITY CAMPUS

# 14th INSTITUTE DAY and GRADUATION

## எமது வாழ்விற்கு கலங்கரை விளக்காக ஒளிரும் IIS CITY CAMPUS அன்னையின் பாதக்கமலங்களுக்கு இவ்விதழ் சமர்ப்பணம்

இன்று (28.04.2010) யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி "ஜூபிலி" மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் பிரித்தானிய Edexcel நிறுவனத்தின் Higher National Diploma கற்கை நெறியை பூர்த்தி செய்து பட்டங்களைப் பெறும் எமது 10 வது பிரிவு சகோதர, சகோதரிகளை மனதார வாழ்த்துவதோடு இவர்கள் மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று சிறந்த பிரஜைகளாக இம் மண்ணிலே மிளிர எல்லாம் வல்ல இறைவன் ஆசீர்வதிப்பாராக.


V. Jenan
HND in Computing (Software Engineering)


S. Premnath
HND in Computing (Software Engineering)


S. Thibothanan
HND in Computing (Software Engineering)


R.Nevendira
HND in Computing (Software Engineering)


Miss.T.Kiruthika
HND in Computing (Software Engineering)


Miss. J. Gayani
HND in Computing (Software Engineering)


Miss. K. Sajeerani
HND in Computing (Software Engineering)


Miss. S. Tharshiga
HND in Computing (Software Engineering)


Miss. T. Shobana
HND in Computing (Software Engineering)


Miss. V. Sivajini
HND in Computing


Mrs. V. Jalarampai
HND in Computing (Software Engineering)


Miss. R. Kirunanga
HND in Computing (Software Engineering)


Miss. J. Jeyesre
HND in Computing (Software Engineering)

சிறப்பிதழ் தொகுப்பு
மாணவர் மன்றம்
IIS CITY CAMPUS

SUCCESS THROUGH KNOWLEDGE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாக வகுக்கப்படும் தேர்தல் முறைமை குறித்து மலையகப் பிரதிநிதிகள் விழிப்படைய வேண்டும்

## இலங்கைத் தொழிலாளர் முன்னணியின் தலைவர் சதாசிவம் சொல்கிறார்

கண்டி, ஏப்.28

அரசு தேர்தல் முறையில் மாற்றத்தினைக் கொண்டு வருவதற்குத் தயாராகிவரும் நிலையில், புதிய தேர்தல் முறையால் மலையகத்தமிழ் மக்களுக்கு எவ்விதமான பாதகமும் ஏற்படாத வகையில் மலையகத் தமிழ் மக்கள் சார்பான பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்க வேண்டும் - என்று இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவரும் , மத்திய மாகாணசபை உறுப்பினருமான எஸ்.சதாசிவம் தெரிவித்தார்.

தலவாக்கலை வினோ மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசியபோதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தவை வருமாறு:-

தற்போதுள்ள தேர்தல் முறையை மாற்றி தொகுதி ரீதியான தேர்தல் முறை ஒன்றை ஏற்படுத்துவதில் அரசு முனைப்புடன் செயற்படப் போகின்றது.இவ்வாறான சந்தர்ப்பத்தில் இந்தத் தொகுதி ரீதியான தேர்தல் முறையில் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் வகையில் புதிய சீர்திருத்தம் ஏற்படுத்தப்படுவதற்கு மலையகத் தமிழ் மக்கள் சார்பான நாடாளுமன்ற பிரதிநிதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் மலைய கத்தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக உரிய வகையில் சிந்தித்துச் செயற்படாத காரணத்தினால் கண்டி, பதுளை போன்ற மாவட்டங்களில் எமது சமூகம் சார்ந்த நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆனால், இலங்கையில் வாழுகின்ற ஏனைய சமூகத்தினர் உரியவகையில் சிந்தித்து தமது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றிக் கொண்டுள்ளனர்.

ஆனால், மலையகத்தமிழ் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் எதிர்பார்க்கப்பட்டதைப்போல கிடைக்காத காரணத்தால் இன்று பெரும்பான்மைக் கட்சிகள் எமக்கான முக்கியத்துவத்தைக் குறைக்கத் தொடங்கியுள்ளன.

இந்த நிலைமை எதிர்வரும் தேர்தல் சீர்திருத்த முறைமை மூலமாக மேலும் தொடரக் கூடிய நிலைமை ஏற்படப்போவதால் அதைத் தற்போதே உணர்ந்து கொண்டு, புதிய தேர்தல் முறையால் மலையகத் தமிழ் மக்களுக்குப் பாதகம் ஏற்படாதவகையில் நாடாளுமன்றத்தில் ஒற்றுமையாகக் குரல் கொடுப்பதற்கு எமது பிரதிநிதிகள் முன்வரவேண்டும் - என்றார். (ளி)

# ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, ஏப். 28

கட்டுகஸ்தோட்டை மற்றும் உடப்பு வெளிப் பகுதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை பொலிஸார் மீட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

எஸ்.எஸ்.ஜி.87 ரக 5 கைக்குண்டுகள் அடங்கிய இரும்புப் பெட்டியொன்றை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் யடிகலபல மஹதென்ன எனும் காட்டுப் பகுதியிலுள்ள கால்வாய் ஒன்றிலிருந்து சனிக்கிழமை கண்டெடுத்துள்ளனர்.

இதேவேளை, உப்புவெளி பிரதேசத்திலுள்ள காடொன்றுக்குள்ளிலிருந்து பொலிஸார் டி 56 ரக துப்பாக்கி எல், எம்.ஜி. கிரனேற் கைக்குண்டு உள்ளிட்ட சிலவகை ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ளி)

# பொருளாதாரத்தைக் கையில் கொண்டுள்ள சமூகம் தம்மகத்தே என்கின்றது இ.தொ.கா

## பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் கூறுகிறார்

கண்டி, ஏப். 28

இலங்கைப் பொருளாதாரத்தை தம் கைகளில் தாங்கும் தொழிலாளர் குழுமத்தைப் பலமாகக் கொண்டுள்ள இ.தொ.காவை எவரும் சுலபத்தில் புறக்கணித்து விடமுடியாது என்று பொருளாதார அபிவிருத்தி துறையின் துணை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள முத்துசிவலிங்கம் தெரிவித்தார்.

இ.தொ.காவின் பொதுச்செயலாளர் ஆறுமுகன் தொண்டமானின் அமைச்சுப் பதவி விவகாரம் தொடர்பில் கருத்துக் கூறுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆறுமுகம் தொண்டமானுக்கு அமைச்சுப் பதவி வழங்கும் விடயத்தை தமது தரப்பு ஜனாதிபதியிடம் முன்னரே தெரிவித்தது என்றும், அதை அடுத்தே வெள்ளிக்கிழமையன்று தொண்டமானுக்கு அமைச்சர் பதவியளிக்கின்றமை நிறுத்தி வைக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

மலையகம் வாழ் மக்களின் அபிவிருத்திகளுக்கான சில துறைகளை ஒன்றிணைத்து ஒரு அமைச்சு வழங்க அரச தரப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும்:

ஜனாதிபதியை சந்தித்து உரையாடியுள்ள நிலையில் தாங்கள் நம்பிக்கையுடனேயே இருக்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

கடந்த நாடாளுமன்றத்தைவிட தற்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு குறைவான உறுப்பினர்களே இருந்தாலும் தமது பேரம்பேசும் திறன் குறைந்து விடவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பொருளாதாரத்துக்கு முக்கிய ஆதாரமாக இருக்கும் மலையக மக்களை தமது கட்சி சார்ந்துள்ளமையால் அரசு தம்மை ஒதுக்கிவிடமுடியாது என்று தாங்கள் கருதுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மலையகப் பகுதியில் தமது கட்சிக்குப் பலமான ஆதரவு இருக்கின்றதெனவும், அதன் காரணமாக தங்களை யாரும் சுலபமாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நடப்பு நாடாளுமன்றத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்தமைக்கு அரசியல் மாற்றங்கள் மற்றும் மக்கள் மாறி மாறி வாக்களித்தமையே காரணம் என்று கூறிய அவர், அது தமது அடித்தளத்தைப் பாதிக்காது என்றும் தெரிவித்தார். (ளி)




# இரத்தினபுரி பாடசாலையில் கல்வி நடவடிக்கை பாதிப்பு

இரத்தினபுரி,ஏப். 28

இரத்தினபுரி- எம்பிலிப்பிட்டி தேசியப் பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் நேற்று முன்தினம் பாதிக்கப்பட்டன்.

எம்பிலிபிட்டி தேசியப் பாடசாலையில் ஆசிரியர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையை அடுத்தே பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

மாணவர்களின் பெற்றோர் குழுவினரால் பாடசாலை அதிபர் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஆசிரியர்கள் பகிஷ்கரிப்பை மேற்கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் விடயம் தொடர்பில் பாடசாலையின் அதிபர் பக்கச்சார்பாக செயற்பட்டார் எனக்கூறி கடந்த வெள்ளிக்கிழமை பெற்றோர் சிலரால் தாக்கப்பட்டார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடடினயாக கைது செய்யுமாறு ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ளி)

# சாமிமலை ஒயா ஆற்றில் கழிவுகள் கொட்டுவதற்கு பிரதேசவாசிகள் ஆட்சேபம்

மஸ்கெலியா, ஏப். 28

சாமிமலை நகரில் சேகரிக்கப்படும் குப்பைகள் அனைத்தும் சாமிமலை ஒயா ஆற்றில் கொட்டப்படுவது குறித்து நகரவாசிகளும், பொதுமக்களும் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கொட்டப்படும் குப்பைகளும், கழிவுப்பொருட்களும் மழைக்காலங்களில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு மவுசா கலை நீர்த்தேக்கத்தில் சென்று சேர்வதால் பெரும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், அங்குள்ள விகாரைக்கும், காடைத்தொகுதிக்கும் உள்ள இடைவெளியிலும் குப்பைகள் கொட்டப்படுகின்றன.

இவ்வாறு குப்பைகள் கொட்டப்படுவதால் அதற்கு அருகாமையிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் பயணிகள் தரித்து நிற்க முடியாது துர்நாற்றம் வீசுகின்றது.

எனவே, இவ்வாறு குப்பைகள் கொட்டப் படுவதை உடன் நிறுத்தவேண்டும் என்றும், இது சம்பந்தமாக அம்பேகமுவ பிரதேசசபை உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் பொதுமக்கள் கோருகின்றனர். (ளி)

# கண்டி உறுப்பினர்களின் விசாரணைகள் ஆரம்பம்

கண்டி,ஏப்.28

பொதுத்தேர்தலின் போது கண்டி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு உறுப்பினர்களின் ஒழுங்கு மீறல்கள் பற்றி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஸ்ரீலங்கா சுந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழு ஒழுக்காற்று விசாரணைக் குழுவை நியமித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை ( 24 ஆம் திகதி) அலரிமாளிகையில் கட்சியின் நிறைவேற்றுக்குழு நியமிக்கப்பட்டது.

மக்கள் வங்கித் தலைவர் டபிள்யூ. கருணா நாயக்கவின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இக்குழுவில் ஏனைய அங்கத்தினர்களாக சட்டத்தரணிகளான சாலியமெத்யூ. டி.பி. மெண்டிஸ் ஆகியோர் நியமனம் பெற்றுள்ளனர்.

ஒழுக்காற்றுக் குழுவின் விசாரணை அறிக்கை கிடைக்கும் வரை கண்டி மாவட்ட அமைச்சர்களின் நியமனம் இடை நிறுத்தப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கையை ஒரு வாரகாலத்துக்குள் சமர்ப்பிக்குமாறு குழுவினரை ஜனாதிபதி பணித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

# மாத்தளை வைத்தியசாலையிலிருந்து 12 நோயாளர்கள் தப்பி ஓட்டம்

மாத்தளை, ஏப்.27

புதுவருடம் மற்றும் அதற்குப் பின் நிகழ்ந்த சண்டை மற்றும் கத்திக்குத்துச் சம்பவங்களில் காயங்களுக்குள்ளாகி சிகிச்சைக்காக மாத்தளை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 12 பேர் வைத்தியசாலை அதிகாரியின் அனுமதியின்றி அங்கிருந்து சென்றுள்ளனர் என மாத்தளை வைத்தியசாலைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு சென்ற நோயாளர்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதெனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த 14, 15ஆம் திகதிகளில் நிகழ்ந்த சண்டைகளில் 55 நபர்கள் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர். (ளி)

# காசல்ரீயின் தண்ணீர் மட்டம் குறைவதால் சட்ட விரோத மாணிக்கக்கல் அகழ்வு தீவிரம்

மஸ்கெலியா, ஏப். 28

ஹற்றன் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் குறைந்து வருவதால், நீர்த்தேக்கத்தின் மத்தியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்ககல் அகழ்வு இடம்பெற்று வருவதால் நீர்த்தேக்கத்திற்கும் சுற்றுசூழலுக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனப் பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை ( 24 ஆம் திகதி) காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் உயர் நிலையில் இருந்து 65 அடி வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நோட்டன் பிரிஜ் - ஹற்றன் பிரதான நெருஞ்சாலை வழியில் புதுக்காடு என்ற பிரதேசத்தில் இவ்வாறான மாணிக்க கற்கல் அகழ்வு பாரியளவு றேகொள்ளப்பட்டு வருகின்றமையால் நீர்த்தேக்கத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

மாணிக்கக்கல் அகழ்வதால் நீர்த்தேக்கத்தின் மதகுகளுக்குப் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதெனத் தெரிவித்த காசல்ரீ நீர்த்தேக்கத்தின் பாதுகாப்பு அதிகாரிகள், இது குறித்து ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென்றும் தெரிவித்தனர். (ளி)

# மாவனல்லை வடிகான் படிகளை செப்பனிட்டுத் தருமாறு கோரிக்கை

கண்டி, ஏப். 28

மாவனல்லை நகர் பிரதான வீதியின் இருமருங்குகளிலும் வடிகான்களை மறைத்துப் போடப்பட்டுள்ள சிமெந்துப் படிகள் உடைந்து கிடப்பதால் பாதசாரிகள் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என விசனிக்கின்றனர்.

இப்படிகளின் மேல் நடந்து செல்லும் முதியவர்களும், சிறுவர்களும் இவ்வுடைந்த சிமெந்துப் படிகளில் இடறிவீழ்ந்த சந்தர்ப்பங்களும் உண்டு என்றும் கூறப்படுகின்றது.

இத்தகைய படிகளை மாற்றி வடிகான்களை மூடக்கூடியவாறு சிமெந்துப் படிகளை அமைக்க மாவனல்லைப் பிரதேசசபை உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நகரவாழ் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீரணி நாகபூஷணி அம்[பாள்]

## சீரணி, சண்டி[லிப்பாய்]

# ஆலய இரதோற்சவ[ம்]

### தேவஸ்தான குருவின் ஆசியுரை



பாரெங்கும் பரந்து விரிந்து நல்லாட்சி புரியும் எங்கள் சீரணித்தாய் இன்று சித்திரத்தேரேறி வருகிறாள். சித்திரை மாதத்தில் சித்திரைப் பௌர்ணமியில் சிங்காரத் தேரேறி வருகின்ற அன்னையின் பேரழகைக் காண்பதற்கு ஆயிரம் கண்கள் போதாது. நாகபூசணி அம்பிகையின் மஹோற்சவம் ஆரம்பித்து விட்டால் அயல் எல்லாம் பக்தி மயமாகி விடும். ஆயிரம் ஆயிரம் அடியவர்கள் நாள்தோறும் வந்து ஆயிரம் கண்ணுடையாளை வணங்கி செல்வதை நாம் காணலாம். கொடியேற்றம் தொடங்கி ஒவ்வொரு நாளும் விதவிதமான அலங்காரத்தோடு அம்பாள் வீதி வலம் வருவாள். தொடர்ந்து இன்றைய நாளிலே ஆனைமுகனும் சண்முகனும் அருகருகே ஆடிவர அம்பிகையும் புன்சிரிப்புடன் நடுவே வருகின்ற அந்தக் காட்சியை வர்ணிப்பதற்கு நம்மால் முடியாது. இந்த நல்ல நாளிலே எல்லோர்க்கும் தேவியின் திருவருள் கிடைக்க ஆசிகூறி தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகிறேன்.

**பிரம்மஸ்ரீ.கு.சோமாஸ்கந்தக்குருக்கள்**
(தேவஸ்தான குரு)

### நல்லருள் புரிவாய் நாகம்மா....



யாழ்ப்பாணத்தில் வழுக்கியாறு செல்லும் எழில்மிக்க வயல் சூழ்ந்த சூழலில் சீரணியில் வீற்றிருந்து திருவருள் பாலிக்கும் பெரும் தலம் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலயம்.

மகோற்சவத்தில் தேர்த்திருவிழா அழித்தலைக் குறிக்கும் சிறப்பு உற்சவம் ஆகும். ஆன்மாக் களிடத்தே தீயவற்றை நல்கும் ஆணவ மலத்தை அழித்து புனித தத்துவத்தை ஏற்படுத்தும் கருணை மிகுந்த நாளாக தேர்த்திருவிழா அமைகின்றது.

உயர்வான வாழ்வு வாழ உதவும் இந்தப் புண்ணிய நாளில் சமூகவிரோதச் செயல்கள், சிந்தனைகள் அழிவடைந்து மனித மேம்பாட்டுச் சிந்தனைகள் வளர்ந்து பண்பட்ட சமூக மாற்றத்தினை ஏற்படுத்தி எல்லோரும் வளம்பெற்று இன்புற்று பெருவாழ்வு வாழ நல்லருள் புரிய அம்பாளின் பாத மலர்களை பணிந்து வேண்டுகின்றேன்.

**திருமதி.எ.அன்ரன் யோகநாயகம்**
*பிரதேச செயலர், சண்டிலிப்பாய்.*

### வண்ணத் தேரேறி வலம் வரும் சீரணித்தாய்



அல்லல்கள் போக்கிடவே
அன்னையவள் தேர் ஏறி
நல்லவர் வாழ்வு பெற
நயமுடனே வலம் வருவாள்
சிங்காரத் தேரேறி
திருவீதி வலம் வந்திடும்
சீரணித்தாய் நாகபூசணியின்
சிரம் போற்றி அருள் பெறுவோம்.

**இ.சிறிதரன்**
(தலைவர்) இந்து இளைஞர் மன்றம்

### செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி



சீரும் திருவும் நிறைந்த, சீரணி அம்பாள் தேர் ஏறி வரும் திருநாள் குறித்து வாழ்த்துவதில் மிகுந்த ஆனந்தமடைகின்றனே். சீரணி நாகபூஷணியின் திருவருளை அறியாதவர்களில்லை. அம்பாளின் திருக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் ஆடியும், பாடியும் அழுதும் அருள் மழையில் நனைந்து ஆறுதல் பெறும் காட்சி வர்ணிக்க முடியாத சிறப்பு அம்சமாகும். பலவூர் பக்தர்களும் விரதமிருந்து சீரணித்தாயின் தேர்ப்பவனி காணத் திரண்டு வருவார்கள். இயற்கைச் சிறப்புமிக்க சண்டிலிப்பாய் திருவூரின் இலக்கணமாக விளங்கும் இத்திருக்கோவில் தேர்விழா. சமூகப்பெருவிழா என்பதில் ஐயமில்லை. இத்திருக்கோவிலில் பல்வேறு திருப்பணிகள் காலத்துக்குக் காலம் நிறைவேற்றப்பட்டு புதுப்பொலிவுடன் ஆலயம் காட்சியளிக்கிறது. அழகான மணிமண்டபம் அமைக்கப்பட்டு சகல மக்களின் மங்கள காரியமும் நிறைவாக நிறைவேறி வருகிறது. அற்புதம் நிறைந்த சீரணித்தாயத் திருத்தேரில் பவனி வந்து எம் மண்ணில் நிரந்தர ஆறுதலை வழங்கப் பிரார்த்தித்து அமைகிறேன்.


**ஆறு.திருமுருகன்**
*தலைவர்,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*
*சிவபூமி அறக்கட்டளை*

### நாகபூஷணியம்மையின் அருள் மழையில் நனைந்திட அனைவரும் வாரீர்.



சீர்மேவும் திருத்தலமாம் சீரணிப்பதியிலே கோயில் கொண்டருளும் ஸ்ரீ நாகபூசணியம்மை சித்திரா பௌர்ணமித் திதியிலே கொடுமைகளை அழித்து துயர்களைக் களைந்திட தேரேறி வருகிறாள். அவள் அருள் மழையில் நனைந்திட அனைவரும் வாரீர். இன்பங்கள் மலரட்டும். வசந்தங்கள் வாழ்வில் வீசட்டும் நல்வாழ்வு நிரந்தர அமைதி நிலைக்கட்டும் என அம்பாளின் பாதங்களைப் பணிகின்றோம்.

**திருமதி.புஸ்பமலர் சிவலிங்கம்**
*வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை*
*மானிப்பாய்.*



### ஆலய வரலா[று]

இலங்கையில் புகழ்பெற்ற யாழ்ப்பாண நகரத்தில் அமைந்[து] ... சேர்ந்த மணியகாரன் உடையார் பரம்பரையினராகிய இராமன் ... வந்தார். அவர் மகன் இராமர் அவர் மகன் முருகேசு. முத்தர் இன[ம்] ... பிள்ளை, அன்னப்பிள்ளை, நன்னிப்பிள்ளை, மயில்வாகன[ப்] ... ஆகியோருடன் இசைந்து வாழ்ந்து வந்தார். நாகபூஷணி அம்பாள் ... ஒன்றிலே நாகபூஷணி அம்பாள் கனவில் [தே]ேறி தான் ... விட ... தனக்கொரு கோயில் அமைக்கும்படி கேட்டதற்கு அமைய சைவ ... செய்துவர வைத்திலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார். இம்மு[றை] ... வழிபட்டு வந்தார்கள். காலம் காலமாக முருகேசு பரம்பரையினர் பரி[பாலித்து] ...


## இரதோற்சவம் சிறப்புற[...]

ஐங்கரன் மோட்டோர்ஸ்
சந்தை முன்பாக, மானிப்பாய்.

லீலா வெதுப்பகம் சுவையகம்
சீரணி, சண்டிலிப்பாய்

அம்பிகா கிறீம் ஹவுஸ்
மலைவேம்படி, அளவெட்டி.

சுந்தர்சன்
பிரதான வீதி, மானிப்பாய்

கஜமுகன் ஸ்ரோர்ஸ்
S.S தொலைத்தொடர்பகம் & பான்சி
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

சக்தி எலக்ரிக்கல்ஸ்
கைத்தொலைபேசி விற்பனையகம்
சந்தைச் சதுக்கம், சங்கானை.

ஆசைப்பிள்ளை அன் சன்
நகை மாடம்
இல.10 பஸ் நிலையம், சங்கானை.

நியூ சண்முகானந்தா ரெக்ஸ்
23, (58) பெரிய கடை,
யாழ்ப்பாணம்

MA[...]
க[...]

கணபதி ஹாட்வெயர்ஸ்
தொட்டிலடி, சங்கானை.


COMPUTER WORL[D]
7ஆம் கட்டை, சண்டி[லிப்பாய்]

தரம் 6 முதல் O/L வரை யாழ்நகரின் [...]
எடிசன் அ[...]
யாழ்ப்பாணம், நல்லூர், தொக்குவில், வ[...]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளியைச் சுத்தப்படுத்தும் செயற்கைக்கோள்





அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் ஆய்வுப்பணிக்காக செயற்கைகோள் மற்றும் ரொக்கெட்டுக்களை விண்வெளிக்கு அனுப்புகின்றன. தங்களது ஆயுள்காலம் முடிந்ததும் இந்தச் செயற்கைக்கோள்கள் செயல் இழந்து குப்பையாகி விடுகின்றன.

சில செயற்கைகோள்கள் உடைந்து, சிதறி, துண்டு துண்டாகவும் ஆகின்றன. இவை விண்வெளிக் குப்பைகள் ஆகச் சுற்றிவருகின்றன. கடந்த 50ஆண்டுகளில் மட்டும் அனுப்பப்பட்ட செயற்கைகோள்கள் மூலம் சுமார் 5ஆயிரத்து 500 தொன் எடையுள்ள குப்பைகள் விண்வெளியில் சேர்ந்துள்ளன. இந்தக் குப்பைகளால் ஏற்கனவே விண்வெளியில் சுற்றிக்கொண்டு இருக்கும் மற்றும் இனி அனுப்ப இருக்கும் செயற்கைகோள்கள் போன்றவற்றுக்கும் ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது. தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும் தகவல் தொடர்புகள் பாதிக்கும் அபாயமும் இருகிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இங்கிலாந்து விஞ்ஞானிகள் புதிய திட்டம் ஒன்றை உருவாக்கி உள்ளனர். இதன்படி மிகச்சிறிய நனோ செயற்கைகோள்களை தயாரித்து அவற்றை விண்வெளிக்கு அனுப்பி அதன் மூலம் விண்வெளிக் குப்பைகளைச் சேகரித்து அழிக்கப் போகிறார்கள். இந்தக் குப்பைகளைச் சேகரிக்கும் வகையில் இந்த நானோ செயற்கைகோளில் காந்த வலை ஒன்றும் இணைக்கப்படும். இது விண்வெளியில் சுற்றிக்கொண்டு இருக்கும் குப்பைகளைக் கவர்ந்து இழுக்கும். பின்னர் இவற்றை பூமியின் மேற்பரப்புக்கு இழுத்துவரும். அப்போது இந்தக் குப்பைகளுடன் சேர்ந்து நானோ செயற்கைகளோளும் எரிந்து சாம்பலாகிவிடும். அடுத்த ஆண்டு இதற்கான ஆய்வுப்பணிகள் தொடங்குகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★




# உடல் வெப்பத்தால் கைத்தொலைபேசிக்கு மின்னேற்றல்



நமது உடலின் வெப்பநிலை கூடினாலோ, குறைந்தாலோ உடல் நோய்வாய்ப்படும். நமது இயக்கத்துக்கு ஏற்ப வெப்ப ஆற்றல் வெளிப்படும். மாறுபடவும் செய்யும். இப்படி உடல் இயக்கத்தால் ஏற்படும் அதிகப்படியான வெப்பத்தைச் சேகரித்து அந்த ஆற்றலைக் கொண்டு இலத்திரனியல் கருவிகளை இயக்க ஒரு கருவி தயாரித்துள்ளது எம்.ஐ.டி.பல்கலைக்கழகம்.

நடப்பது, ஓடுவது என எந்த வேலையிலும் ஈடுபட்டாலும் குறிப்பிட்ட அளவில் ஆற்றல் செலவாகிறது. அதில் ஒரு பகுதி வெப்ப ஆற்றலாக வெளியேறுகிறது. இந்த வெப்ப ஆற்றலையும், சுற்றுப்புறத்தில் உள்ள காற்றில் உள்ள ஆற்றலையும் கிரகித்து மின் ஆற்றலாக சேமிக்கிறது இந்தக்கருவி. இதைக்கொண்டு 2 வோல்ற் மின்சாரத்துக்கும் குறைவான பயன்பாட்டில் இயங்கும் இலத்திரனியல் கருவிகளை இயக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. கையடக்கத்தொலைபேசி உள்ளிட்ட பல்வேறு இலத்திரனியல் கருவிகள் மிகக் குறைந்த மின் ஆற்றலில் இயங்கக்கூடியவை. எனவே இந்தக் கருவியில் சேமிக்கும் மின் ஆற்றலைக்கொண்டு இனி கையடக்கத்தொலைபேசியில் மின்னேற்றம் செய்யமுடியும்.★

# மனதைப் படிக்கும் கணனி உருவாக்கம்

பிரிட்டனைச் சேர்ந்த விஞ்ஞானிகள், மனிதர்கள் என்ன நினைக்கின்றனர் என்பதைப் படிக்கும் வகையிலான கணனியை வடிவமைத்துள்ளனர். இது குறித்து, லண்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி மற்றும் அவரது சகாக்கள் கூறியதாவது, கணனியால் மனிதர்களின் மூளையை ஸ்கான் செய்வதன் மூலம், அவர்கள் என்ன நினைக்கின்றனர் என்பதைப் புரிந்துகொண்டு அவற்றை அப்படியே வெளிப்படுத்த முடியும். இதற்காகப் பத்து தன்னார்வலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது. இவர்களுக்குச் சில பெண்கள் கடிதங்களைத் தபால் பெட்டியில் போடுவது, பேப்பர் கப்பில் காபி அருந்துவது போன்ற காட்சிகள் அடங்கிய, சில விநாடிகள் மட்டுமே ஒளிபரப்பக்கூடிய படம் காண்பிக்கப்பட்டது.



அதன்பின் அவர்கள் என்ன பார்த்தனர் என்பதை திரும்ப நினைவுபடுத்திப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். அப்போது ஸ்கானர் கருவி மூலம் மூளையில் ஏற்படும் இரத்த ஓட்ட மாறுதல்களை வைத்து, அதன் செயற்பாடு பதிவு செய்யப்பட்டது. பின்னர் அந்த இலத்திரனியல் தகவல்களை, அதற்கென உருவாக்கப்பட்ட கணனித் தகவல்கள் மூலம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் நினைவு கூர்ந்ததை 50 சதவீதம் துல்லியமாக வெளிப்படுத்தப்பட்டது இவ்வாறு அவர்கள் கூறினர் ★★★

# வலியில்லாத ஊசி மருந்து ஜப்பானில் கண்டுபிடிப்பு



மனிதர்களின் நோய் குணமடைய உடலில் ஊசி மருந்து செலுத்தப்படுகிறது. இதனால் வலி ஏற்படும் என்பதால் ஊசி போட்டுக்கொள்ள குழந்தைகள் முதல் பெரியோர் வரை அனைவரும் அச்சப்படுகின்றனர். இந்த அச்சத்தைப் போக்கி வலி இல்லாத மருந்து ஊசியை ஏற்றக்கூடிய வகையில் ஜப்பானைச் சேர்ந்த விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

இந்த ஊசிகள் கரையக்கூடிய பாலிமர் இழைகளால் தயாரிக்கப்பட்டது. இதை உடலில் குத்துவதன் மூலம் தோலின் அடிப்பகுதி சேதமடையாது; வலி ஏற்படாது.

இந்த மைக்ரோ ஊசிகள் 0.5 மி.மீற்றர் நீளமும், 0.3 மி.மீற்றர் அகலமும் கொண்டது. இந்த ஊசி அண்மையில் சோதனை செய்து பார்க்கப்பட்டது.

★★★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அசேதன இரசாயனவியல்

## 2010 மாணவர்கள் இதுவரை முடிவடைந்த பாடத்திட்டங்களை அலகு ரீதியாக ஆழமாக மீட்டல் செய்வதற்கான ஒரு விசேட தொகுப்பு

## SPECIAL GUIDE FOR 2010 A/L MATHS, SCIENCE STUDENTS

### அமைப்புக் கட்டுரை வினாக்கள்

01. a) 2ஆம் ஆவர்த்தன மூலகம் A என்ற குறியீட்டாலும், 3ஆம் ஆவர்த்தன மூலகம் B என்ற குறியீட்டாலும் குறிக்கப்படுகின்றது. A, B ஒரேகூட்ட மூலகங்கள் ஆகும். பின்வரும் வினாக்களுக்கு A, B இற்கான உண்மைக் குறியீட்டினைத் தருக.
   1. A யும், B யும் நீருடன் விரைவாகத் தாக்கம்புரிந்து $H_2$ வாயுவைத் தருகின்றன.
   2. A யும், B யும் NaOH உடன் தாக்கமுறும்போது A வாயு விளைவு ஒன்றைத் தருகின்றது. எனினும், இரண்டும் தாக்கமுறக்கூடியவை.
   3. A யும், Bயும் பங்கீட்டுப் பிணைப்பாலான இராட்சத மூலக்கூறினை உருவாக்கும்.
   4. A ஆனது NaOH கரைசலுடன் $H_2$ வாயுவைத் தரும். B ஆனது தாக்கமுறாது.
   5. A யும், B யும் பிறதிருப்ப வடிவங்களில் காணப்படக்கூடியவை.
   6. A ஆனது வளியில் ஒரு கூறாகக் காணப்படுகிறது. B ஆனது வளியில் உள்ள கூறுடன் இலகுவில் தாக்கம்புரியும்.
   7. A, B ஆகியன வேறுபட்ட பிணைப்பு மூலம் மூலக வடிவில் காணப்படுகின்றன.
   8. A, B தம்முள் சேர்ந்து +4, +6 ஒட்சியேற்ற நிலைகள் உடைய சேர்வைகளை உருவாக்குகின்றன.

b) பின்வரும் மூலகங்கள் ஒட்சியேற்றியாக, தாழ்த்தியாக, இருவழிவிகாரமாகத் தொழிற்படும் தாக்கங்களைச் சமப்படுத்திய நிலையில் எழுதுக.
   1. S ஒட்சியேற்றியாக மூலகம் ஒன்றுடன்.
   2. S தாழ்த்தியாக மூலகம் ஒன்றுடன்.
   3. S இருவழி விகாரமாக.
   4. P ஒட்சியேற்றியாக மூலகம் ஒன்றுடன்.
   5. P தாழ்த்தியாக மூலகம் ஒன்றுடன்.
   6. P இருவழி விகாரத் தாக்கம்.

c) பின்வரும் சேர்வைகளின் வெப்பப்பிரிகைக்கான சமன்பாடுகளை எழுதுக.
   1. $(NH_4)_2CO_3$
   2. $NH_4NO_3$
   3. $NH_4NO_2$
   4. $(NH_4)_2Cr_2O_7$
   5. $CO(NH_2)_2$

02. a) 2ஆம் ஆவர்த்தன மூலகம் A, 3ஆம் ஆவர்த்தன மூலகம் B ஆகியவற்றின் குளோரின் கொண்ட சேர்வைகளைக் கருதுக. A, B என்பன ஒரேகூட்ட மூலகங்கள் ஆகும்.
   1. A, B இரண்டினதும் குளோரைட்டுக்கள் அயன் சேர்வைகள். A, B ஐ இனங்காண்க.
   2. A, B இன் குளோரைட்டுக்கள் அறைவெப்பநிலையில் திரவ, திண்ம நிலைகளில் காணப்படக்கூடியன. அச் சேர்வைகளை எழுதுக.
   3. A இன் குளோரைட்டு நீர்ப்பகுப்பு அடைய மூல இயல்பு உடைய வாயுவைத் தரும். எனின், A, B இனது ஒரே வலுவளவு உடைய குளோரைட்டுக்களின் நீர்ப்பகுப்புத் தாக்கங்களை எழுதுக.
   4. A இனது குளோரைட்டு நீர்ப்பகுப்பு அடையாது. B இனது குளோரைட்டு நீர்ப்பகுப்பு அடையும். அச்சேர்வைகளை எழுதுக.
   5. A, B இனது குளோரைட்டுக்கள் திண்மநிலையில் காணப்படக்கூடியவை. இக் குளோரைட்டுக்கள் இரண்டும் நீர்ப்பகுப்பு அடையும் தன்மை உடையன. அம் மூலகங்களைத் தருக.

b) 1. மூலகம் X இன் அதியுயர் ஒட்சியேற்ற எண் +6 ஆகும். அம்மூலக ஐதரொட்சைட்டு நீரில் கரைதிறன் குறைந்தது. X இனது அணுவெண் <30 எனின், அம்மூலகத்தின் குறியீட்டையும், இலத்திரன் நிலையமைப்பை $IS^2\,2S^2$..... எனும் வடிவிலும் தருக.
   2. X இனது ஒட்சைட்டு ஒன்றை $SO_2$ இனால் தாழ்த்தப்படமுடியாது. எனின், அதன் குறியீட்டையும், பெயரையும் தருக.
   3. X இனது +6 ஒட்சியேற்ற நிலையில் உள்ள இரண்டு அயன்களைத் தந்து அவற்றுள் ஒன்றில் இருந்து ஒன்றைத் தயாரிக்குக. சமப்படுத்திய அயன் சமன்பாடுகளைத் தருக.
   4. X இனைப் பிரித்தெடுக்கப் பயன்படும் உலோகம் ஒன்றினைத் தருக.

03. a) 2ஆம், 3ஆம் ஆவர்த்தனங்களைச் சேர்ந்த ஒரேகூட்ட மூலகங்களான A, B இனது H கொண்ட சேர்வைகளைக் கருத்திற்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   1. A, B ஐதரசன் கொண்ட சேர்வைகளில் A இனது சேர்வை மென்னமிலமாகவும், B இனது சேர்வை வன்னமிலமாகவும் இருக்கும் சேர்வைகளைத் தருக.
   2. A, B இனது ஐதரைட்டுக்கள் 2ஆம், 3ஆம் ஆவர்த்தன ஐதரைட்டுக்களில் கொதிநிலை குறைந்தவை. அவை எவை?
   3. அறைவெப்பநிலையில் A இனது ஐதரைட்டு வாயு நிலையிலும், B இனது ஐதரைட்டு திண்ம நிலையிலும் காணப்படும். அவை எவை?
   4. A, B இனது ஐதரைட்டுக்கள் திண்மநிலையில் காணப்படுவதோடு அவை முறையே ஈரியல்பு, மென்மூல இயல்புகளைக் காட்டக்கூடியன. அவை எவை?
   5. A, B இனது H- கொண்ட சேர்வைகள் முறையே நடுநிலை, அமில இயல்புகளைக் காட்டுகின்றன. அவை எவை?
   6. A, B இனது H- கொண்ட சேர்வைகள் இரண்டும் அமில, மூல இயல்புகளைக் காட்டக் கூடியன. A இனது ஐதரசன் கொண்ட சேர்வை H நீர்க்கரைசலில் உறுதி கூடியதாக உள்ளது. $Cu^{2+}$ இனது A, B கொண்ட சேர்வைகளைத் தருக.

b) கீழே தரப்பட்டுள்ள பதார்த்தங்கள் நீர்க்கரைசலில் சேர்க்கப்படும்போது நடைபெறும் தாக்கங்களுக்குரிய சமப்படுத்திய சமன்பாடுகளை எழுதுக.
   1. $Al_2(SO_4)_3 + NaHCO_3 \rightarrow$
   2. $(NH_4)_2Cr_2O + NaOH \rightarrow$
   3. $BaCl_2 + K_2Cr_2O_7 \rightarrow$
   4. மிகை $Na_2CO_3 + HI \rightarrow$
   5. $FeCl_3 + KI \rightarrow$

04. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   1) 10 இலும் குறைந்த அணு எண்ணைக் கொண்ட அணுக்களாலான மூலக்கூறு ஒன்றின் நான்கு அணுக்கள் தளத்தில் இருப்பின் அம் மூலக்கூறின் குறியீட்டினைத் தருக.
   2) ஐந்து அணுக்களாலான மூலக்கூறு ஒன்றில் ஐந்து அணுக்களும் தளத்தில் இருப்பின், அம் மூலக்கூறின் குறியீட்டினைத் தருக.
   3) $90^0$, $120^0$, $180^0$ பிணைப்புக் கோணங்களைக் கொண்ட உறுதியான மூலக்கூறு ஒன்றின் சூத்திரத்தினைத் தருக.
   4) ஒரு மூலக்கூறின் மைய அணுவில் இருந்து ஒரு இலத்திரன் அகற்றப்படும்போது நேர்கோடு வடிவமுடைய நேர் அயனாக மாறுகின்றது. ஆயின், அம்மூலக்கூறின் சூத்திரத்தைத் தருக.
   5) ஒரு சேர்வையின் காபன் அணுவானது $H_2O_2$ சேர்க்கும்போது ஒட்சியேற்ற எண் இரண்டால் அதிகரிக்கிறது. அதே சேர்வைக்கு $LiAlH_4$ சேர்க்க C அணுவினது ஒட்சியேற்ற எண் இரண்டால் குறைகிறது. அச்சேர்வையின் பொதுச்சூத்திரத்தைக் காண்க.
   6) ஈரணு மூலக்கூறு ஒன்றானது மூன்று வெவ்வேறு வகையான பிணைப்புக்களால் இணைக்கப்பட்டிருப்பின், அம்மூலக்கூறுகளின் குறியீட்டினைத் தருக.
   7) வலுவளவு 7 இனையும், உயர் ஒட்சியேற்ற நிலை +7 இனையும் எடுக்கத்தக்க அணு எண் 30 இலும் குறைந்த மூலகங்களைத் தருக.
   8) மூன்றாம் ஆவர்த்தன மூலகங்களில் வலிமை கூடிய ஒட்சியேற்றும் கருவியையும், வலிமை கூடிய தாழ்த்தும் கருவியையும் குறிப்பிடுக.
   9) அறைவெப்பநிலை அமுக்கத்தில் எவ் ஐதரோகாபன் வாயு மூலக்கூறினைத் தகனிக்க ஏற்படக்கூடிய கனவளவுக் குறைவு மிகவும் குறைவாக இருக்கும்?
   10) பின்வரும் சேர்வைகளை பொருத்தமான முறையில் பெயரிடுக.
      1. $Cu_3N$
      2. $Na_2O_2$
      3. $Pb_3O_4$
      4. $H_3PO_3$
      5. $[Ni(H_2O)_5(NH)_3]_2\,[Fe(CN)_4F_2]$

05. a) 1. ஐதான $FeSO_4$ நீர்க்கரைசலினுள் $CHCl_3$ இல் கரைக்கப்பட்ட $Br_2$ கரைசல் சேர்க்கப்பட்டுக் குலுக்கப்பட்டது. பெறப்பட்ட அவதானங்களையும், ஏன் அவ்வாறு தாக்கம் நடைபெற்றது எனவும் குறிப்பிடுக.
   2. HI நீர்க்கரைசலுக்குள் $Cu(OH)_2$ திண்மத்தில் சிறிதளவை இட்டுக் குலுக்கும்போது பெறக்கூடிய அவதானங்களைக் குறிப்பிடுக.
   3. $H_2O_2$/ KOH நீர்க்கரைசலினுள் $Cr(OH)_3$ திண்மத்தில் சிறிதளவைக் கரைக்கும்போது பெறக்கூடிய அவதானங்களைத் தந்து, அதற்கான காரணங்களை எதிர்வுகூறுக.
   4. $H_2O_2$/ஐதான $H_2SO_4$ அமிலக் கரைசலினுள் $KMnO_4$ கரைசலில் சிறிதளவைச் சேர்க்கும்போது பெறக்கூடிய அவதானங்களைக் கூறி, பெறக்கூடிய விளைவுகள் தொடர்பாக எதிர்வுகூறுக.

b) கூட்டம்-IV இனது மூலகங்களின் சில ஒட்சைட்டுக்கள் தரப்பட்டுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| $CO_2$, CO | $SiO_2$ | $GeO_2$ | $SnO_2$ | PbO, $PbO_2$ |

இவற்றைப் பயன்படுத்தி கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.
   1. கூடிய மூல இயல்பு உடைய ஒட்சைட்டு எது?
   2. செறிந்த HCl இனை எவ் ஒட்சைட்டு ஒட்சியேற்றக்கூடியது?
   3. வலுவான தாழ்த்தும் கருவி எது?
   4. உறுதியான MO வகையான ஒட்சைட்டை உருவாக்காது. $MO_2$ வகை ஒட்சைட்டு மாத்திரம் உறுதியாகக் காணப்படுமாயின், அவ் $MO_2$ வகை ஒட்சைட்டு எது?

c) $[Cu(NH_3)_4]SO_4$ நீர்க்கரைசலும், $[Ni(NH_3)_6]SO_4$ நீர்க்கரைசலும் தனித்தனியாகத் தரப்பட்டால், FeS திண்மத்தையும், செறி HCl ஐயும் மட்டும் பயன்படுத்தி இனங்காணும் முறையைத் தருக.

(13 ஆம் பக்கம் பார்க்கவும்)

யாழ்.ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் S.தங்கராஜாவின் வழிகாட்டலில் தொகுத்து வழங்குபவர்:
S.T.ஜனார்த்தனன் (ஆசிரியர், கொழும்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசேதன இரசாயனவியல் : தொடர்ச்சி....

05. d) கற்றயன்களைக் கொண்ட தேற்றாக்கல் கூட்டம் II இல் பெற்ற வடிதிரவத்திற்கு கீழே தரப்பட்டுள்ள கரைசல்களைச் சேர்ப்பதன் மூலம் எவ் வீழ்படிவுகள் பெறப்படும் எனக் குறிப்பிடுக.
1. $NH_4OH/ NH_4Cl$ கொண்ட கரைசல்.
..............................
2. செறி $HNO_3$ சேர்த்துச் சூடாக்கிய பின் $NH_4OH/ NH_4Cl$ கரைசல் சேர்த்தல்.
..............................
3. $H_2S$ வெளியேறும்வரை சூடாக்கிய பின் செறி $HNO_3$ சேர்த்துச் சூடாக்கி $NH_4Cl/ NH_4Cl$ சேர்த்தல்.
..............................

06. a) 1. ஆவர்த்தனப் பாகுபாட்டில் Li உம், Mg உம் மூலைவிட்டத் தொடர்பு உடையவை என்பதை விளக்குக.
..............................
2. LiI ஆனது LiCl இலும் பார்க்க எதனோலில் கூடியளவு கரைகின்றது. இதனை விளக்குக.
..............................
3. கார உலோகங்களில் Li இன் உருகுநிலை உயர்வானது. இதனை விளக்குக.
..............................

b) $Na_2CO_3.NaHCO_3 2H_2O$ இச்சேர்வையைத் தூய்தாக்கக் கொடுக்கப்படின், எவ்வாறு அதனை வாய்ப்புப்பார்ப்பீர் என விளக்குக.
..............................

c) பின்வருவன ஒட்சியேற்றும் கருவிகளாகத் தொழிற்படுவதற்கான சமன்பாடுகளைத் தருக.
1. நீர். ..............................
2. $H_2$ ..............................
3. $NH_{3(g)}$ ..............................

d) $Na_2O_2$ இன் பயன்கள் நான்கு தருக.
..............................

e) Na ஐப் பரவீன் எண்ணெயில் வைத்திருப்பதற்கான காரணங்களைத் தருக.
..............................

f) பின்வரும் மாற்றீடுகளைச் செய்க.
1. NaCl $NaNO_3$
..............................
2. $Ba(NO_3)_2 \rightarrow BaCl_2.2H_2O$
..............................

g) NaCl மாதிரி ஒன்றில் சிறிதளவு $MgCl_2$ மாதிரி காணப்படுகின்றது. இம் மாதிரியில் உள்ள NaCl இன் திணிவு வீதத்தை எவ்வாறு பரிசோதனை மூலம் துணிவீர்?
..............................

07. a) பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நடைபெறும் தாக்கத்திற்கான சமன்பாட்டைத் தருக.
1. $SO_2$ வாயு ஓர் ஒட்சியேற்றும் கருவியாக.
..............................
2. சல்பூரிக் அமிலம் ஓர் ஒட்சியேற்றும் கருவியாக.
..............................

b) கந்தகவீரோட்சைட்டில் இருந்து +6, +4, 0 ஆகிய ஒட்சியேற்ற நிலைகளில் கந்தகத்தைக் கொண்ட பதார்த்தங்களை எவ்வாறு பெறலாம் என தனித்தனிச் சமன்பாடுகளில் காட்டுக.
..............................

c) X என்ற வெண்ணிறத் திண்ம உப்பு சுவாலைப் பரிசோதனைக்குப் பச்சை நிறத்தைக் கொடுத்தது. X இன் நீர்க்கரைசலுக்கு ஈய அசற்றேற்றுக் கரைசல் சேர்க்கப்பட்டபோது வெண்ணிற வீழ்படிவு உண்டானது. கரைசலைச் சூடாக்கியபோது இவ் வீழ்படிவு கரைந்தது. குளிரவிடும்போது மீண்டும் வீழ்படிவு தோன்றியது. X இன் கரைசலுக்கு $CCl_4$ சேர்த்து, குளோரின்நீர் சேர்த்துக் குலுக்கப்பட்டபோது எவ்வித மாற்றமும் அவதானிக்கப்படவில்லை. X ஐ இனங்காண்க.
..............................

d) சூடான செறிந்த சல்பூரிக் அமிலம் கந்தகத்துடன் தாக்கமடைந்து கந்தகவீரொட்சைட்டைத் தருகின்றது. சம்பந்தப்பட்ட ஒட்சியேற்ற எண் மாற்றங்களைக் கருத்திற்கொண்டு இத் தாக்கத்திற்கான சமப்படுத்திய சமன்பாட்டைத் தருக.
..............................

e) பின்வருவனவற்றை விளக்குக.
1. Br ஐ விட Cl சிறந்த ஒட்சியேற்றும் கருவி.
..............................
2. Na இன் உருகுநிலையை விட Fe இன் உருகுநிலை மிகவும் உயர்ந்தது.
..............................
3. d தொகுப்பு மூலகங்களின் அணு ஆரைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை.
..............................
4. VI ஆம் கூட்ட மூலகங்களின் ஐதரைட்டுக்களில் ($H_2O$, $H_2S$, $H_2Se$, $H_2Te$) $H_2S$ இன் கொதிநிலை மிகவும் குறைந்தது.
..............................

08. a) A, B இனது ஐதரொட்சைட்டுக் கொண்ட சேர்வைகளைக் கருதுக.
A, B ஒரே கூட்ட 2ஆம், 3ஆம் ஆவர்த்தன மூலகங்களாகும்.
1. A இனது ஐதரொட்சைட்டு வெப்பப்பிரிகை அடையும். B இனது ஒட்சைட்டு பிரிகை அடையாது. அவை எவை?
..............................
2. A இனது ஐதரொட்சைட்டு மென்னமில இயல்புடையது. B இனது ஐதரொட்சைட்டு மென்னமில இயல்பு உடையது. A இனது ஐதரொட்சைட்டு ஈரியல்பு உடையது, அவை எவை?
..............................
3. B இனது ஐதரொட்சைட்டு மென்னமில இயல்பு உடையது. A இனது ஐதெரொட்சைட்டு ஈரியல்பு உடையது. அவை எவை?
..............................
4. A, B இல் B மட்டம் OH பிணைப்புடைய சேர்வையை உருவாக்கும். எனின் A, B ஐ இனங்காண்க.
..............................
5. A, B இல் A ஒருமூல அமிலங்களை மட்டுமே தோற்றுவிக்கும். B அவ்வாறில்லை. A, B ஐக் குறிப்பிடுக.
..............................

b) $Fe_2O_3$, $Fe_3O_4$ கொண்ட திண்மக் கலவை மிகை ஐதான $H_2SO_4$ இல் கலக்கப்பட்டது. கரைசலின் $25cm^3$ ஆனது $0.1moldm^{-3}$ $KMnO_4$ இனால் நியமிக்க $10cm^3$ தேவைப்பட்டது. கரைசலின் வேறொரு $25cm^3$ இற்கு மிகை KI கரைசல் சேர்த்துப் பெறப்பட்ட கரைசல் $0.5moldm^{-3}$ செறிவுடைய $Na_2S_2O_3$ கரைசலால் மாப்பொருட்காட்டி முன்னிலையில் நியமிக்க $36cm^3$ தேவைப்பட்டது.
1. $Fe_2O_2$, $Fe_3O_4$ அமிலத்துடன் நடைபெறும் சமப்படுத்திய சமன்பாடுகளைத் தருக.
..............................
..............................
2. $Fe^{2+}$, $MnO_4$ தாக்கத்திற்கான அயன் சமன்பாட்டைச் சமப்படுத்திய நிலையில் தருக.
..............................
3. $Fe^{3+}$, I தாக்கத்திற்கான அயன் சமன்பாட்டைச் சமப்படுத்திய நிலையில் தருக.
..............................
4. $I_2$ இற்கும், $S_2O_3^{2-}$ இற்கும் சமப்படுத்திய அயன் சமன்பாட்டினைத் தருக.
..............................
5. $25cm^3$ கரைசலில் $Fe^{2+}$ இன் மூல் எண்ணிக்கை யாது?
..............................

(நிறைவுற்றது)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை - ஒகஸ்ட், 2010.
General Certificate of Education (Advance Level) Model Examination - August, 2010.


# பௌதிகவியல்: புலங்கள்

கடந்தவார (24.03.2010) தொடர்ச்சி...

35. வினா இல. 33 இல் நடுக்கோளத்தின் மின்னழுத்தம் $[K = (4\pi\varepsilon o)^{-1}]$
1) $Kq_o/a$ 2) $Kq_o/2a$ 3) $Kq_o/4a$ 4) $Kq_o/8a$

36. சமாந்தரத் தட்டு கொள்ளளவி ஒன்றானது $K_1$, $K_2$ மின்னுழைய அனுமதிதிறன் உடைய இரு பதார்த்தங்களால் நிரப்பப்படுகிறது. தொகுதியின் கொள்ளளவானது,
1) $K_1K_2\varepsilon oA/(K_1 + K_2)d$
2) $K_2K_1/(K_1+K_2)/ A\varepsilon o/2d)$
3) $(K_1 + K_2/2) A\varepsilon o/d$
4) $2K_1K_2/K_1 + K_2/ A\varepsilon o\text{-}d$

37. சமாந்தரத்தட்டு வளிக் கொள்ளளவி ஒன்றின் கொள்ளளவம் 20μF. தற்போது இக் கொள்ளளவமானது $K_1=3$, $K_2=7$ உடைய மின்னுழைய பதார்த்தங்களால் நிரப்பப்படுகிறது. தற்போது கொள்ளளவம்,





1) 100μF 2) 60μF
3) 600μF 4) 160μF

38. 400pF கொள்ளளவியானது 200V மின்கலத்தினால் ஏற்றப்படுகிறது. கொள்ளளவியின் மின்னழுத்த சக்தியானது,
1) $8 \times 10^{-6}J$ 2) $8 \times 10^{-8}J$
3) $8 \times 10^{-4}J$ 4) $8 \times 10^{-3}J$


39. மேற்கூறிய வினாவில் மின்முதல் தொடுப்பகற்றப்பட்டு மற்றுமொரு 400pF கொள்ளளவியுடன் தொடுக்கப்படுகிறது. தற்போது சேமிக்கப்படும் மின்னழுத்த சக்தியானது,
1) $4 \times 10^{-6}J$ 2) $4 \times 10^{-5}J$
3) $4 \times 10^{-8}J$ 4) $4 \times 10^{-3}J$

40. A, Bஆகிய முடிவிடங்களுக்கு இடையிலான சமவலுக் கொள்ளளவமானது,





1) 3μF
2) 1.5μF
3) 2μF
4) 2.5μF

41. 10μF கொள்ளளவு உடைய 5 கொள்ளளவிகள் படத்தில் காட்டியவாறு 100V நேரோட்ட முதலுடன் இணைக்கப்பட்டுள்ளது. A, B என்ற முடிவிடங்களுக்கு இடையே யான சமவலுக் கொள்ளளவம்,





1) 40μF 2) 20μF
3) 30μF 4) 10μF

42. படத்தில் காட்டப்பட்டுள்ள தொகுதி ஒன்றின் சமவலுக் கொள்ளளவமானது,




1) C 2) 2C
3) 3C/2 4) C/2

43. A, Bஆகிய முடிவிடங்களுக்கு இடையிலான சமவலுக் கொள்ளளவம்,





1) 13/6μF
2) 32/23μF
3) 32/19μF
4) 13/5μF

44. d தூரத்தினால் வேறாக்கப்பட்ட சமாந்தரத்தட்டு கொள்ளளவி ஒன்றினுள் b தடிப்புடைய மின்னுழைய பாளம் ஒன்று புகுத்தப்படுகிறது. புதிய கொள்ளளவமானது,
1) $K\varepsilon oA/Kd - b(K - 1)$ 2) $\varepsilon oA/ Kd + b(K - 1)$
3) $K\varepsilon oA/ Kd + (K - 1)b$ 4) $K\varepsilon oA/Kd - b(K + 1)$


45. A குறுக்குவெட்டுப் பரப்புடைய சமாந்தரத்தட்டு கொள்ளளவி ஒன்றின் தட்டுகளுக்கு q, -q ஏற்றங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தட்டுகளை பிரிக்கத் தேவையான விசை,
1) $q^2/4\pi\varepsilon oA$ 2) $\varepsilon oq^2/2\pi A$
3) $q^2/2\varepsilon oA$ 4) $q^2/\varepsilon oA$

46. கீழே தரப்பட்டுள்ள சுற்றில் 4μF கொள்ளளவியில் உள்ள ஏற்றம்,




1) 300μF
2) 100μF
3) 200μF
4) 400μF

47. தரப்பட்டுள்ள சுற்றில் $C_1$ = 10μF, $C_2$ = 20μF, $C_3$ = 15μF எனின், $C_3$ இற்குக் குறுக்கேயான அழுத்த வித்தியாசம்,





1) 25V
2) 80V
3) 35V
4) 40V

48. மேற்கூறிய வினாவில் $C_2$ இல் உள்ள ஏற்றம்,
1) 1,000μC 2) 400μC
3) 800μC 4) 1,200μC

49. 2μF, 5μF, 4μFகொள்ளளவிகள் தரப்பட்ட ஒழுங்கில் 10V மின்கலத்துடன் தொடராக இணைக்கப்பட்டுள்ளன. 5μF கொள்ளளவிக்குக் குறுக்கேயான அழுத்த வித்தியாசம்,
1) 100V 2) 40V 3) 80V 4) 120V

50. A, B முடிவிடங்களுக்குக் குறுக்கேயான சமவலுக் கொள்ளளவம்,




1) C 2) 2C
3) 3C 4) C/2

(நிறைவுற்றது)


ஆசிரியர்:- சி.சிந்தனைச்செல்வன் (B.Sc) Dip.in.Edu, Dip.in.IT
கொ/விவேகானந்தா கல்லூரி,
கொழும்பு-13. T.P:077-7550332




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத் தமிழர்களின் கடந்த ஐம்பது ஆண்டு கால சட்ட விடயங்களில் தமிழ்த் தலைவர்களுடனும் நெருக்கமாகச் சம்பந்தப்பட்டு செயலாற்றிய சட்ட விற்பன்னர் ஸி.வி.விவேகானந்தன்.

ஈழத் தமிழர் சார்பில் இந்தியாவை நோக்கி அவர் எழுப்பும் கேள்விக்கணைகளில் அர்த்தம் நிறைந்த பல விடயங்கள் பொதிந்துள்ளன. நேற்றுப் பிரசுரமான இக்கட்டுரையின் நான்காவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

# பாரத தேசத்துக்கு ஒரு பகிரங்க மடல்....!

பகுதி - 4

சிரேஷ்ட சட்டத்தரணி
ஸி.வி.விவேகானந்தன்

டில்லிப் பேரரசே!

### சிங்களவர்களின் அரசியல் சாணக்கியம்

தமிழ் அரசியல்வாதிகளும் ஏற்க மறுக்கின்றார்கள். டில்லிப் பேரரசே! நீயும் விளங்க மறுக்கின்றாய். சிங்கள அரசியல் தலைவர்கள் மகாவம்ச காலம் தொட்டு இன்றுவரையும் இராஜதந்திரத்தில், சாணக்கியத்தில் தலை சிறந்து விளங்குகின்றார்கள்.

தமது சமுதாயத்தின் வளர்ச்சியில் - இலங்கை மண்ணைத் தங்களது மண்ணாகவே வைத்துக்கொள்வதில் - தனது இனத்தை, மதத்தைக் கட்டிக் காப்பதில் - பௌத்தத்தையும் சிங்களத் தையும் வடக்கு,கிழக்கில் நிலை நிறுத்துவதில் - அரசியல் தூரநோக் கில்- இராஜதந்திரத்தில் - அவர்களுக்கு இணையாக யாருமிலர் இவ்வுலகில்.

இலங்கை ஒரு சிறியநாடு. அதனால் சிங்கள அரசியல் வாதிகளின் இராஜ தந்திரம், சாணக்கியம் உலக நாடுகளுக்கு எட்டுவதில்லை; விளங்குவதில்லை. அவர் களது சாணக்கியம் வரலாற்றில் பலவுண்டு. பழையது ஒன்றை இங்கே கூறுகின்றேன்.

### கச்சதீவு

கச்சதீவிற்கு இந்தியாவும் உரிமை கோரியது. இலங்கையும் உரிமை கோரியது. கடைசியில் 1974 ஆம் ஆண்டின் உடன் படிக்கையின் பின் கச்சதீவிற்கு இந்தியா உரிமைகோருவதைக் கைவிட்டது. அது இந்திரா- சிறிமாவோ உடன்படிக்கை என பொதுவாகக் கூறப்படுகின்றது.

சிறிமாவோ பண்டார நாயக்காவின் சாணக்கியத்தில் இந்தியா மடங்கியது என்பதே உண்மை. இந்தியா ஒரு வார்த்தை இன்றி தாரைவார்த்துக் கொடுத்தது கச்சதீவை.

### கடிதம்

28.09.1971 இல் இந்திரா அம்மையாருக்கு சிறிமாவோ அம்மையார் கடிதம் எழுதினார். "...Kachchativu is part of the territory of Ceylon and that the Island continues to be under my Government's jurisdiction and control" ("கச்சதீவு இலங்கையின் எல்லைக்குள் அமைந்த ஒரு பகுதி யாகும். அத்தோடு இத்தீவு எனது அரசின் எல்லைக்குள்ளும் கட்டுப் பாட்டுக்குள்ளும் தொடர்ந்தும் இருந்துகொண்டு வருகின்றது.")

கடிதம் கிடைத்ததும் இந்திய அதிகாரிகள் கறுவிக்கொண்டனர். டில்லிக்கு வரட்டும், எமது ஆதாரங் களை முகத்தில் அடிப்போம் எனக்கூறி ஆதாரங்களைத் திரட்டிக் கொண்டிருந்தனர். இந்தியாவின் வல்லாண்மையை நன்குணர்ந்தார். சிறிமாவோ உரிமைகோரி கச்சதீவை இலங் கைக்கு உடைமை ஆக்குவது கடினம் என்பதை உணர்ந்து கொண்டார் சிறிமாவோ. வேறு வழியைக் கையாளவேண்டுமென திடசங்கற்பம் கொண்டார்.

### சிறிமாவோவின் சாணக்கியம்

முதலில் அவர் ஆராய்ந்து அறிந்தது என்ன தெரியுமா? கச்சதீவு இலங்கைக்குக் கிடைப் பதால் ஏற்படும் நன்மைகளை ஆராய்ந்தார். பலவித நன்மைகளைக் கண்டறிந்தார். அதனால் தனிப்பட்ட முறையிலே பல விளக்கங்களைப் பெற்றார். ஆனால் இந்திராகாந்தி கச்சதீவை ஒரு மணல்திடல் என்று கூறிவிட்டார்.

1958 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி புதிய சர்வ தேசக் கடல் சட்ட சமவாயத்தை ஐ.நாவின் பொதுச்சபை நிறை வேற்றியது. அதன் தலைவராக கலாநிதி சேர்லி அமரசிங்கா இருந் தார். அவருடன் பலமுறை சிறி மாவோ பண்டாரநாயக்கா கலந் தாலோசித்தார். அவர் நடுவூடான (MEDIAN) எல்லைக்கோட்டின் தன்மையை நன்றாக விளங்கப் படுத்தினார். 1921 ஆம் ஆண்டு நடுவூடான (MEDIAN) எல்லைக் கோட்டை வரைவதற்கு இந்தியா சம் மதம் தெரிவித்திருந்தது. அதனை யும் சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிந்துகொண்டார். பிரதமர் டட்லி சேனநாயக்காவுடன் நடைபெற்ற பேச்சுகளின் பொழுது அவ்வாறு எல்லைகள் கீறுவதற்கு இந்தியா மீண்டும் இணங்கிக் கொண்டது. அவ்விடயம் பற்றி சிறிமாவோ அம்மையார் டட்லியிடமிருந்து எழுத்துமூலம் ஒரு கடிதத்தைப் பெற்றார். அக்கடிதத்தை இந்திரா அம்மையாருக்கு அனுப்பிவைத்தார்.

உலகநாடுகளின் நடைமுறைப் படி ஆள்புலக் கடலின் நீளம் 12 மைல் என்பதையும், மூன்றாவது ஐ.நாவின் கடல் சட்ட சமவாயத் திற்கான மாநாட்டில் அவ்வாறே சமவாயச் சட்டத்தில் ஏற் றுக்கொள்ளப்படும் என்ற விடயத்தையும் அறிந்துகொண்டார் சிறிமாவோ. அத்தோடு, எதிரானதும் அருகாமையில் இருக்கும் நாடுகளிற்கிடையுள்ள ஆள்புலக்கடல் எல்லையை அவ்வவ் நாடுகளின் இணக் கப்பாட்டுடன் தீர்மானிக்கலாம் என்ற ஊறுப்புரை மூன்றாவது சமவாயத்தில் ஏற்றுக்கொள்ளப் படுமென்பதையும் முன்கூட்டியே அறிந்துகொண்டார். அவ்வாறு எல்லைக்கோடு வரையும் பொழுது




கச்சதீவு இலங்கையின் எல்லைக் குள் வரும் என்பதை நன்றாக அறிந்து கொண்டார். அதன்பின் சிறிமாவோ சாதுரியமாக சாதனை படைத்துக்கொண்டார்.

### மீன்பிடிக்கும் உரிமை

இவ்வுடன்படிக்கையின் பிரகாரம் இந்திய மீனவர்களுக்கு கச்சதீவைச் சார்ந்த கடற்பரப்பில் மீன் பிடிக்கும் உரிமை எவ்விதத்திலும் கொடுக் கப்படவில்லை. 'இந்திய மீனவர்கள் அவர் களது வள்ளங்கள், இலங்கை யின் எல் லைக் கோட்டிற் குள் அமைந்திருக் கும் வரலாற்றுக் கடல், ஆள்புலக் கடல், பிரத்தி யேகப் பொருளாதார வலயக் கடல் பரப்புகளுக்குள் இலங்கையின் அனுமதியின்றி உட்பிரவேசிக்கவோ, மீன்பிடிக்கவோ முடியாது' எனத்திட்டவட்ட மாக எழுதப்பட்டிருக்கின்றது. ("The fishing vessels and fishermen of India shall not engage in fishing in the historic waters the territorial sea and exclusive economic zone of sri lanka..... without the express Permission of Srilanka")




### வெட்ஜ வங்கி

இந்தியப் பேரரசே! உங்களது கன்னியாகுமரிக்கு(COMORIN POINT) அருகாமையிலுள்ள வெட்ஜ வங்கி (WADGE BANK) என்ற இடத்தின் கடல்சார்ந்த பகுதியில் - அந்த வெட்ஜ வங்கி கடலோரத்தில் - இலங்கை மீனவர்கள் பத்து வருடங்களுக்கு மீனபிடிப்பதற்கு நீ ஒத்துக்கொண் டாயே. அது உனது பெருந்தன்மையா? அல்லது சிறிமாவோவின் இராஜதந்திரத்தின் வெற்றியா?

டில்லிப் பேரரசே! அவ்வாறு கச்சதீவின் கடல் பரப்பிலும் மீன்பிடிக்கும் உரிமையை நீ பெறவில்லையா? இந்தியக் குடியரசே! இது உனது சாணக்கியத்தில் ஏற்பட்ட இழுக்கா?

அவ்வேளையில் யார் தெரியுமா தமிழ்நாட்டு முதல்வர்? கலைஞர் கருணாநிதி. அவர் என்ன செய்தார்? இந்தியப் பிரதமருடன் கதைத்தாரா? சர்வகட்சி மாநாட்டைத் தமிழ் நாட்டில் கூட்டினாரா? தமிழக மீனவர்களின் பாதக நிலையை விளக்கினாரா? அல்லது சாகும் வரை உண்ணாவிரதம் இருந் தாரா? நாடகம் எழுத வல்லவர். கடிதம் எழுத வல்லவர். கடிதம் எழுதினாரா? தமிழக மீனவர்களுக்கும் பத்து வருடமோ, ஐந்து வருடமோ கச்சதீவுக்கடல் பிரதேசத்தில் மீன்பிடிக்க அனுமதி வேண்டும் எனக் குரல் கொடுத் தாரா? சிறு அறிக்கைதனை விடுத்துவிட்டு அமைதி கண்டார். டில்லிப் பேரரசே! இது சிறிமாவோவின் இராஜதந்திரத்தின் வெற்றியல்லவா?

### 83 கலவரம்

83 இனக்கலவரம் எல் லோருக்கும் தெரியும். இலங்கைத் தமிழர்கள் தமிழ் நாட்டிற்கு ஓடி வந்தனர். காந்தி தேசமே! நேருவின் பஞ்ச சீலமே!! அப்பொழுது என்ன செய்தீர்கள்? தமிழ் நாட்டுத் தமிழர்களாக இருந்தாலும் சரி, டில்லி ஆட்சியாளர்களாக இருந் தாலும் சரி என்ன செய்தீர்கள்? "அஹிம்சாவழிப் போராட்டத்தைக் கையாளுங்கள், இரத்தமின்றி, கத்தியின்றி மகாத்மாகாந்தி யுத்தம் ஒன்று செய்தார், சத்தியாக்கிரகப் போராட்டத்தின் மூலம் வெற்றி கண்டார், வன்முறை வேண்டாம், ஏ.கே.47 வேண்டாம், அஹிம் சாவழியே சிறந்தவழி, அதனைப் பின்பற்றுங்கள். நாங்களும் உதவுவோம்!" - என்று புத்திமதி கூறினீர்களா?

இந்த யுத்தம் இங்கு முடிந்த பின்பு கலைஞர் என்ன கூறினார்? வன்முறையில் இறங்கியது பிழை. அஹிம்சாவழியைத்தான் பின் பற்றியிருக்கவேண்டும். நாங்களும் அப்பொழுது துணை நின்றி ருப்போமென அஹிம்சா மூர்த்தியாகப் புத்திமதி வழங்கினார் கலைஞர் கருணாநிதி. ஆறு இலங்கை இயக்கங்கள் தமிழ் நாட்டிலிருந்துகொண்டு வன்முறை மூலம் இலங்கை அரசுடன் போர் செய்தனரே? ஆறு இயக்கங் களுக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபா வழங்கினாரே கலைஞர்? தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஐம்பதாயிரம் ரூபா அன்பளிப்பை ஏற்க மறுத்தாரே? ஞாபகம் வருகிறதா? பயங்கரவாதத்தை நீங்கள் தூண்டிவிடவில்லையா? வளர்த்து விடவில்லையா?

டில்லிப் பேரரசே! நீ என்ன செய்தாய்? ஆறு இயக்கக் குழுக் களாகப் பிரித்து, யுத்தப் பயிற்சி கொடுக்கவில்லையா? அவர்க ளுக்கு உணவு கொடுத்து, வதி விடம் கொடுத்து இலங்கைக்குள்


(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாள் தேவஸ்தானம்

## ண்டிலிப்பாய்

## வ சிறப்பிதழ் - 2010






### மகோற்சவ குருவின் ஆசிச்செய்தி



அண்டமெல்லாம் பரந்து விரிந்து உறைகின்ற ஆதி பராசக்தியானவள் அடியவர்களுக்கு அருள்புரியும் பெருநோக்கோடு உருவத்திருமேனி கொண்டு சீரணிப்பதியில் நாகபூஷணியாக உறைகிறாள். அம்பிலகயின் அற்புதங்கள் ஏராளம். நாடி வருகின்ற அடியவர்களின் துயர்களைத் துடைத்து அவர்களை தன்பால் ஈர்த்துக் கொள்ளுகிறாள். அன்னையின் ஆலயத்திற்கு வருகின்ற அடியவர்களின் பக்திப்பரவசத்தால் ஆலயம் தெய்வீக மணம் கமிழ்கிறது. இத்தனை பெருமை வாய்ந்த அன்னை இன்று சித்திராப் பௌர்ணமியில் தேரேறி வருகிறாள். அற்புதக் கோலங்கொண்டு எழில்பொங்க அடியவர்கள் காவடியோடு கற்பூரச்சட்டியேந்தி ஆரோகரா எனும் பேரோளியோடு அம்பிகை ஆடி வருகிறாள். அம்பிகையைப் பாடுவார் ஒருபுறம் ஆடுவார் ஒருபுறம். இப்படியான தெய்வீகச் சூழ்நிலையில் ஆனைமுகனும் ஆறுமுகனும் கூடவர அடியார்கள் பின்தொடர தெய்வீகத் தேரேறி வரும் அப்பேரழகை காண்பதற்கு நாம் எல்லோரும் மாபெரும் தவம் செய்தவர்கள் ஆவோம். இன்றைய நல்நாளிலே நாட்டில் அமைதி பொங்க எல்லோரும் அம்பிகையின் திருவருளினால் மகிழ்வுடன் வாழ இறைவியைப் பிரார்த்தனை செய்து ஆசி கூறி அமைகிறேன்.

**சிவஸ்ரீ.பரமேஸ்வர ஜெயகுமாரக்குருக்கள்**
(மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோவில்)

### அறங்காவலர் சபையின் வாழ்த்துச் செய்தி

அம்பிகை வழிபாடு பற்றி ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்ற பிரகாரம் ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் சக்திபீடங்களில் ஒன்றாகிய இலங்கைத்தீவின் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் கிராமத்தில் சீரணி என்றும் திருத்தலத்தில் என்றும் பரிபூரணமாய் கோயில் கொண்டு விளங்கும் சர்வலோகநாயகி ஆன நாகபூசணி அம்பாள் தன்னை நாடி வரும் அடியார்களுக்கு திருவருள் புரிகிறாள்.

வருடாந்த மகோற்சவத்தில் தேர்த்திருவிழாவான இன்று சோதிவடிவில் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்ற தாய்க்கு சித்திரா பௌர்ணமியில் காவலர்களாக விநாயகரும் முருகப்பெருமானும் முன் தேர்களில் பவனி வர பின்னே அம்பிகை சித்திரத்தேரில் ஏறி பவனிவரும் காட்சியைக் கண்டு எம் உள்ளங்கள் மலர்ந்து அன்புப் பெருவெள்ளத்தில் நீந்துகின்றோம். சோதியாய் விளங்கி அருள்புரியும் எம் தாய்க்கு எம் உள்ளங்களை காணிக்கையாக அர்ப்பணிக்கின்றோம்.

### ஆதீனகர்த்தாவின் ஆசிச்செய்தி

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் தாயே
பாற்கடலில் வெண்சங்காக காட்சியளிப்பவளே
பால் உள்ளங்களில் தோன்றும் பாறைகள் போல் காட்சியளிப்பவளே
சித்தர்கள் கூடிவாழும் சீரணி எனும் பதியில் சிறப்புற்று மெய்மறந்து அருளாட்சி புரியும் நாயகியே!
கோடான கோடி மக்கள் உன் பாதத்தை தொழுகின்ற காட்சியைக் காண
துயர் உள்ளங்கள் எல்லாம் தவித்து வாழுகின்றார்கள்
அவர்களுக்கு எல்லாம் காணிக்கையாக தோளோடு தோளாக நின்றாயம்மா
முப்பத்து முக்கோடி மக்கள் கூடுகின்ற உன்பதியில் உன் கண்சிமிட்டலை காண்பதற்கு
எத்தனையோ கோடி கண்கள் வேணுமம்மா
உன்னுடைய பாதார விந்தமெல்லாம் என் பார்வையில் தோன்றுதம்மா
அலை அலையாய் வந்து பக்தர்கள் தேர்வடம் பிடிக்கின்ற காட்சியைக் காண
மனம் சிலிர்க்குதம்மா? ஆகாயத்தில் பந்தல் கட்டி உன் காட்சியைக் காண்பதற்கு
உன் மடியில் நான் உறங்க வேண்டுமம்மா
உன் பாதத்தை நான் எப்பொழுதும் தொழ வேண்டுமம்மா

**த.பரஞ்சோதி** (ஆதீன கர்த்தா)
*சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்*





### ஆலய வரலாறு

கரத்தில் அமைந்துள்ள பதியில் வாழ் இன்புற்ற வேளாளகுலத்தைச் ணராகிய இராமன் சீரணி என்னும் மண்ணில் சிறப்புற்று வாழ்ந்து ருகேசு. முத்தர் இனசன வழியில் பெரிய சாஸ்திரியார் தெய்வானைப் ளை, மயில்வாகனம், பெரியபிள்ளை, சின்னப்பிள்ளை, வேலர் கபூஷணி அம்பாள் வாலாயம் பெற்ற முருகேசுவிடம் சோமவாரநாள் றி தான் இ விடத்தில் சீரணியில் எழுந்தருள வேண்டும் என்றும் கு அமைய சைவ முறைப்படி ஒரு கொட்டகை அமைத்து அதில் பூசை டைத்தார். இம்முறைப்படி இன சன மக்கள் எல்லோரும் சேர்ந்து சு பரம்பரையினர் பரிபாலித்து வருகின்றனர்.

## சிறப்புற வாழ்த்துவோர்

MANIYAM IMPEX
இல.75 (121A),
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

சிவசக்தி
தொலைத்தொடர்பகம்
தொட்டிலடி, சண்டிலிப்பாய்

WORLD & PRINTERS
டை, சண்டிலிப்பாய்.

யாழ்நகரின் நம்பர் 01 கல்வி நிறுவனம்
அக்கடமி
க்குவில், வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய்.

எலைட் சோடா, பிஸ்கட் வகைகள்
கலாபா இண்டஸ்றீஸ்
வல்லை வீதி, சங்கானை

பாக்கியரட்ணம் ஹாட்வெயார்ஸ்
பிரதான வீதி, சங்கானை.

தரன் ரேடர்ஸ்
130, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கம்ஷா களஞ்சியம்
சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்

நவரத்தினம் களஞ்சியம்
கிளை : சீரணிச் சந்தி சண்டிலிப்பாய்

நாகபூசனி அரிசி ஆலை
சீரணிச் சந்தி சண்டிலிப்பாய்

ஐடியல் அக்கடமி
தரம் 3 முதல் A/L வரை திறமையும் அனுபவமும்
வாய்ந்த ஆசிரியர் குழுவுடன்
தலைமையகம் : சீரணிச் சந்தி சண்டிலிப்பாய்.
கிளை 1 : இடைப்பிட்டி, காரைநகர்
கிளை 2 : நீராவியடி, யாழ்ப்பாணம், கிளை 3 : மானிப்பாய்

YASO TEX
பிரதான வீதி, நெல்லியடி.

YASO FANCY
சந்தைச் சதுக்கம் பண்டத்தரிப்பு

உதயன்
கட்டடப் பொருள் வாணிபம்
பிரதான வீதி, சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**



குழப்பங்கள் தடுமாற்றங்கள் இல்லாமல் எதிலும் தெளிவான முடிவு எடுப்பீர்கள். வியாபாரிகள் புதியவர்கள் சிலரின் அனுகூலம் பெறலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள்.

**இடபம்**



ஒரு வழியில் வந்த வரவுகள் மற்றொரு வழியில் செலவாகும். இளைய உடன் பிறப்புகளால் அனுகூலம் கிடைக்கலாம். மனக் குழப்பங்கள் விலக அனுபவம் உள்ளவர்களிடம் ஆலோசனை கேட்டுச் செயற்பட வேண்டியது அவசியம். பிள்ளைகள் வழியில் உருவான பிரச்சினைகள் தீர்விற்கு வரும். கனவுத் தொல்லையுண்டு.

**மிதுனம்**



வாங்கிய கடன் ஒன்றை திருப்பிக் கொடுக்கலாம். உறவினர்கள் தொடர்பான விவகாரங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றிவிட்டு புதிய பொருள்கள் வாங்குவீர்கள். தாய் வழியில் சிறு அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சக ஊழியர்களால் எரிச்சல், கோபம் அடையலாம்.

**கடகம்**



காலை முதல் மாலை வரை சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். சில பொருள்களை வாங்க நினைத்தாலும், மனமில்லாமல் பிறகு வாங்கலாம் என தள்ளிப்போடுவீர்கள். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். மனதில் இனம் புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும்.

**சிங்கம்**



சோர்வு, சோம்பலால் வழக்கமாகச் செய்யும் பணிகளைச் செய்யாமல் தவிர்ப்பீர்கள். வெளியூர்களில் இருக்கும் சிலரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அவர்கள் இல்லாமல் அதிருப்தி அடையலாம். தின்பண்டங்கள், வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்க கணிசமான பணம் செலவாகும்.

**கன்னி**



கடந்த காலத்தில் உங்களை கண்டு கொள்ளாதவர்கள் இப்போது அன்பாக நடந்து கொள்வர். முக்கிய வேலை ஒன்றை பெண்களை நம்பி ஒப்படைப்பீர்கள். தொழில் ரீதியான பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். உடன் பிறப்புக்கள் வழியில் உதவி கிடைக்கலாம். ஆபத்தான பொருள்களை கவனமாக கையாளவும்.

**துலாம்**



திடீர் பற்றாக்குறையைச் சந்திக்கலாம். எந்த விடயத்திலும் அவசரப்பட்டு முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். சில வேலைகளை சரியான நேரத்திற்குச் செய்ய முடியாமல் சாக்குப் போக்குச் சொல்லிச் சமாளிப்பீர்கள். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். உங்களின் யோசனைக்கு சிலர் எதிர்ப்புத் தெரிவிப்பர்.

**விருச்சிகம்**



புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கும். பல நாள்களாக வராமல் இழுத்தடித்த பணவரவு ஒன்று வரலாம். குழந்தைகளின் அல்லது உங்களின் பெருமையான செயற்பாடுகள் பற்றி மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். வியாபாரிகள் சில பொருள்களை அதிக விலைக்கு விற்றுக் கூடுதல் ஆதாயம் பெறுவர்.

**தனுசு**



ஒன்றுக்கு மேற்பட்ட காரியங்களைத் திட்டமிட்டு சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். உறவுப் பெரியவர்கள் உதவிகரமாக இருப்பர். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். சக ஊழியர்கள் சிலர் மூலம் மேற்கொண்ட முயற்சிகள் நல்ல விதமாக முடியும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

**மகரம்**



ஒரு விடயத்தை பற்றி கவலைப்பட்டாலும், மற்றொரு விடயத்தில் சந்தோஷம் அடைவீர்கள். இருக்கும் பணத்தை ஒருவருக்கு உதவியாகக் கொடுத்துவிட்டு நீங்கள் மற்றவர்களிடம் உதவி கேட்கலாம். வீட்டுக்குத் தேவையான பொருள் ஒன்றை அலைந்து திரிந்து வாங்குவீர்கள். தெய்வ வழிபாடு குதூகலம், ஆறுதல் தரும்.

**கும்பம்**



சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். ஒருவர் மீதுள்ள கோபத்தை மற்றவர்கள் மீது காட்டுவீர்கள். உங்களிடம் உதவி பெற்ற சிலரே உதாசீனம் செய்வது கண்டு வருத்தம் அடையலாம். திட்டமிட்ட சில காரியங்கள் எளிதில் முடியாமல் இழுத்தடிக்கலாம். கவனம் அவசியம்.

**மீனம்**



கனிவான பேச்சுக்களால் கல்மனம் படைத்த சிலரிடமும் காரியம் சாதிப்பீர்கள். பழகிய சிலர் மூலம் பணவரவுகளைப் பெறலாம். பிரியமானவர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். உறவினர்களுக்காக சிலரிடம் பரிந்து பேசுவீர்கள். விருந்து, விசேடங்களால் சந்தோஷம் அடைவீர்கள்.

# பாரத தேசத்துக்கு........

*(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

புகுந்து சண்டை செய்யும்படி தூண்டிவிடவில்லையா? பயங்கரவாதத்திற்கு எண்ணெய் ஊற்றியவர்கள் யார்? தமிழீழம் அடைவீர்களென உற்சாகப்படுத்தவில்லையா? டில்லி பேரரசே மறந்துவிட்டாயா?

தமிழர்கள் கேட்கும் வடக்கு, கிழக்கு இணைப்புக் கொடுத்தால், ஒற்றையாட்சி முறையை மாற்றினால், இலங்கையின் இறைமைக்கு குந்தகம் ஏற்படும் என்று சிங்கள அரசியல் தலைவர்கள் கூறிப் பார்த்தனர். டில்லிப் பேரரசே! நீங்கள் அதனை அப்போது கணக்கில் எடுக்கவில்லை. அவர்கள் இராஜதந்திரக் காய் நகர்த்தலில் இறங்கினர். தமிழர்கள் கேட்பதைக் கொடுத்தால் இந்தியாவின் இறைமை சின்னாபின்னப்படும் என்றனர். அவர்களது சாணக்கியத்தில் நன்றாகவே வீழ்ந்துவிட்டீர்கள். விடுதலைப் புலிகளுக்கும் தமிழர்களுக்கும் சாதகமாக இருந்த டில்லியைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொண்டனர். விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்டினீர்கள். தமிழர்களை நடு ஆற்றில் விட்டீர்கள். அவர்களுக்கெதிராக எழும் குற்றச்சாட்டுகளைத் துடைத்தெறிய - தடைசெய்ய - இமயமலை போல் உயர்ந்து துணை நிற்கின்றீர்கள். இது யாருடைய சாணக்கியத்தின் வெற்றி?

ஐரோப்பிய ஒன்றியம் கண்டித்துப் பார்த்தது. அமரிக்கா உறுமிப்பார்த்தது. ஐ.நாவும் அதன் செயலாளர் நாயகமும் ஏதேதோ செய்தனர். அவ்வளவு எதிர்ப்புகளும் ஜனாதிபதி ராஜபக்ஷவின் சாணக்கியத்தில் கரைந்து தேய்ந்தன.

டில்லிப் பேரரசே! சிங்களத் தலைவர்கள் அவர்கள் எவராக இருந்தாலும் அரசியல் சாணக்கியத்தில் எங்கள் தமிழ்த் தலைவர்களிலும் பார்க்க, உங்களது தலைவர்களிலும் பார்க்க, தலைசிறந்தவர்கள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டமையை உணர்வீர்கள்.

டில்லிப் பேரரசே! இந்தியாவிலிருந்து பல படையெடுப்புகள் நடைபெற்றன. படையெடுப்பென்றால் நாடு பிடிப்பது என்பது மட்டுமல்ல. காலத்திற்குக் காலம் இந்தியப் பெரு நிலத்திலிருந்து வந்த குடியேற்றங்கள், மதம், கலை, கலாசாரப் பண்பாடுகள் இவைபோன்ற யாவும் 'படையெடுப்பு' என்ற வார்த்தைக்குள் அடங்குகின்றன. அந்தப் படையெடுப்புகள் யாவும் இந்த சுண்டங்காய் நாடான இலங்கையை விழுங்கிவிடவில்லை. ஐரோப்பிய நாடுகளின் படையெடுப்பு - அவர்களது 450வருட ஆட்சி - இலங்கையை அழித்துவிடவில்லை. சிங்களவர்களின் மொழி, பௌத்த மதம், அவர்களது கலை, கலாசாரப் பண்பாடுகள் சிலிர்த்தெழுந்தன; வளர்ச்சி பெற்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலங்கைக்குள் குடியேறிய வட இந்தியப் பரம்பரையினர் அவர்கள் என கருதப்படுகின்றனர். அவர்கள் இதனை பௌத்த சிங்களத் தீவாகவே உருவாக்கியுள்ளனர். பூரண சுதந்திரத்தையும் இறைமையையும் பெற்றவர்கள் சிங்களவர்கள். உங்களது ஆளுமைக்குள் அகப்படவில்லை.

டில்லிப் பேரரசே! உனக்கு இலங்கை ஒரு சின்னிவிரல் போன்றது. இந்த நாடு தலைநிமிர்ந்து தனித்து நிற்கின்றது. அதன் சித்துவிளையாட்டில் அகப்பட்டு, கட்டுண்டாய்.

தமிழர்களின் முன்னோர்களும் சிங்களவர்களின் மூதாதையினரைப் போல(தென) இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என வரலாறு கூறுகின்றது. எங்களால் தனித்து எழுந்து நிற்கமுடியாமலிருக் கின்றது. உங்களுடைய ஆதிக்கத்திலிருந்து விடுபட முடியாமல் தவிக்கின்றோம். மீள முடியாமல் நசுக்கப்படுகின் றோம். ஏன் இந்த அவல நிலை?

சிங்கள அரசியல் தலைவர்கள் இராஜதந்திர வியூகங்கள் அமைப்பதில் வல்லவர்கள். தமது மதம், தமது மொழி, தமது நாடு வளர்ச்சியடைவதற்கான தூரநோக்கு - சிந்தனை கொண்டவர்கள் அவர்கள். தமிழர்களின் அரசியல் உரிமைகளை வழங்காது 1931 ஆம் ஆண்டு தொடக்கம் பல யுக்திகளைக் கையாண்டவர்கள். 1983 இனக் கலவரம் நடந்தபொழுது நீங்கள் காலடி எடுத்து வைத்தீர்கள். தமிழருக்கு சாதகமாகக் காலடி பதித்தீர்கள். உங்களுடன் முட்டி மோதினால் மிஞ்சுவது அழிவு என்பதை அவர்கள் அறிந்தவர்கள். அதனால் அவர்களுக்குக் கைதேர்ந்த கலை சாணக்கியம். சாணக்கிய நகர்வுகளை முன்னெடுத்தனர். அவர்கள் வைத்த பொறியில் டில்லி பேரரசு சாய்ந்தது. தமிழர்களின் நலனுக்கெதிராக நடந்து கொண்டீர்கள். ★




பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்க ஒரு தங்கமெடல் வழங்குங்கள்.

ரூபா 350 இல் இருந்து

S.S.யசோதரன் ஆட்ஸ்,
381u, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(வண்ணை சிவன் கோயில் அருகில்)



## 12ஆம் ஆண்டு நினைவலைகள்



திருமதி இரத்தினம் சண்முகம்

தோற்றம்
22★04★1934

மறைவு
11★05★1998

திதி: சித்திரைப் பௌர்ணமி

கண்ணிரண்டை இமைபோல காத்திருந்தீர் எமையெல்லாம்
எண்ணுகின்ற போதெல்லாம் இனிமைதான் - அந்நாள்கள்
இன்முகத்தை நாம் இழந்து இன்று - ஆண்டுகள்
பன்னிரண்டு ஆனாலும் என்றும் நாம்- உம் நினைவுடனே....

உங்கள் நினைவுடன்:
மு.சண்முகம் (கணவர்), பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

57, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(97493)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### 02.10.1990

நாவலர் வீதியில் அமைந்துள்ள உதயன் - சஞ்சீவி பணிமனை மீது கடந்த மாதம் 27 ஆம் திகதி இலங்கை விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஊழியர் ஒருவர் மரணம். மற்றும் இரு ஊழியர்கள் அவயவர்களை இழந்ததாகத் தெரிவிப்பு. பொதுமக்களும் வர்த்தகர்களும் எக் காரணம் கொண்டும் யாழ்.நகர மத்தியில் எந்தவித அலுவல்களையும் உடனடியாக ஆரம்பிக்க வேண்டாம் என யாழ். அரச அதிபர் வேண்டுகோள் விடுப்பு.

### 03.10.1990

யாழ்.கோட்டை மோதலின்போது கொல்லப்பட்ட 12 இராணுவச் சிப்பாய்களின் சடலங்களைத் தாம் மீட்டுள்ளதாகவும், அவற்றை அச்சிப்பாய்களின் பெற்றோர்களிடம் அல்லது உறவினர்களிடம் ஒப்படைக்கத் தாம் தயாராயிருப்பதாகவும் விடுதலைப் புலிகள் அறிவிப்பு.

கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து இதுவரை வேலைக்குத் திரும்பாத அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களின் இடங்களுக்கு சமயா சமய அடிப்படையில் கடமையாற்றியவர்களை நியமிக்கவுள்ளதாக அரசு அறிவிப்பு.

### 04.10.1990

அம்பாறை மாவட்டத்தில் இராணுவத்தினரால் கைது செய்யப்படும் தமிழர்கள் வெட்டியும் சுட்டும் படுகொலை செய்யப்பட்ட பின்னர் அவர்களது சடலங்கள் கடற்கரை ஓரங்களில் வீசப்படுவதாக விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டுவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிப்பு.

விமானக் குண்டு வீச்சு மற்றும் ஷெல் தாக்குதல்களினால் சேதமுற்ற யாழ்.ஆஸ்பத்திரியைத் துப்புரவு செய்யும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிப்பு.

### 05.10.1990

மதவாச்சி - மன்னார் வீதியில் காட்டுமாங்குளம் அருகே விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் எட்டு இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பிரச்சினைக்குச் சிநேக பூர்வமான முறையில் இணக்கம் காணப்படவேண்டும். அதற்காக பேச்சு வார்த்தை நடத்த அரசு தயாராக உள்ளது என அமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீத் தெரிவிப்பு.

### 06.10.1990

எமது தாயகப் பூமியை எதிரிகளிடமிருந்து மீட்டெடுத்து சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் வரை தொடர்ந்து போராடுவோம் என தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தெரிவிப்பு.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த இலங்கை அரசு முயற்சி செய்யும் அறிகுறி தென்படுவதாக விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.

### 07.10.1990

கிழக்கு மாகாணத்திலுள்ள அகதி முகாம்களில் தங்கியிருந்த சுமார் 65 ஆயிரம் தமிழ் அகதிகள் ஆயுதக் குழுவொன்றினால் சில தினங்களுக்கு முன்னர் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் காரணமாக அகதி முகாம்களிலிருந்து தப்பி ஓடி காடுகளுக்குள் தங்கியிருப்பதாக கொழும்பில் சுயாதீன செய்திச் சேவைகள் தெரிவிப்பு.

தென்னிலங்கையில் ஜே.வி.பியினர் வெகு வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாகத் தமக்குக் கிட்டிய தகவல்களையடுத்து ஜே.வி.பியின் உயிர் தப்பியிருக்கும் உயர்மட்டத் தலைவர்களின் ஒருவரான சோமவன்ச அமர சிங்கவைக் கைது செய்ய அரசு வலை விரித்துள்ளதாகத் தெரிவிப்பு.

### 08.10.1990

தலைமன்னாரிலிருந்து ஈழத்தமிழ் அகதிகளை ஏற்றிச் சென்ற படகொன்று தனுஷ்கோடிக்கு அருகில் கவிழ்ந்ததால் படகில் இருந்தவர்களில் 17 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் இலங்கை அரசு பேச்சுக்களை நடத்த வேண்டும் என கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் நாகேந்திர நாத் ஜா தெரிவிப்பு.

### 09.10.1990

ஈழத்தமிழ் அகதிகளை ஏற்றிக்கொண்டு தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மற்றொரு படகு கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த 67 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

இலங்கையிலிருந்து தமிழ் அகதிகள் மீண்டும் இந்தியாவுக்குப் பெரும் எண்ணிக்கையில் வருவதற்கு வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசின் வெளியுறவுக் கொள்கையே காரணம் என முன்னாள் பிரதமரும் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவருமான ராஜீவ் காந்தி குற்றச்சாட்டு.

### 10.10.1990

சாவகச்சேரி சந்தையில் கூடி நின்ற பொதுமக்கள்மீது நேற்று நண்பகல் திடீரென வந்த ஹெலிகொப்டரொன்று 'ரொக்கட்' தாக்குதல் நடத்தியதில சந்தைக்கு வந்திருந்த ஒன்பது பொதுமக்கள் உயிரிழப்பு.

வவுனியா மாவட்டத்துக்கு அப்பால் செல்லும் பயணிகள் அனைவரும் இன்று முதல் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அனுமதிப் பத்திரம் பெற்றே பயணத்தை மேற்கொள்ள இயலும் என அம் முன்னணியின் உயர்மட்டப் பிரமுகரொருவர் தெரிவிப்பு.

### 11.10.1990

யாழ்.கோட்டையை விடுதலைப்புலிகள் கைப்பற்றியதைத் தொடர்ந்து குறைந்திருந்த இலங்கை விமானப் படையினரின் விமானத் தாக்குதல்கள் நேற்று மீண்டும் தீவிரமடைந்ததாகத் தெரிவிப்பு.

வடக்கு - கிழக்கு நெருக்கடி குறித்து நியூயோர்க்கில் வைத்து இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ராலுடன் பேச்சுக்களை நடத்தியதாகத் தெரிவிப்பு.

### 12.10.1990

கடந்த சில தினங்களில் வட பகுதியிலிருந்து கொழும்புக்குச் சென்ற இளைஞர்கள், யுவதிகள் நூற்றுக்கணக்கில் பொலிஸாரினால் கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் காமன் வெல்த் முன் முயற்சி எடுப்பதற்குத் தாம் தூண்டுதல் அளிக்கப் போவதாக ஆஸ்திரேலிய அரசு தெரிவிப்பு.

### 13.10.1990

வடக்கு - கிழக்கை நிரந்தரமாக இணைப்பது குறித்து முடிவெடுப்பதற்காக நேற்றுக் கூடிய அனைத்துக் கட்சி மாநாட்டை முஸ்லிம் அரசியல் கட்சிகளின் கூட்டணி பகிஷ்கரித்ததால் பொதுக் கருத்தொன்றை உருவாக்க இயலாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

கிளிநொச்சி வைத்தியசாலைப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றும்வரை வெளிநோயாளர் பிரிவை ஆரம்பிக்க இயலாதென அங்கு சென்று திரும்பிய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தெரிவிப்பு.

### 14.10.1990

இம்மாத இறுதியில் பாரிஸில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பெரும் நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இலங்கை அரசு வட பகுதி மீதான தனது இராணுவ நடவடிக்கைகளைத் தற்காலிகமாகத் தளர்த்தியிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.

யுத்தத்தை உடனடியாக நிறுத்திப் பேச்சு வார்த்தையை மீண்டும் ஆரம்பிக்குமாறு இலங்கை அரசுக்கு நெருக்குதல் கொடுக்குமாறு ஜெனீவாவில் இயங்கும் உலகத் திருச்சபைக் கவுன்சில் சர்வதேச நாடுகளிடம் கோரிக்கை.

### 15.10.1990

பாடசாலை என அடையாளப்படுத்தும் வகையில் இன்று பாடசாலைகள் ஆரம்பமாவதால் மாணவர்களின் நலன்கருதி வெள்ளை நிறமும் கடும் நீலமும் சேர்த்துத் தைத்த கொடிகளைப் பாடசாலைக் கட்டடங்களில் பறக்க விடுமாறு வடமாநில கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் விடுப்பு.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல வைத்தியசாலைகள் இயங்காததால் அகதிகளும் பொதுமக்களும் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கி வருவதாகத் தெரிவிப்பு.

# அமைச்சுக்களின் புதிய செயலாளர்களாக நியமனம் பெற்றோரின் விவரப் பட்டியல்

கொழும்பு, ஏப். 28

அமைச்சுக்களின் செயலாளர்களாக 36 பேர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட் டுள்ளனர். எனினும், இதில் எந்த ஒரு தமிழரும் இடம்பெறவில்லை.

தற்போது நியமிக்கப்பட்டுள்ள அமைச்சுச் செயலாளர்களின் விவரம் வருமாறு:-

* தாரா விஜயதிலக்க - விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சு.
* பீ.பி. ஜயசுந்தர - பொருளாதார அபிவிருத்தி அமைச்சு.
* டபிள்யு.பி. கணேகல - ஊடகத் துறை அமைச்சு.
* மல்காந்தி விக்ரமசிங்க - தேசிய மொழி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு.
* சுகத் கம்லத் - நீதி அமைச்சு.
* எம்.சி.பெர்னாண்டோ - மின்சார சக்தி வள அமைச்சு.
* மஹிந்த மடிஹஹேவா - தொழில் உறவுகள் அபிவிருத்தி மேம்பாடு அமைச்சு.
* திலக்கொலுரே - சிறுகைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு.
* ஏ.எப்.கமகே - கால்நடை வள அமைச்சு.
* கோட்டாபய ராஜபக்ஷ - பாதுகாப்பு அமைச்சு.
* எல்.லியனகம - விளையாட்டுத் துறை அமைச்சு.
* அசோக பீரிஷ் - காணி அபிவிருத்தி அமைச்சு.
* வி.திஸநாயக்க - புனர்வாழ்வு மற் றும் சிறைத்துறை அமைச்சு
* நிஷங்க விஜேரத்ன - வீடமைப்பு மற்றும் கட்டடத்துறை அமைச்சு.
* சீதா விதான ஆராய்ச்சி - நாடாளுமன்ற நடவடிக்கைகள் அமைச்சு.
* ஆர்.ஏ.டீ.ஆர்.மாலினி பீரிஸ் - பெருந்தோட்டத்துறை அமைச்சு.
* ஐவன் த சில்வா - நீர் வடிகால் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு.
* கே.வி.பி. ரஞ்சன் சில்வா - துறைமுகம் மற்றும் விமான சேவை அமைச்சு.
* எல்.அபேகுணசேகர - நீர்வள மற்றும் நீர் வழங்கல்துறை அமைச்சு.
* அட்மிரால் வசந்த கருணாகொட - பெருந்தெருக்கள் அமைச்சு
* பி.டபிள்யு.சி. ஜயதிலக்க - அஞ்சல் துறை அமைச்சு.
* விமல் ரூபசிங்க - தேசிய உரிமை மற்றும் கலாசார அமைச்சு.
* அசோக ஜெயசேகர - புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சு.
* பேராசியர் தமிதா டி சொய்சா - மீன்பிடி மற்றும் கடற்றொழில் அமைச்சு.
* ஆர்.எச்.எஸ். சமரதுங்க - சுற்றாடல் துறை அமைச்சு.
* வீ. டீ. தஹநாயக்க - தேசிய வைத் திய அமைச்சு.
* டபிள்யு. யமுனா சதுரங்கனி - சமூக சேவைகள் அமைச்சு.
* என்.ஆர். குணசேகர - சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் நடவடிக்கை கள் அமைச்சு.
* டீ.ஆர்.சி. ரூபரோ - சுகாதார அமைச்சு.
* எச்.எச்.ஹேவாபத்திரன - இளைஞர் நடவடிக்கைகள் அமைச்சு.
* எச்.டீ.எம்.ஜெயவர்தன - கனிய எண்ணெய் நடவடிக்கைள் அமைச்சு.
* நிஹால் ஜெயதிலக்க - மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி சபை அமைச்சு.
* அனுர சிறிவர்தன - கூட்டுறவு மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சு.
* டபிள்யு.டபிள்யு.கமகே - அரச வள மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு.
* எஸ்.மர்னா மொஹமட் - அனர்த்த முகாமைத்துவ அமைச்சு.
* பீ.பி. அபேகோன் - அரச முகாமை மீளமைப்பு.

ஆகியோர் அமைச்சுக்களுக்கான செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (சி)

# தமிழ் மக்கள் புலிகள் அமைப்புக்கும் அரசுக்கும் பிரச்சினை கிடையாதாம்!

## அக்கட்சியின் பேச்சாளர் கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.28

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் தமது கட்சிக்கும் இடையில் எவ்விதமான பிரச்சினையும் கிடையாது என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் பேச்சாளர் அஸாத் மௌலானா நேற்று முன்தினம்தெரிவித்தார். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்கட்சி கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் கூட்டுச் சேராது தனித்துப் போட்டியிட்டது. தேர்தலுக்குப் பின் தமது கட்சியின் எதிர்காலத் திட்டம் குறித்து ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய போட்டியிலேயே அக்கட்சியின் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அதில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி கடந்த தேர்தலில் தனித்து நின்று போட்டியிட்டது. கட்சியின் தீர்மானத்துக்கு இணங்கவே அப்படி நடந்து கொண்டோம். ஆனால் கட்சியின் அத்தீர்மானத்தாலோ, நாம் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டதாலோ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் எமக்கு எவ்வித முறுகலும் ஏற்படவே இல்லை. நாம் தொடர்ந்தும் அரசின் பங்காளிகளாகவே செயற்படுவோம். எமக்கு அரசுடன் பிரச்சினைப்பட வேண்டிய தேவை கிடையாது - என்றார். (சி)

# சட்டவிரோதமாகக் கோடா வைத்திருந்தவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் 50 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

சட்ட விரோதக் கசிப்பு, கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா மற்றும் உபகரணங்கள் வைத்திருந்த மீசாலை மேற்கு வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் மூன்று குற்றங்களுக்கும் தலா பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தலா ஆறு மாத கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை நிதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்கினை விசாரித்த நீதிவான் கசிப்பு வைத்திருந்த குற்றத்திற்கு 25 ஆயிரம் ரூபாவும் கோடா வைத்திருந்த குற்றத்திற்கு 15 ஆயிரம் ரூபாவும் உபகரணங்கள் வைத்திருந்த குற்றத்திற்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து அப ராதத் தொகை செலுத்தத்தவறின் முறையே தலா ஒரு வருடம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். அத்துடன் ஒவ்வொரு குற்றத்திற்கும் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

(50-207)

# தென்மராட்சிக் கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

தென்மராட்சி கல்வி வலயத்தில் பின் வரும் பாடங்களுக்கு ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழ், சுகாதாரமும் உடற்கல்வியும், சித்திரம், விவசாயம், மனைவியல், வர்த்தகம், முறைசாராக் கல்வி, விசேட கல்வி, இரண்டாம்மொழி (சிங்களம்) தகவல் தொழில் நுட்பம், சங்கீதம் ஆரம்பக் கல்வி, கணிதம், வாழ்க்கைத் தேர்ச்சி ஆகிய 14 பாடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1 வகுப்பு 2:1 ஐச் சேர்ந்த தகைமையுள்ள ஆசிரியர்கள் விண்ணப்பங்களை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் [illegible] ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். குறிப்பிட்ட பாடத்தை (அல்லது அப் பாடம் சார்ந்த ஏற்புடைய பாடத்துறை) ஒரு பாடமாகக் கொண்ட பட்டம் பெற்றிருப்பதோடு விண்ணப்பிக்கும் பாடத்தில் ஏழு வருடங்களுக்கு குறையாத அனுபவம் பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது விண்ணப்பிக்கும் பாடத்தில் அரச ஆசிரிய கலாசாலை அல்லது தேசிய கல்வி நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சி பெற்றிருப்பதுடன் விண்ணப்ப முடிவு திகதியன்று குறித்த பாடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராக பத்து வருடங்களுக்கு குறையாது தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கற்பித்தல் அனுபவம் கொண்டவராகவும் இருக்க வேண்டுமெனவும் அறிவித்துள்ளார்.

(50-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு பங்குச் சந்தையின் ஐந்தாவது கிளை நேற்று யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்த நிகழ்வில் கொழும்புப் பங்குச் சந்தையின் தலைவர் நிகால் பொன்சேகா, இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழுத் தலைவர் உதயசிறி காரியவாசம், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முறையே முதல் மூன்று படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களை இறுதிப் படத்திலும் காணலாம்.
(படங்கள்: நந்தன்)

# சித்திரை மாதத்துப் பௌர்ணமி விரதம்
## அன்னையை நினைந்துருகி அனுஷ்டிக்கும் சிறப்புடையது

இந்து சமயத்தவர்கள் கடைப்பிடிக்கும் பௌர்ணமி விரதங்களில் சித்திரை மாதத்துப் பௌர்ணமி விரதம் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. இது பெற்ற தாயை இழந்த பிள்ளைகள் தமது தாயை நினைத்து துதிக்கும் பொருட்டு அனுஷ்டிக்கும் புனிதமானதொரு விரதமாகும். அம்மாவை நினையாத நாளும் இல்லை என்றாகும் இந்த விரதம் எல்லா வகைகளாலும் சிறப்புடையது.

இத்தினத்தன்று பொதுவாக அம்மன் கோயில்களில் விசேடமான பூஜைவழிபாடுகள், ஆராதனைகள் இடம்பெறுவது வழக்கமாகும். அந்த வகையில் பெற்றோரைத் தமது முழுமுதற் தெய்வங்களாகக் கொண்டு வருடத்தில் ஒரு நாளை, தம்மை விட்டுப் பிரிந்து போன தமது பெற்றதாயை நினைவு கூர சித்திரை மாதத்துப் பௌர்ணமி தினத்தையும் தமது தந்தையை நினைவுகூர ஆடிமாதத்து அமாவாசை தினத்தையும் நிர்ணயித்து குறிப்பிட்ட அந்த நாள்களில் தம்மைப்பெற்று வளர்த்தெடுத்து இந்த உலகில் வாழச் செய்து மறைந்து போன தம் தாய் தந்தையருக்கு தமது நன்றியையும், பாசத்தையும் வெளிப்படுத்தும் நோக்கில் விரதமிருந்து நினைவு கூரும் வழக்கத்தை இந்து மதத்திலுள்ள சிறப்பம்சமாகக் குறிப்பிட்டுக் கூறலாம்.

**இன்று 28.04.2010 புதன்கிழமை இவ்வாண்டுக்கான சித்திரா பௌர்ணமி தினமாகும். அதனையொட்டி இவ்வாக்கம் பிரசுரமாகிறது.**

பன்னிரு மாதங்களில் சித்திரை மகத்துவம் மிக்கதாகக் கொள்ளப்படுகின்றது. சித்திரா பூரணை, சிவனார் பெருங்கணக்கர் சித்திராபுத்திரனாரின் புராணம் படிக்கப்படும் சிறப்பு மிக்கதொரு நாளாகும். பாவபுண்ணியக்கணக்கின்படிதான் எமது பிறப்பும் வாழ்வும் அமைகிறது என்பது இந்து மதத்தவர்களது நம்பிக்கை. அதேபோன்று எமது அந்தப் பாவ புண்ணியக் கணக்கை இறைவன் சித்திரபுத்திரனார் மூலம் நடைமுறைப்படுத்துகிறான் என்பதும் இந்து மதத்தவர்கள் மத்தியில் நிலவி வரும் நம்பிக்கையாகும். இதனால் சித்திரா பௌர்ணமியன்று சித்திரபுத்திர நாயனாருக்கு கௌரவமளித்து புராணம் படிக்கப்படும் வழக்கம் எம் மத்தியில் நிலவி வருகின்றது.

அதேபோன்று எம்மைப் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கி மறைந்துபோன தாயின் தியாக உணர்வுக்கு நன்றி செலுத்தும் விதமாக கோயில்களில் கஞ்சி காய்ச்சி பசித்தோரின் பசிதீர்க்கக் கஞ்சி வார்க்கும் வழக்கமும் ஆண்டாண்டு காலமாக எம் முன்னோரால் தொடர்ந்து கடைக் கொள்ளப்பட்டு வந்த வழக்கமாகும். அதனைச் சைவர்களாகிய நாம் இன்றும் தொடர்ந்து கடைக்கொண்டு வருவது போற்றற்குரியதொன்றே.

சித்திரா பௌர்ணமி விரதம் குறித்து இந்து மதத்தவர் மத்தியில் கர்ண பரம்பரைக் கதைகள் பல நிலவி வந்த போதிலும் இன்றைய கால கட்டத்தில் இவ்விரத தினம் குறிப்பாக எம்மைப் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிவிட்டு எம்மை விட்டுப் பிரிந்து இறையடி சேர்ந்த எமது அன்னையர்களைப் பக்தி பூர்வமாக மனதில் இருத்தி நினைவு கூரும் ஒரு சிறப்பு விரதமாக நம் மத்தியில் நிலைபெற்றுத் திகழ்கிறது.

இவ்விரதம் பெற்றதாயை நினைவு கூரும் விரதமாக மட்டுமல்லாது அம்பாளின் திருமண நாளின் நினைவாகவும், சித்திர புத்திரனிடம் மரணபயம் நீக்கியருள வேண்டுதல் செய்யும் விரதமாகவும் எம்மால் அனுஷ்டிக்கப்படுகிறது.

அந்த வகையில் சைவ சமயிகளான நாம் இன்றைய சித்திரா பௌர்ணமி தினத்தன்று புனிதமான இத் தினத்தில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளைக் கடைக் கொண்டொழுகி இறையருள் பெற்று இன்புறுவோமாக!


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 15.05.1928
உதிர்வு: 09.05.2009

அமரர் நடராஜா திலகவதி

ஆண்டு ஒன்று மறைந்தாலும் கண்ணீர்
நிற்கவில்லை சின்னம்மா
நாம் வாழும் காலங்கள்வரை
உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது.

(97357)

நீங்காத நினைவுகளுடன்:
கலைஞானசிங்கம் தியாகேஸ்வரி,
க.இராசமணி, த.கமலேஸ்வரி,
ந.நாகேஸ்வரி,க.மகேந்திரன்

சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.


## சமய சந்திதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.28

புங்குடுதீவு, பாணாவிடை சிவன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

* * *

வடமராட்சி,ஏப்.28

பருத்தித்துறை, கொட்டடி சித்திவிநாயகர் கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் 10 மணிவரையிலான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேகத்திற்கான கிரியைகள் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றது. 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணி முதல் மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தல் இடம்பெறும்.

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் ஆலயக் குருக்கள் முத்தமிழ்க் குருமணி சகலாகம சங்கிரகர் சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இந்து மதகுரு பீடாதிபதி சுதுமலை சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வரக் குருக்கள் ஆகியோர் அருளாசி வழங்குவார்கள்.
(204-236)


## ஸ்ரோர் வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகில் ஒரு பார ஊர்தி நிறுத்தக் கூடிய இட வசதியுள்ள 3800 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட ஸ்ரோர் வாடகைக்குண்டு.
தொடர்பு கொள்ளவும்.
0212227678, 0776166123

## தவறிவிட்டது

நீர்வேலி மத்தியைச் சேர்ந்த பழனிசாமி ரஜிதா என்பவரது தேசிய அடையாள அட்டை (877983722 V) யாழ்.நகரில் 12.04.2010இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் T.P.யுடன் தொடர்பு கொள்ளவும். T.P. 077 4396698
(97360)

## விற்பனைக்கு

டொல்பின் வான் 253 xxxx YEAR 1995 dual A/C விற்பனைக்குண்டு.
T.P.: 077 1754667
(97355)

# VACANCIES

நாவற்குளி, கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**Course Counsellor - Female - 2 Positions**

> Should be a confident individual with pleasing personality, good command in English language and computer literacy is essential, Age between 19-23 years, School leavers also considered. Training will be provided (கொழும்பிலும் பயிற்சிகள் வழங்கப்படும்).

**Student Relation Officer - Female - 2 Positions**

> The applicant should possess a good pass in G.C.E. A/L, Basic Computer Knowledge is essential. Age between 19-23 years, School leavers also considered. Training will be provided (கொழும்பிலும் பயிற்சிகள் வழங்கப்படும்).

**Computer Instructor - Female - 3 Positions**

> The applicant is expected to teach Office Package, Graphic Desjgn, DTP, C, C++, Visual Basic, Java, Quick Books, Tally, Information Technology, Web Design & Development. Recognised Advanced Diploma Holders with good English knowledge can Apply, Training will be provided.

**Computer Lecturer - Female - 2 Positions**

> The applicant is expected to teach Computer Programming, Web Design, Tally Accounting, Hardware & Networking, Multimedia Subjects.

**Apply with in 7 days**

**ASIAN - CSC COMPUTER EDUCATION**
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677



நீங்கா நினைவுகளில்...
## ஓராண்டு நினைவஞ்சலி

உறவுகள் மகிழ்ந்திட : 15.08.1945
உறவுகள் மறுகிட : 08.05.2009

திதி: சித்திரை பௌர்ணமி

## அமரர் நாகமுத்து பூர்வீகநாதன்

பூப்போலத் தேகம்
புறப்பட்டதோ அன்று
இறுதிப் பயணத்திற்காய்
ஓடித்திரிந்து உலாவிய இதயம்
நிரந்தரமாய் உறங்கியது ஏன் ஐயா
உயிர்க்கு விலைபேசும்
இவ்வுலகம் தன்னில்
வாழ்வது எதற்கென்றா
பரமனடிபணிந்தீர்
நரம்பறுந்த வீணையாய்
நாதம் (ன்) இன்றி
இருளாச்சு எம் இல்லம்
நல்லவர்கள் வாழ்வதில்லை- இது
நான் மறையின் தீர்ப்பு ஐயா...!
'உம்மைப் பற்றிய நினைவுகள்
இருக்கும் வரை நீர் இறக்கவில்லை'

(97362)

இலகடி,
சங்கானை.

என்றும் நினைவில் நிறைந்த உறவுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் பெண்களுக்கான (15 வயதுப் பிரிவு) கரப்பந்தாட்டத்தில் சம்பியன் வென்ற அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வீராங்கனைகளை முதலாவது படத்திலும் இரண்டாம் இடம்பெற்ற அளவெட்டி அருணாசலம் வித்தியாலய வீராங்கனைகளை இரண்டாவது படத்திலும் காணலாம்.
(படங்கள்: நேசன்)

# மாவட்ட மட்டப் பெருவிளையாட்டுப் போட்டிகள் 2ஆம் திகதி ஆரம்பம்; 24ஆம் திகதி வரை நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றன. 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடை பெறவுள்ளன.

இதில் 19 வயது ஆண்களுக்கான மென் பந்துக் கிரிக்கெட் போட்டி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு கனகரட்ணம் ம.ம.வி, யாழ்.இந்துக் கல்லூரியிலும்-

19 வயதுப் பெண்களுக்கான மென்பந்துக் கிரிக்கெட் போட்டி திங்கட்கிழமை 8.30 மணிக்கு யாழ்.கனகரட்ணம் ம.ம.வியிலும்-

17, 19 வயது ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரியிலும்- 19 வயதுப் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரியிலும்-

19 வயது பிரிவு ஆண், பெண் இரு பாலருக்குமான கபடிப் போட்டி 5ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியிலும்-

19 வயது ஆண், பெண் இருபாலருக்குமான மேசைப்பந்து, கூடைப்பந்து போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியிலும்-

15,17,19 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி 10ஆம், 11 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியிலும்-

15,17,19 வயது ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி 12ஆம், 13ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணி வரை ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயத்திலும்-

19 வயது ஆண்களுக்கான பட்மின்ரன் போட்டி 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும்-

19வயது பெண்களுக்கான பட்மின்ரன் போட்டி 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும்-

15,17,19 வயது பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை முத்துத்தம்பி ம.வியிலும்-

15,19, வயது ஆண்களுக்கான சதுரங்கப் போட்டி 17ஆம் திகதி காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை யாழ். இந்துக் கல்லூரியிலும்-

15,19 வயது பெண்களுக்கான சதுரங்கப் போட்டி 18ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரியிலும்-

19வயது ஆண், பெண் இருபாலருக்குமான எல்லே போட்டி 19ஆம் திகதி காலை 8.30 மணி முதல் யாழ்.மத்திய கல்லூரியிலும்-

19 வயது ஆண், பெண் இரு பாலாருக்குமான கரம்போட்டி 20ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரியிலும்-

மெய்வன்மைப் போட்டிகள் 21 ஆம், 22ஆம், 23ஆம் திகதிகளில் மெய்வன்மைப் போட்டிகள் திகதிகளில் மூன்று நாள்கள் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரையாழ் சென்.பற்றிக்ஸ்கல்லூரியிலும்-

5,19 வயது ஆண், பெண் இருபாலருக்குமான உடற்பயிற்சிப் போட்டி 24ஆம் திகதி காலை 8.30 மணி முதல் யாழ்.மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. (6-23)

## யாழ்.கல்வி வலய கபடிப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற ஆண், பெண் இரு பாலருக்குமான கபடி சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:

ஆண்கள் பிரிவு

கொக்குவில் இந்துக் கல்லூரி (முதலாவது இடம்), யாழ். மத்திய கல்லூரி - இரண்டாமிடம், யாழ். கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம் (மூன்றாவது இடம்).

பெண்கள் - பிரிவு

கொக்குவில் இந்துக் கல்லூரி (முதலாவது இடம்), யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரி (இரண்டாமிடம்), உரும்பிராய்இந்துக் கல்லூரி (மூன்றாவது இடம்). (6-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## வலிகாமம் வலய கரப்பந்தாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனா சம்பியன்

வலி.வடக்கு, ஏப்.28

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சம்பியனாகியுள்ளது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதின.

இரு அணிகளுமே சமபலம் கொண்ட அணிகள் என்பதை நிரூபிக்கும் வகையில் முதல் இரண்டு சுற்றுக்களில் ஒவ்வொரு சுற்றையும் ஒவ்வொரு அணிகளும் வெற்றி பெற்று, வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் மூன்றாவது சுற்றை ஆக்ரோஷமாக ஆடின.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல்சுற்றை மகாஜனாக் கல்லூரி 25:12 புள்ளிகள் என வெற்றி பெற்றது.

இரண்டாவது சுற்றை அருணாசலம் வித்தியாலயம் 25:10 புள்ளிகள் என வெற்றி பெற்றது. மூன்றாவது சுற்றை இரண்டு அணிகளும் வெற்றிபெற வேண்டும் என்ற துடிப்புடன் விளையாடிய போதிலும் இறுதி நேரத்தில் மகாஜனக் கல்லூரி 25:21 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி முதல் இரண்டு சுற்றுக்களையும் 25:11, 25:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைக் கைப்பற்றியது. (6-86)

## பருத்தித்துறை உதயதாரகையின் உதைபந்தாட்டம்; அண்ணா சிலையடி வி.க., நவசக்தி வி.க. வெற்றி


யாழ்ப்பாணம், ஏப்.28

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலையின் அனுசரணையுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கற்கோவளம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டங்களில் நவசக்தி விளையாட்டுக் கழகம், அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் அண்ணாசிலையடி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் (பி) அணி மோதிக்கொண்டது. இதில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய கலட்டி விளையாட்டுக் கழகம் (பி) அணியை 4:0 என்ற கோல்களால் வெற்றிகொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் நவசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் நவசக்தி விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய யங்கம் பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

(6-23)



யாழ். கல்வி வலயப் பாடசாலைகளின் ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ். இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்கள் மோதுவதைக் காணலாம்.
(படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.வண்ணை காமாட்சி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் அம்பாள் தேருக்கு எழுந்தருளுவதை முதலாவது படத்திலும், சுவாமி தேரில் ஆரோகணித்து பக்தர்கள் புடைசூழ வீதிவலம் வருவதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.
*(படங்கள்:கரன்)*

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

கண் மகிழ 28 ★ 08 ★ 1947



கண் நெகிழ 08 ★ 05 ★ 2009

### திருமதி குழந்தை செல்லம்மா

திதி: பூரணை

அச்சுவேலி எனும் ஊரில் வந்துதித்த உத்தமியே
பாசத்துடன் பரிவு காட்டிய பண்பின் சிகரமே
ஆண்டொன்று ஆனாலும் ஆறாது எம் துயரம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை
வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

3ஆம் கட்டை,
கல்வியங்காடு.

(97369)

## ஓய்வூதியப் புத்தகத்தை பெற்றுக்கொள்ளவும்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய பணம் செலுத்திய பயனாளிகளுக்கு மிகுதிப் பணம் கட்டுவதற்கான புத்தகமும் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொண்டதற்கான உறுதிகளும் பிரதேச செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் செயலக சமூக சேவைப் பிரிவிற்கு உடன் வந்து உறுதிகளைப் பெற்றுச் செல்லுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா அறிவித்துள்ளார். (50-100)

## மீள்குடியமர்ந்தோருக்கு சிமெந்து விநியோகம்

நவாலி.ஏப்.28

வன்னியிலிருந்து வந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களில் கூரைத் தகடுகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை முதல் சிமெந்து பைக்கற்றுக்கள் முன்னுரிமை அடிப்படையில் மானிப்பாய், பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

சம்பந்தப்பட்டவர்களை உடன்சென்று பைக்கற்றுக்களைப் பெற்றச் செல்லுமாறு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கேட்டுள்ளார். (50-100)


### காணி விற்பனைக்கு

நவாலி தெற்கில் விசாலமான பாதையோரமாக கிணறடங்கிய 5ப. 6.6கு. காணி விற்பனைக்குண்டு.
காத்திரமானவர்களின் தொடர்புகளுக்கு
✆:0779676128

### Jeyatheebam Investments Ltd.

No.31, Cross street, Nallur, Jaffna.

**திறப்பு விழா அழைப்பு**

காலம்: இன்று (2010.04.28) புதன்கிழமை
நேரம்: காலை 9.30 மணி

தலைமை:
திரு .R. ரவீந்திரகுமார்
(Board of Chirman Jeyatheebam Investments Ltd)

பிரதம விருந்தினர்:
திருமதி ஜே.யற்குணராசா [முதல்வர், யாழ்.மாநகர சபை]

சிறப்பு விருந்தினர்கள்:
திரு.K.கஜேந்திரன் (Managing Director Jeyatheebam Investments Ltd)
திருமதி M.வசந்தகுமார் [உள்ளூராட்சி உதவி ஆணையாளர்]
திரு.P.செந்தில்நந்தனன் [பிரதேச செயலர், நல்லூர்]

கௌரவ விருந்தினர்கள்
Dr. V. தியாகராஜா (இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்)
வணபிதா. குறூஸ் அடிகளார் (திருநெல்வேலி, கோப்பாய் பங்குத் தந்தை)
திரு.சுனில் கமகே (கம்பனியின் செயலாளரும், கணக்காளரும்)
திருமதி R. மகாலிங்கம் (ஜே.108 கிராம அலுவலர், நல்லூர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
தொ.பே: 021 222 1721 ஜெயதீபம் முதலீட்டு நிறுவனம்.


## தகாக்காலப் பேரிழப்பு இயம்பும்

## 45ஆம் நாள் நெஞ்சம் நெகிழ்ந்த நினைவலைகள்

### அமரர் திருச்செல்வம் கபிலநாத்

(மாணவன்,யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாதாரணதரம் - 2009)

ஆண்டவன் படைப்பு
06 . 05 . 1993

அநியாய அழிப்பு
14 . 03 . 2010

பொக்கிசமாய் எமக்குக் கிடைத்தவனே
பாதியிலே எமை பரிதவிக்க விட்டு
எங்குதான் சென்றாயடா?..
உன் கண்களிலிருந்து கண்ணீரை
நீசிந்த நாம் விட்டதில்லை
இன்றோ எமை தேம்பி அழவிட்டு
நீ சென்றுவிட்டாயடா...
படுபாதக அரக்கர்கள் பணத்தாசை
பேய்ப்பலிக்கு
உன்னை பாதியிலே எமைவிட்டு
பறித்துவிட்டனர்
தேற்றவும் முடியவில்லை கண்ணீரும்
ஓயவில்லை
உன் மழலைப் பேச்சினை உன்
வசீகரச் சிரிப்பினை
எங்கும் தேடுகின்றோம் காண
முடியவில்லையடா..

கடைக்குட்டியாய் எமக்குக் கிடைத்தாயடா
"கபிக்குட்டி" "கபிக்குட்டி" எனக்
கூப்பிட்டு களைத்துவிட்டோம்
அக்காமார் அண்ணன்மார்
ஐவருக்கும் நடுவில்
உன்னைவைத்து அழகுபார்த்து
வளர்த்தோமடா..
இன்றோ கற்பனையில் எட்டமுடியா
தூரத்திற்கு எமைவிட்டு ஏன்
சென்றாயடா?
இவ்வுலகில் விதிதானே வலியது
நாம் தோற்றுவிட்டோமடா....
இதயத்தைப் பிசைந்து எம்
கண்ணீரைக்
காணிக்கையாய் உன்பாதங்களில்
மலராகத் தூவுகின்றோம் ஏற்றுக்
கொள்வாயடா?



கடந்த 14.03.2010 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்த எமது தெய்வக்குழந்தையின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொண்ட எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்.

குடும்பத்தினர்.
அருள்விநாயகர் ட்ரேடர்ஸ்.
அருள்விநாயகர் மோட்டோர்ஸ்.

பெரியரசடி வீதி,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொடரும் ஆள்கடத்தல், கொலைகள், கப்பம் கோரல்

# வடக்கில் நடக்கும் அக்கிரமம், அடாவடித்தனங்களை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்

### மாவை சேனாதிராஜா விடுத்த அறிக்கையில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 28

வடக்கில் தொடரும் ஆள்கடத்தல்கள், கப்பம் கோரல், கொலைகள் போன்ற அக்கிரமங்களை - அடாவடித்தனங்களை - தடுத்து நிறுத்தி மக்களின் பாதுகாப்பை அரசும், பாதுகாப்புத் தரப்பும் உறுதி செய்ய வேண்டும். இவ்வாறான கொடூரச் சம்பவங்களுக்குப் பின்னால் இருப்பவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்க வேண்டும்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

போர் முடிவுக்கு வந்துவிட்டது என்று அரசு அறிவித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் ஆள்கடத்தல்கள், பாலியல் வல்லுறவு, கோடிக்கணக்கில் கப்பம் பெறுவது, அதற்காகவே கொலைகள் நடைபெறுவது குறிப்பாக வடபகுதியில் தொடர்கின்றமையால் மக்கள், இளம் சமூகம், மாணவர்கள் மிகுந்த அச்சமும் பீதியும் அடைந்துள்ளனர்.

அப்படிச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்று அரசு தரப்பில் வெளியிடப்படும் செய்திகள் கடத்தல்கள், கப்பம் பெறுதல் அவைகளுக்காகவே கொலைகள் தொடர்வதை மூடி மறைக்கவும், அச்சம்பவங்கள் தொடர்வதற்குமே வழிவகுக்கும்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் திருச்செல்வம் கபிலநாத் (14/03/10இல்) கப்பம் பெறுவதற்குக் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம்; வவுனியாவில் இளைஞன் கிருஷ்ணகோபாலன் (28/03/10இல்) கடத்தப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவம்; வன்னியிலிருந்து மானிப்பாய் வந்த இளம் பெண் (1804/10இல்) கடத்திக் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய சம்பவம்; யாழ். நவாலியிலும், மானிப்பா யிலும் (20/04/10இல்) மகேந்திரன், மகேஸ் வரன் இருவர் கடத்தப்பட்ட சம்பவம்; வவுனியாவில் (25/04/10இல்) அரசு மருத் துவமனைப் பக்கத்தில் தம்பிராசா ஜெயந் தன் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் அதற்கான காரணங்கள், கைது செய்யப்பட்டதற்கான தகவல்கள், இச்சம்பவங்களுக்குப் பின்னால் செயற்பட்டுவரும் நபர்கள், அரசியல் சக்தி எது என்ற விவரங்களைக் காவல் துறைத் தலைமையகம் வெளியிட வேண்டும் என வற்புறுத்துகின்றேன். இத்தகைய தொடர்கதைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என வடபகு திக்குப் பொறுப்புள்ள பாதுகாப்புத் தரப்பினரையும் அரசையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இத்தகைய கடத்தல்கள், கப்பம் பெறுதல், பாலியல் வல்லுறவு, கொலைகள் தொடர்பில் உண்மை அறியும் உரிமையின் அடிப்படையில் பொதுநல வழக்குகளைத் தாக்கல் செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இரத்தத்தை உறையவைக்கும் பீதியும், அச்சமும் நிறைந்த இத்தகைய செயல்கள் தொடர்வதற்குப் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். இத்தகைய ஈனச்செயல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காக அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம்.

அரசின் பாதுகாப்பிலும், அரசின் செல்வாக்கையும் பயன்படுத்தி இத்தகைய செயல்களின் பின்னால் இருக்கும் சக்திகள் இனங்காணப்பட வேண்டும். சட்டம் ஒழுங்கு நீதி இருப்பதாக இருந்தால் இக்கொடூர சம்பவங்களுக்குப் பின்னால் இருப்பவர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என வற்புறுத்துகின்றோம்.

அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய அரசும், பாதுகாப்புத் துறையும் இத்தகைய சம்பவங்களை உடன் தடுத்து நிறுத்த வேண்டும். அப்பாவிப் பொதுமக்களின் அன்றாட நடவடிக்கைகள், சுதந்திர நடமாட்டம், பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்துகின்றோம் என்றுள்ளது.

# தனியார்துறை வேலைவாய்ப்பு வங்கி; நாளை முதல் விண்ணப்பிக்க முடியும்

### யாழ். வணிகர் கழகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினால் புதிதாகத் தொடங்கப்படவுள்ள தனியார் துறைகளுக்கான வேலைவாய்ப்பு வங்கி ஊடாக வேலைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிற்றூழியர்கள், விற்பனையாளர்கள் (சேல்ஸ்மன்), எழுதுவினைஞர்கள், கணனி இயக்குநர், விற்பனைப் பிரதிநிதிகள், உதவிக் கணக்காளர், கணக்காளர், உதவி முகாமையாளர், முகாமையாளர் போன்ற துறைகளில் வேலைவாய்ப்புப் பெற விரும்புபவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

தகுதி உடையவர்கள் சுயவிவரத்துடன் கூடிய விண்ணப்பங்களை நாளை வியாழக்கிழமை தொடக்கம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை யாழ். வணிகர் கழ கத்தில் சமர்ப்பிக்க முடியும்.

இதேவேளை மேற்குறித்த துறைகள் தொடர்பான வேலையாள்களைத் தேவைப்படுபவர்கள் யாழ். வணிகர் கழகத்துடன் தொடர்புகொண்டுபெற்றுக்கொள்ள முடியும் எனவும் அதன் தலைவர் அறிவித்துள்ளார். (ஓ-10)

### மக்கள் இடையே பரஸ்பர உறவை மேம்படுத்த

# சிவில் அலுவலகம் செயலகத்துடன் இணைந்து நடத்தும் கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 28

மக்களிடையே பரஸ்பர உறவு மற்றும் தொடர்பாடல் என்பவற்றை மேம்படுத்தும் நோக்குடன் கட்டுரைப் போட்டி ஒன்றைச் சிவில் விவகாரங்களுக்குப் பொதுமக்கள் உறவுகளுக்கான அலுவலகம் நடத்தவுள்ளது.

யாழ். செயலகத்துடன் இணைந்து பாடசாலை மாணவர்கள் மத்தியில் இந்தப் போட்டி இருபிரிவுகளாக நடத்தப்படவிருக்கிறது.

ஜி.சீ.ஈ. (உயர்தர) மாணவர்களுக்கு (21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு) தனியான போட்டியும், திறந்த போட்டியும் நடத்தப்படவுள்ளன.

தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் போட்டிகள் நடத்தப்படும்.

வலயம் மற்றும் மாவட்ட மட்டத்தில் போட்டிகள் நடத்தப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். ''இலங்கையில் இனங்களுக்கு இடையே ஐக்கியத்தினை எவ்வாறு ஏற்படுத்தலாம்?'', ''இலங்கையில் பின் பற்றப்படுகின்றவாறு இந்துசமயம், பௌத்த சமயம் மற்றும் கிறிஸ்தவ சமயம் ஆகியன'', ''பல்லினத் தன்மையுள்ள நிலையில் ஒற்றுமை'' ஆகிய மூன்று தலைப்புகளில் போட்டிகள் இடம்பெறுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுரைகளை அடுத்தமாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் ''சிவில் விவகாரங்களுக்கும் பொதுசன உறவுகளுக்குமான அலுவலகம், பாதுகாப்புப் படைத்தலைமை யகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.'' என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ-1)

# சர்வதேச நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சூடானிய ஜனாதிபதி மீண்டும் தேர்தலில் வெற்றி



கார்ட்டூம், ஏப். 28

சூடானில் இம்மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள தற்போதைய ஜனாதிபதி ஓமர் அல்-பஷீரே மீண்டும் வெற்றி பெற்றுள்ளார் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஆபிரிக்க நாடான சூடானில் ஓமர் அல்-பஷீர் ஜனாதிபதியாகவிருந்து வருகிறார். இந்நிலையில், அங்கு 24 ஆண்டுகளுக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

இதில் ஜனாதிபதி ஓமர் அல்-பஷீர் மீண்டும் போட்டியிட்டார். அவரை எதிர்த்து சூடான் மக்கள் விடுதலை இயக்கத் தலைவர் சல்வா கீரும், பல அரசியல் கட்சியினரும் போட்டியிட்டனர்.

இந்தத் தேர்தல் முடிவுகள் திங்கட்கிழமை அறிவிக்கப்பட்டன. அதில் 68 சதவீதம் வாக்குகள் பெற்று ஜனாதிபதி ஓமர் அல்-பஷீர் மீண்டும் வெற்றி பெற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சூடானில் அவரது ஆதரவாளர்கள் மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் உள்ளனர். நாடு முழுவதும் கோலாகலமாக விழா எடுத்துள்ளனர்.

அதேவேளை, இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தலில் சூடான் மக்கள் விடுதலை இயக்கத் தலைவர் கீர், தெற்கு சூடான் பகுதியில் 93 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டது.

இதற்கு ஜனாதிபதி பஷீர் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அங்கு மறுதேர்தல் நடத்தப்பட்டு திங்கட்கிழமை முடிவுகள் அறிவிக்கப்பட்டன. முடிவில் 68 சதவீதம் வாக்குகள் பெற்று பஷீரே வெற்றி பெற்றுள்ளார் எனத் தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வமாக அறிவித்தது.

ஆனால், இந்தத் தேர்தல் முடிவுக்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. தேர்தலில் தில்லுமுல்லு நடந்துள்ளது. குறிப்பாக தெற்கு சூடானில் இது அரங்கேறியுள்ளது எனக் குற்றஞ்சாட்டியுள்ளன.

வெற்றிபெற்றுள்ள ஜனாதிபதி ஓமர் அல்-பஷீர் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் போர்க் குற்றவாளி என வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஆனால் இதை அவர் மறுத்துள்ளார்.

# மலேஷிய இடைத்தேர்தலில் தமிழ் வேட்பாளர் வெற்றி!

உலு சிலாங்கூர், ஏப். 28

மலேஷியாவில் உலு சிலாங்கூர் தொகுதியில் நடந்த இடைத்தேர்தலில், ஆளும் கட்சி வேட்பாளர் கமலநாதன் வெற்றி பெற்றுள்ளார். மலேஷிய இந்திய காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் கூட்டணியான தேசிய முன்னணி, தற்போது ஆட்சி செய்து வருகிறது.

கடந்த 2008 இல் நடந்த பொதுத் தேர்தலில் தேசிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றினாலும், தமிழர்கள் வாழும் பகுதிகளில் இந்தக் கட்சிக்குப் பின்னடைவு ஏற்பட்டது. மலேஷிய இந்திய காங்கிரஸ் செல்வாக்குப் பெற்ற உலு சிலாங்கூரில் கடந்த தேர்தலில், ஆளும் கட்சி கூட்டணி தோல்வியைத் தழுவியது.

இதையடுத்து, மக்கள் கூட்டணி சார்பில் போட்டியிட்ட ஜைனல் அபிடின் வெற்றி பெற்றார். ஆனால், இவர் சமீபத்தில் மூளை புற்றுநோயால் காலமானார். இதையடுத்து, உலு சிலாங்கூரில் இடைத் தேர்தல் நடந்தது. ஆளும் தேசிய கூட்டணி சார்பில் மலேஷிய இந்திய காங்கிரஸ் கட்சியின் தகவல் தொடர்பாளர் கமலநாதன் போட்டியிட்டார்.

இவரை எதிர்த்து பி.கே.ஆர். கட்சி சார்பில் முன்னாள் அமைச்சர் இப்ராகிம் போட்டியிட்டார். ஞாயிற்றுக்கிழமை இரவு இடைத்தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டன. கமலநாதன் 1,700 வாக்குகள் வித்தியாசத்தில் எதிர்க்கட்சி வேட்பாளரைத் தோற்கடித்தார்.

இடைத்தேர்தலில் ஆளும் கட்சி வெற்றி பெற்றது குறித்து மலேஷிய பிரதமர் நஜீப் ரசாக் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். ''அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் இந்த வெற்றி மூலம் விரைவுபடுத்தப்படும்'' என அவர் தெரிவித்துள்ளார்.

# வேற்று கிரகவாசிகள் இருப்பது உண்மை; விஞ்ஞானி ஸ்டீபன் ஹொக்கிங் தகவல்!

வாஷிங்டன், ஏப். 28

வேற்று கிரகவாசிகள் இருப்பது உண்மைதான். ஆனால், அவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டாம். அப்படி தொடர்புகொண்டால் அது பேரழிவை ஏற்படுத்தும் என்று அமெரிக்க விஞ்ஞானி ஸ்டீபன் ஹொக்கிங் தெரிவித்துள்ளார்.

அண்டவெளியில் சூரிய மண்டலத்திலும், அதற்கு வெளியிலும் எத்தனையோ கிரகங்கள் உள்ளன. இவைதவிர, இலட்சக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. இந்த கிரகங்களிலும், நட்சத்திரங்களிலும் மனிதர்கள் வாழ்ந்து வருகிறார்களா என்ற கேள்வி பலகாலமாக இருந்து வருகிறது.

வேற்று கிரகவாசிகள் பறக்கும் தட்டுகளில் பூமிக்கு வந்துள்ளார்கள் என அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் பலர் நம்புகின்றனர். ஆனால் இது அறிவியல்பூர்வமாக உறுதி செய்யப்படவில்லை. இந்நிலையில், ஓர் அறிவியல் அறிஞர் இது உண்மைதான் என்று உலகத்துக்கு அறிவித்திருக்கிறார்.

அவர் இயற்பியல் துறையில் உலக மேதையான விஞ்ஞானி ஸ்டீபன் ஹொக்கிங் ஆவார். உடல் ஊனமுற்றவரான இவர், பிறவியிலேயே சில குறைபாடுகளோடு பிறந்தாலும், அவற்றை எல்லாம் மீறி தன் அறிவாற்றலால் உலகத்தையே அதிசயிக்க வைத்தவர்.டிஸ்கவரி அலையில் அவரது குறும் படங்கள் ஒளிபரப்பாகி வருகின்றன. அவற் றின் அறிமுக உரையில் அவர் வேற்று கிரக வாசிகள் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

வேற்று கிரகவாசிகள் மற்ற கிரகங்களில் மட்டும் அல்லாமல், நட்சத்திரங்களிலும், கிரகங்களுக்கு இடைப்பட்ட வெளிகளில் மிதந்தபடியும் இருக்கிறார்கள். இந்த முடிவுக்கு நான் எப்படி வந்தேன் என்றால், அண்டத்தில் இலட்சக்கணக்கான பால்வீதி மண்டலங்கள் உள்ளன. ஒவ்வொரு பால் வீதி மண்டலத்திலும் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன.

இப்படி அண்டவெளி விரிந்து பரந்து இருக்கும்போது அவற்றில் பூமியில் மட்டும் தான் மனிதர்கள் இருப்பார்கள் என்பது நம்பமுடியாததாக இருக்கிறது. பூமியில் நாம் இருப்பதைப்போல மற்ற கிரகங்களிலும் மனிதர்கள் உயிர்வாழ வாய்ப்பு இருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

அவர்கள் நம்மைப்போலத்தான் இருப்பார்கள் என்று கூறமுடியாது. அவர்கள் எப்படி இருப்பார்கள் என்பது தெரியவில்லை. அவர்கள் நம்மைப்போல நாகரிகம் மிகுந்தவர்களாகவும் இருக்கலாம். நம்மைவிட புத்திசாலிகளாகவும், நம்மைவிட நவீன விண்வெளி வாகனங்களை பயன்படுத்துபவர்களாகவும் இருக்கலாம்.

அவர்களது கிரகங்களில் - நட்சத்திர மண்டலங்களில் வசதிவாய்ப்பு குறைவு ஏற்பட்டாலோ அல்லது பிற கிரகங்களை ஆராய்ந்து பார்க்கலாம் என்ற எண்ணம் ஏற்பட்டாலோ பூமிக்கும் அவர்கள் வரக்கூடும். வேற்று கிரகவாசிகள் பூமிக்கு வந்தால் அவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாது. அப்படி வைத்துக்கொண்டால் அது பூமிக்கு பேரழிவை ஏற்படுத்தும்.

இவ்வாறு ஹொக்கிங் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிதாப்பின் இலங்கைப் பயணம் ரத்து?
## வீடு முற்றுகைப் போராட்டத்தின் எதிரொலி



மும்பை, ஏப். 28

தமிழர்களின் உணர்வுகள் மதிக்கப்படும் - என்று அமிதாப்பச்சன் அறிவித்துள்ளார்.

எனவே அவர் இலங்கையில் நடைபெறுகின்ற திரைப்பட விருது விழாவில் பங்கேற்க மாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை தலைநகர் கொழும்பில் வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி தொடங்கி 4 ஆம் திகதிவரை இந்திய சர்வதேச சினிமா விருது விழா நடக்கிறது. இந்த விழாவுக்கு பொலிவுட் சூப்பர் ஸ்டார் அமிதாப்பச்சன் விளம்பரத் தூதராக இருக்கிறார். விழா முன் ஏற்பாடுகளை பார்க்க அமிதாப்பச்சன் சமீபத்தில் இலங்கைக்குச் சென்றிருந்தார்.

இதற்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் போன்றோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இலங்கையில் தொடர்ந்து தமிழர்கள் துன்பங்கள் அனுபவித்து வருவதால், அமிதாப்பச்சன் அங்கு சென்று விருது விழாவில் பங்கேற்கக் கூடாது என பரவலாக தமிழர்கள் மத்தியில் எதிர்ப்புக் கிளம்பியது.

இந்த நிலையில் 'நாம் தமிழர்' இயக்கத்தினர் மும்பையிலுள்ள அமிதாப்பச்சனின் பிரதிக்ஷா பங்களாவிலிருந்து ஜல்சா பங்களாவுக்கு ஊர்வலமாகச் சென்றனர். அங்கு அமிதாப்பச்சனின் பங்களாவை அவர்கள் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

அதைத்தொடர்ந்து அந்த இயக்கத்தின் பிரதிநிதிகள் அமிதாப்பச்சனைச் சந்தித்து, இலங்கையில் தமிழர் இன்னல்களை அனுபவித்து வருகின்ற நிலையில் அங்கு நடைபெறுன்கிற இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் கலந்துகொள்ளக்கூடாது என வலியுறுத்தினர்.

இதுதொடர்பாக அமிதாப்பச்சன் நேற்று முன்தினம் தனது இணையத்தளத்தில் எழுதியிருப்பவை வருமாறு -

எனது வீடுகளை தமிழர் குழுக்கள் முற்றுகையிட்டனர். இலங்கையில் நான் இந்திய சர்வதேச திரைப்பட விழாவை நடத்தக்கூடாது என வலியுறுத்தினர்.

நான் இந்த விழாவை நடத்துகின்ற விஸ்கிராப்ட் நிறுவனத்தினரை அழைத்திருக்கிறேன். இது பற்றி விவாதிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறேன். இதற்கு முக்கியத்துவமளிக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறேன்.

போராட்டம் நடத்திய தமிழர் பிரதிநிதிகளை விஸ்கிராப்ட் நிறுவனத்தினர் சந்தித்து பேசியுள்ளனர் என நம்புகிறேன். அவர்கள் அளித்த மனுவையும் பெற்றுள்ளனர். அத்துடன் தங்களது நிலைப்பாட்டையும் போராட்டக்குழுவினரிடம் அவர்கள் விளக்கியுள்ளனர். மேலும் இது தொடர்பாக உடனடியாக ஆட்சி மன்றக்குழுவைக் கூட்டி, தீர்வு காண்கின்றனர் எனக் கூறியிருக்கின்றனர்.

எல்லோரது (தமிழர்களது) உணர்வுகளும் கட்டாயம் மதிக்கப்படவேண்டும். எனவே நாங்கள் இது தொடர்பாக விவாதித்து புரிதலோடு, அமைதியான, இணக்கமான தீர்வு காண்போம் - என்றுள்ளது.

எல்லோருடைய உணர்வுகளும் மதிக்கப்படும் என்று அமிதாப்பச்சன் கூறியிருப்பது, இலங்கை திரைப்பட விருது விழாவில் தமிழர்களின் உணர்வை மதித்து அவர் கலந்துகொள்ள மாட்டார் என்பதையே சூசகமாக உணர்த்துகிறது என நடுநிலையாளர்கள் கருதுகின்றனர்.

# கடும் வெயிலுக்குப் பலியானோர் எண்ணிக்கை 108 ஆக அதிகரிப்பு
## ஒரிஸாவில் மட்டும் 107 பேர் மரணம்

புதுடில்லி, ஏப். 28

இந்தியாவில் கடும் வெயிலுக்கு பலியானோர் எண்ணிக்கை 108 ஆக உயர்ந்தது.

இந்தியாவிலேயே அதிகளவாக ஒரிஸா மாநிலத்தில் கடும் வெயில் வாட்டி எடுத்து வருகிறது. ஒரிஸாவின் ஜார்சுகுடா பகுதியில் அதிகளவாக 110.3 டிகிரி வெயில் பதிவாகியுள்ளது. சம்பல்பூர் பகுதியில் 109 டிகிரி வெயிலும், சுந்தர்கர் பகுதியில் 108 டிகிரி வெயிலும் பதிவானது.

அனல் பறக்கும் வெயில் மட்டுமல்லாமல் அனல் காற்றும் வீசுவதன் காரணமாக ஒரிஸாவில் 105 பேர் இறந்துவிட்டனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மேலும் 2 பேர் அனல் காற்றுக்குப் பலியாயினர்.

இதைத்தொடர்ந்து இந்தியாவின் முழுவதும் வெயிலுக்கு பலியானோர் எண்ணிக்கை 108 ஆக உயர்ந்தது. ஒரிஸாவில் மட்டும் பலியானோர் எண்ணிக்கை 107 ஆகும்.

இந்தியாவிலேயே அதிக அளவாக ராஜஸ்தான் மாநிலம் கங்காநகர் பகுதியில் திங்கட்கிழமை 112.1 டிகிரி வெயில் பதிவானது. சுரு பகுதியில் 111.74 டிகிரி வெயிலும், தோல்பூரில் 110.3 டிகிரி வெயிலும், கோட்டா பகுதியில் 108 டிகிரி வெயிலும், ஜெய்ப்பூரில் 106 டிகிரி வெயிலும் பதிவாயின.

தலைநகர் தில்லியில் திங்கட்கிழமை 107 டிகிரி வெயில் பதிவானது.

# இலங்கையில் 'சிவப்பு மழை'க்குத் தடை

'சிவப்பு மழை' படத்துக்கு இலங்கையில் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. 'கின்னஸ்' சாதனைக்காக, 12 நாள்களில் உருவாக்கப்பட்ட படம், 'சிவப்பு மழை.' உலகிலேயே மிகக் குறைந்த நாட்கள்ளில் தயாரான முழுநீள பொழுதுபோக்குப் படம் இதுதான்.

இந்தப் படத்தில் சுரேஷ் ஜோகிம் - மீரா ஜாஸ்மின் ஆகிய இருவரும் நடித்து இருந்தனர். கிருஷ்ணமூர்த்தி இயக்கம் செய்தார்.

இலங்கை இராணுவத்தால் பாதிக்கப்பட்ட ஓர் இளைஞன் தமிழ்நாட்டுக்கு வந்து, மத்திய அமைச்சரின் மகளைக் கடத்தி, தனது கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்வது போன்ற கதையம்சம் உள்ள படம் இது.

சமீபத்தில் திரைக்கு வந்த இந்த படம், இப்போது தமிழ்நாடு முழுவதும் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தப் படத்துக்கு, இலங்கையில் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது.

# நித்தியானந்தாவுக்குத் திடீர் நெஞ்சு வலி
## பெங்களூர் வைத்தியசாலையில் சிகிச்சை
### பொலிஸ் காவலில் விசாரணை நடந்தபோது



பெங்களூர், ஏப். 28

பொலிஸ் காவலில் விசாரணை நடைபெற்றபோது நித்தியானந்தாவுக்குத் திடீர் நெஞ்சு வலி ஏற்பட்டது. இதையடுத்து பெங்களூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவருக்குத் தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

'செக்ஸ்' முறைப்பாட்டில் கைதான நித்தியானந்தாவை பெங்களூர் சி.ஐ.டி. பொலிஸார் 4 நாள்கள் காவலில் எடுத்து விசாரணை நடத்தி வந்தனர்.

நேற்றுமுன்தினத்துடன் நித்தியானந்தாவின் பொலிஸ் காவல் முடிவடைவதாக இருந்ததால், பிற்பகல் 3.15 மணியளவில் சி.ஐ.டி. அலுவலகத்திலிருந்து நித்தியானந்தாவை பொலிஸ் வானில் ஏற்றி ராமநகர் மாவட்ட செசன்சு நீதிமன்றுக்கு பொலிஸார் அழைத்துச் சென்றனர். அங்குநீதிபதி நாராயண பிரசாத் முன்னிலையில் அவர் ஆஜர்படுத்தப்பட்டார்.

அப்போது நித்தியானந்தாவின் சட்டத்தரணி சந்திரமவுலி பிணை கேட்டு மனுத் தாக்கல் செய்தார். இருதரப்பு வாதம் மற்றும் பொலிஸார் வழங்கிய ஆவணங்களை பரிசீலித்த நீதிபதி நாராயணபிரசாத், நித்தியானந்தாவுக்கு பிணை வழங்கக்கோரிய மனுவை தள்ளுபடி செய்தார். அதோடு நித்தியானந்தாவை மேலும் 2 நாள்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி அளித்து நீதிபதி உத்தரவிட்டார்.

பின்னர் மாலை 6.10 மணியளவில் பொலிஸார் நித்தியானந்தாவை பெங்களூரில் உள்ள அலுவலகத்துக்கு மீண்டும் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.


இந்த நிலையில், விசாரணையின்போது நித்தியானந்தாவுக்கு திடீரென்று நெஞ்சு வலி ஏற்பட்டது. நெஞ்சுவலிப்பதாக அவர் கூறியதும், பெங்களூரிலுள்ள இருதய வைத்தியசாலைக்கு நித்தியானந்தாவை பொலிஸார் அழைத்துச்சென்றனர்.

அங்கு தீவிர கண்காணிப்பு பிரிவில் நித்தியானந்தா சேர்க்கப்பட்டார். அவருக்கு இ.சி.ஜி. மற்றும் இரத்த பரிசோதனை போன்ற சோதனைகள் நடத்தப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையில் பொலிஸார் கைப்பற்றிய சி.டி. ஒன்றில், நித்தியானந்தா புலித்தோல் பெல்ட் அணிந்திருக்கும் காட்சியும் சிறுத்தைப்புலி, புள்ளிமான், காட்டு நாய் ஆகியவற்றின் தோல்களையும் அவர் பயன் படுத்தி இருந்த காட்சிகளும் இடம்பெற்று இருந்தன.

அந்த சி.டி.யை வனத்துறை அதிகாரிகள் கைப்பற்றி விசாரணை நடத்தி வருகிறார்கள். இதனால், நித்தியானந்தாவுக்கு புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது.

# சபைக்கு வராத காரணம் என்ன?
## அழகிரியிடம் மீராகுமார் கேள்வி
### நேரில் சந்திக்குமாறும் அழைப்பு



புதுடில்லி, ஏப். 28

நாடாளுமன்றத் துக்கு வராத காரணம் தொடர்பாக தன்னைச் சந்திக்குமாறு மத்திய இரசாயனத்துறை அமைச்சர் மு.க. அழகிரியிடம் மக்களவைத் தலைவர் மீராகுமார் கூறியுள்ளார்.

மத்திய அமைச்சர் அழகிரி, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கலந்து கொண்டு உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதில்லை என்று எதிர்க்கட்சிகள் ஏற்கனவே குற்றம்சாட்டி வருகின்றன. இந்தப் பிரச்சினை கடந்த வாரத்தில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இது மத்திய அரசுக்கு சங்கடத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் டில்லியில் செய்தியாளர்களிடம் ராகுமார் கூறியவை வருமாறு -

என்னை வந்து சந்திக்குமாறு மத்திய அமைச்சர் அழகிரிக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது. என்னைச் சந்திக்கும்போது அவருடைய பிரச்சினைகள் குறித்து என்னுடன் விவாதிக்கலாம். அவைக்கு அவர் வராத காரணம் குறித்து என்னுடன் அவர் பேசலாம் - என்றார்.

இரசாயனத்துறை தொடர்பாக உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அந்தத் துறையின் இணை அமைச்சர் ஸ்ரீகாந்த் ஜேனா நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பதிலளித்து வருகிறார். இதற்கு அ.தி.மு.க. உறுப்பினர் மைத்ரேயன் மக்களவையில் கடந்த வெள்ளிக்கிழமை கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜும் மக்களவையில் பிரச்சினை எழுப்பிப் பேசினார்.

# இந்தியச் செய்திகள்

# கறுப்புக்கொடியை வீசினால் பயந்துவிடுவோமா?
## கடைசி மூச்சுவரை பேசிக் கொண்டேயிருப்பேன்
### அம்பேத்கர் விழா சம்பவம் குறித்து சட்டசபையில் கருணாநிதி பேச்சு



சென்னை, ஏப். 28

நான் பேசுகின்ற கூட்டத்தில் பாம்பு விடப்பட்டாலும் - செருப்பு வீசப்பட்டாலும் - கல் எறியப்பட்டாலும் கடைசி மூச்சு இருக்கும் வரை பேசிக் கொண்டே இருப்பேன் - என்று முதல்வர் கருணாநிதி தெரி வித்தார்.

சட்டப்பேரவையில் திங்கட்கிழமை கேள்வி நேரம் முடிந்ததும் அ.தி.மு.க., காங்., பா.ம.க., மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட், ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் கொண்டு வந்த சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்துக்கு பதில் அளித்து முதல்வர் பேசியவை வருமாறு -

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் அம்பேத்கருக்கு சிலை வைக்கக் கூடாது என்று நானோ மற்றவர்களோ அடம் பிடித்திருந்தாலோ அல்லது தடுத்திருந்தாலோ கறுப்புக் கொடி காட்டினால் அது நியாயமானதாக இருக்கக் கூடும்.

அம்பேத்கர் சிலை திறப்பு விழாவுக்கு வந்த சிலர் சட்டைப் பையில் வைத்திருந்த கறுப்புக் கொடியை எடுத்து வீசினார்கள். சட்டப்பேரவையில் இந்தப் பிரச்சினை வந்த பிறகுதான் அது நாட்டுக்கே தெரிகிறது.

அதுவரையில் யாருக்கும் தெரியவில்லை. அங்கே கூடியிருந்தது சுமார் ஆயிரம் பேர் இருக்கலாம். அதில் நான்கைந்து பேர் எந்தக் கட்சியின் பெயரைச் சொன்னால் பயப்படுவார்களோ அந்தக் கட்சியின் [illegible] அம்பேத்கர் [illegible] அந்தச் சம்பவம் நடைபெற்றது.

அந்தக் கலவரத்தில் பத்திரிகையாளர்கள், செய்தி நிறுவனங்களின் கருவிகள் தாக்கப்பட்டன என்ற செய்திக்கு நானும் எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். உரிய நடவடிக்கை எடுப்பேன் என்ற உறுதியையும் இங்கே அளிக்கிறேன்.

கறுப்புக்கொடிக்கு அஞ்சுகின்ற இயக்கம் தி.மு.க. அல்ல. அது நடத்தாத கறுப்புக் கொடி இயக்கமே தமிழகத்தில் இல்லை. நேருவுக்கே கறுப்புக்கொடி காட்டியுள்ளோம். பொலிஸாரிடம் அனுமதி பெற்று அவர்கள் சொல்கிற இடத்தில்தான் தி.மு.க. சார்பில் தலைவர்களுக்கு கறுப்புக் கொடி காட்டப்பட்டுள்ளது.

ஆனால் திடீரென ஒரு தாக்குதல், ஒரு எதிர்ப்பு என்றால் அதற்கு நாங்கள் பயப்பட வேண்டும் என்றால் முடியாது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு முன்பாக எனக்கெதிராக நான்கைந்து பேர் கறுப்புத் துணியைக் காட்டி ''அனுமதியோம், அனுமதியோம்'' என்று சொன்னார்கள். எங்கிருந்தோ பின்னால் தூண்டப்பட்டு அனுப்பப்பட்ட கூட்டம் அது. பஞ்ச பாண்டவர்களைப்போல அவர்கள் வந்து கலாட்டா செய்தார்கள். நான் மிகுந்த அடக்கத்தோடு அது என்ன என்றுகூட பார்க்காமல், சம்பவத்தைப் பற்றி கவலைப்படாமல் பேசிக் கொண்டிருந்தேன்.

நான் பேசுகிற கூட்டத்தில் பாம்பு விடப்பட்டாலும், செருப்பு வீசப்பட்டாலும், கல் எறியப்பட்டாலும் பேசிக் கொண்டுதான் இருக்கிறேன். பேசிக் கொண்டே இருப்பேன்.

என்னுடைய கடைசி மூச்சு அடங்குகின்ற வரையிலே இதயத்திலே கடைசி துடிப்பு இருக்கும் வரை பேசிக் கொண்டே இருப்பேன். அந்தச் சம்பவம் நடைபெற்ற போதும் பேசிக் கொண்டேதான் இருந்தேன். நிகழ்ச்சி முடிந்த பிறகு உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகள் நன்றாகச் சமாளித்தீர்கள் என்று என்னைப் பாராட்டினர். உயர் நீதிமன்றத்தை அமளிக்களமாக, கலவர பூமியாக மாற்றுகிறவர்கள் பொதுமக்களால் மன்னிக்கப்பட மாட்டார்கள். கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த சம்பவத்தை மறந்து நல்வழியை மக்களுக்குக் காட்டுங்கள் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தின் இரதோற்சவம் நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. ஆலயத்தில் பக்தர்கள் திரண்டு நிற்பதையும், அம்பாள் தேரில் ஆரோகணித்து அருள்காட்சி வழங்குவதையும், பிள்ளையார், முருகன், அம்பாள் தத்தமது தேர்களில் வீதிவலம் வருவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- கணேசமூர்த்தி)

### கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் வலயங்களில்

# ஆசிரியர் இழந்த சுயவிவரக் கோவைகளை புதிதாக உருவாக்க விசேட ஏற்பாடுகள்

### சம்பந்தப்பட்டோரை வெள்ளியன்று சமுகம் தருமாறு அறிவிப்பு

அச்சுவேலி, ஏப். 28

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்களில் சுயவிவரக் கோவை இல்லாத ஆசிரியர்களுக்கான சுயவிவரக் கோவையைப் புதிதாக உருவாக்குவது தொடர்பான வேலைகள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை யாழ். கல்வி வலயத்தில் மேற்கொள்ளப் படவிருப்பதால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தங்களிடம் இருக்கும் ஆவணங்களின் 'போட்டோஸ்ரட்' பிரதிகளுடன் யாழ். கல்வி வலயத்துக்கு நேரில் சமுகம் தருமாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேலும் தகவல் தெரிவிக்கையில் -

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களில் இருந்து தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியர்களில் சுயவிவரக் கோவைகளை இழந்த ஆசிரியர்களுக்குப் புதிய சுயவிவரக் கோவைகள் உருவாக்கப்படவுள்ளன. அது தொடர்பான செயற்பாடுகள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை எனது முன்னிலையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

புதிய சுயவிவரக் கோவைகளை உருவாக்கும் பணியில் சம்பந்தப்பட்ட வலயக் கல்வி அலுவலர்களின் சார்பில் அதிகாரிகளை உள்ளடக்கிய குழுக்களும், மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் குழுவும் ஈடுபடவுள்ளன.

இதுவரை தமது சுயவிவரக் கோவை கிடைக்கவில்லை என அறிந்த ஆசிரியர்கள் சுயவிவரக் கோவையில் உள்ளடங்க வேண்டிய ஆவணங்களைக் கல்வித் தகைமைச் சான்றிழ்கள், தொழிற் தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், ஆசிரியர் நியமனக் கடிதம், விதவைகள், அநாதைகள், ஓய்வூதியம் தொடர்பான கடிதங்கள் உள்ளடங்கலாகத் தங்களிடம் இருக்கும் ஆவணங்களையும் அவற்றின் போட்டோப் பிரதிகளையும் கொண்டு நேரில் சமுகம் தர வேண்டும்.

யுத்த நடவடிக்கைகளின் பின்னர் இரண்டு வருடங்களாகச் சுயவிவரக் கோவைகள் மீட்டெடுக்கப்பட்டன. முதலாம் கட்டத்தில் 1560 கோவைகளும், இரண்டாம் கட்டத்தில் 600 கோவைகளுமாக மொத்தம் 2160 கோவைகள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. ஏனைய கோவைகள் புதிதாக உருவாக்கப்பட வேண்டும்.

மேற்படி புதிய கோவைகளை உருவாக்கும் நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குவது எதிர்கால தொழில் நிலையில் அவர்களுக்குப் பல்வேறு வகையிலும் உதவுவதோடு ஓய்வுபெறும் போது இலகுவான முறையில் ஓய்வூதியக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கும் வகை செய்யும் - எனத்தெரிவித்தார். (ஒ-11)

## கையடக்கத் தொலைபேசி திருத்தும் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப். 28

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்களுக்குக் கையடக்கத் தொலைபேசி திருத்தும் பயிற்சி தொழிற்துறைத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இந்தத் தொழிற்பயிற்சிக்கு ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிவரத்தை நாளைமறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன் நல்லூர் பிரதேச செயலகத்தில் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-10)

### நெல்லியடி அரசடிப்பிள்ளையார் சந்திப் பகுதியில்

# வெள்ளை வானில் இளம் பெண்ணைக் கடத்திய இருவருக்கு மே. 10 வரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஏப். 28

நெல்லியடி அரசடிப்பிள்ளையார் சந்திக்குச் சமீபமாக வைத்து ஞாயிற்றுக்கிழமை வெள்ளை வானில் கடத்தப்பட்ட இளம்பெண் அன்றிரவே மீண்டார். அவர் கொடுத்த தகவலின் பேரில் கைதான இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து அறியவருவதாவது:-

கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிகண்டியில் இருந்து கரவெட்டிக்கு சிநேகிதியைச் சந்திக்கச்சென்ற இளம் பெண் ஒருவர் மாலை 6 மணியளவில் வீட்டுக்குத்திரும்பும் வழியில் நெல்லியடி அரசடிப்பிள்ளையார் கோயிலடியில் வைத்து வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார். அவரது சைக்கிளையும் அவர்கள் எடுத்துச்சென்றிருந்தனர்.

நைலோன் கயிற்றால் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில், தில்லையம்பலப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள பற்றைக்குள் இரவு 10.30 மணியளவில் அவரை வீசிவிட்டு அவர்கள் சென்றுவிட்டனர்.

மயங்கிய நிலையில் இருந்த அந்தப் பெண் இரவு 11 மணியளவில் மயக்கம் தெளிந்து, சோர்வான நிலையில் நடந்து சென்று, கரப்பான் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் வசிப்பவர்களிடம் தமக்கு நேர்ந்த கதியைக் கூறினார்.

நெல்லியடிப் பொலிஸாருக்கு அவர்கள் தகவல் கொடுத்ததை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் இளம்பெண்ணை விசாரணை செய்து, அவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் கரவெட்டி இராஜ கிராமத்தில் உள்ள வீடு ஒன்றை அதிகாலை 4 மணிக்கு சுற்றிவளைத்தனர்.

அங்கு பெண்ணின் சைக்கிளும் அவரது நகைகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன. அங்கிருந்த இருவரை சந்தேகத்தில் கைது செய்த பொலிஸார், விசாரணை செய்த பின்னர் நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

வழக்கை விசாரணை செய்த பருத்தித்துறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவா, சந்தேக நபர்கள் இருவரையும் அடுத்தமாதம் 10 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு, பெண்ணை மருத்துவ பரிசோதனைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்குமாறும் பொலிஸாரைப் பணித்தார்.

இளம் பெண் கடத்தல் அரசியல் நோக்கம் கொண்டதல்ல என்பதும் தனிப்பட்ட விவகாரம் என்பதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தகைய சம்பவம் ஏதும் இடம்பெற்றால் உடன் பொலிஸாருக்கு அல்லது நீதிமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் என்று நீதிமன்றம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (ஒ-1)

## 'மஹஜன சம்பத' சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஏப்.28

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2233 ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் 'G' என்ற ஆங்கில எழுத்தும் 5/1/8/2/5/8 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷடத்துக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டன.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 5/1/8/2/5/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இரண்டு பேருக்கு முதலாம் பரிசாகத் தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

1/8/2/5/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் கிடைக்கும்.

8/2/5/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 117 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/5/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,182 பேருக்கு நான்காம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 11,945 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கும்.

8 என்ற இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 11,805பேருக்கு ஆறாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

இடமிருந்து வலமான அமைப்பில் 5/1/8/2/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 10பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கும்.

5/1/8/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 117பேருக்கு எட்டாம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/1/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,191 பேருக்கு ஒன்பதாம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கும்.

5/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 11,845பேருக்கு 10ஆம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கவுள்ளது.

'G' என்ற ஆங்கில எழுத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 47,375 பேருக்கு 11ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-10)

## பளையில் 4கிராம அலுவலர்.பிரிவுகளில் 1,500பேர் ஞாயிறன்று மீளக்குடியமர்வு

யாழ்ப்பாணம், ஏப்.28

வவுனியா நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தங்களின் சொந்த இடங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

மாசார், சோரன்பற்று, தம்பகாமம், தர்மக்கேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்து 500 பேர் வாகனங்களில் அழைத்துச்செல்லப்பட்டு அவர்களின் இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே பிரதேசத்தின் புலோப்பளை கிழக்கு, புலோப்பளை மேற்கு, பளை நகரம், முல்லையடி ஆகிய நான்கு கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளமையும் பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் எட்டு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு மக்கள் மீளக்குடியமர்த்த வேண்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## உரும்பிராய் இந்துவின் பரிசளிப்பும் சஞ்சிகை வெளியீடும்

யாழ்ப்பாணம், ஏப். 28

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வும், "வித்தியா" சஞ்சிகை வெளியீடும் புதிய கலையரங்குக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

கல்லூரியின் அதிபர் அ. ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினர்களாக லண்டன் தொழிலதிபர் க.தர்மகுலசிங்கமும் அவரது பாரியாரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-6)

## நாட்டுக்கூத்துப் போட்டி ஞாயிறன்று

யாழ்ப்பாணம், ஏப். 28

மாவட்ட மட்டத் தமிழ்த் தினப்போட்டிகளில் நாட்டுக்கூத்துப் போட்டி எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, யாழ். மத்திய கல்லூரி, யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

போட்டியாளர்கள் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு வருகை தந்து தமக்கான நிலையங்களைத் தெரிந்துகொண்டு போட்டிகளில் பங்கேற்குமாறு வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுள்ளார்.

இதேவேளை அன்றையதினம் ஞாயிற்றுக்கிழமை மாகாண மட்டப் போட்டிகளில் எழுத்தாக்கப் போட்டிகளும் நடைபெறவுள்ளதால், மாவட்ட மட்ட எழுத்தாக்கப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களைக் காலை 8.30 மணிக்கு வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூட்டானில் சார்க் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட தெற்காசிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள்.

# தயா, ஜோர்ஜ் மாஸ்டர் குறித்து தொடர்ந்தும் விசாரணைகள்

கொழும்பு, ஏப். 28

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் மற்றும் அதன் மொழிபெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கொழும்பு நீதிவான் நீதிமன்றதில் தெரிவித்துள்ளனர்.

வழக்கு விசாரணைகள் இன்று நடைபெற்றபோது, தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களிடம் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் இவர்களுக்கு எதிரான விசாரணைகளை நடத்தி வருகின்றனர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு நீதிவான் ஒத்திவைத்தார்.

# பளை பொதுச் சந்தை வெள்ளியன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்.28

பளை பொதுச் சந்தை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி. உமாவினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

யுத்த அனர்த்தத்தால் முழுமையாகச் சேதமடைந்த சந்தைக் கட்டடத்தின் மரக்கறி மற்றும் மீன் விற்பனைப் பிரிவுகள் மீளக் குடியமர்ந்த மக்களின் நன்மை கருதி சபை நிதியில் புனரமைக்கப்பட்டுள்ளதாக சபைச் செயலாளர் சி.சிவப்பிரகாசம் தெரிவித்தார். (ஓ-207)

# அமைச்சர் பஸிலின் முகத்தில் பலமாக அறைந்தது குரங்கு!

## தெஹிவளையில் சம்பவம்

கொழும்பு, ஏப். 28

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, தெஹிவளை மிருகக் காட்சிச் சாலைக்கு சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டபோது சிம்பொன்சி குரங்கு அவரது முகத்தில் பலமாக அடித்தது. இச்சம்பவம் அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, எல்லாம் நல்லதுக்கே என்று சிரித்தபடி கூறினார் பஸில் ராஜபக்ஷ.

# மூதவையை அமைக்கும் முனைப்புகளில் அரசு

கொழும்பு, ஏப். 28

இலங்கையில் மூதவை (செனட் சபை) ஒன்றை அமைப் பதற்கான முனைப்புக்களை அரசு ஆரம்பித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் செனட் சபை ஒன்றை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

மூதவையை அமைப்பது குறித்து ஏற்கனவே சட்டத்துறையினருடன் பேச்சு நடத்தப்பட்டுவருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மூதவைக்கு எத்தனை பேரை தெரிவு செய்ய வேண்டும், எவ்வாறு தெரிவது போன்ற விடயங்கள் குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

மாகாண ரீதியிலும் மூதவை உறுப்பினர்களை நியமிப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், நியமன முறைமைகள் மற்றும் அங்கத்துவர்களின் எண்ணிக்கை என்பன தொடர்பில் இதுவரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் மூதவையை அமைப்பது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## முன்னாள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்து அரசின் நலன்புரி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்த மக்களில் அநேகமானோர் கடந்த தேர்தலுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டுவிட்டனர். சுமார் 7 ஆயிரம் பேர் வரையிலேயே இந்த நலன்புரி முகாம்களில் தற்போது உள்ளனர் என்றும் அவர் கூறினார்.

''ஆனால் முன்னாள் புலிப் போராளிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முகாம்களுக்குச் செல்வதற்கும் அங்குள்ளவர்களைப் பார்வையிடுவதற்கும் ஐ.நா. அதிகாரிகளைக் கூட அரசு அனுமதிப்பதில்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.'' - என்று அவர் மேலும் கூறினார்.

## விசாரணையைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட புலனாய்வுப் பொலிஸார் நீதிமன்றுக்கு நேற்றையதினம் வராமல் வேறு பொலிஸார் சமுகமளித்திருந்தனர்.

இதுதொடர்பான விளக்கம் பெறுவதற்கு யாழ். உதவி பொலிஸ் சுப்பிரிண்டனை நீதிமன்றில் சமுகமளிக்குமாறு உத்தரவிட்டு ஒரு மணி நேரம் விசாரணையை நீதிவான் ஒத்திவைத்தார்.

விசாரணையை மீண்டும் ஆரம்பித்த போது குறித்த உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் சுகயீனம் காரணமாக வாகனத்தில் பயணிக்கக் கூடிய நிலையில் இல்லை என்று பிரதம இன்ஸ்பெக்டர் நீதிமன்றில் தெரிவித்தார். இதனையடுத்து வட மாகாண பிரதிப்பொலிஸ் மா அதிபருக்கு இந்த விடயத்தைத் (டி.ஐ.ஜிக்கு) தெரிவிக்குமாறு பணிக்கப்பட்டது.

இவ்வழக்கின் நான்காம் ஐந்தாம் சந்தேக நபர்களான, பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பி. உறுப்பினரின் தாயாரான திருப்பதியம்மா, சகோதரியான குமாரசிங்கம் சுகன்யா ஆகியோரைப் பிணையில் விடுவிக்குமாறு இவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி விஜயேந்திரா மனுத் தாக்கல் செய்தார்.

### பிணை மனு நிராகரிப்பு

இவரின் மனுவை நிராகரித்த நீதிவான், ஏற்கனவே கடந்தமாதம் 24ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்ட இரண்டாம் சந்தேக நபரான விநாசித்தம்பி தவச்செல்வம் என்பவருக்கு வழங்கப்பட்ட பிணையை ரத்துச் செய்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த விசாரணைகளை மே மூன்றாம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான், நீதிமன்ற கட்டளையை மதிக்கத் தவறிய உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டனை அன்றைய தினம் நீதிமன்றில் சமுகமளிக்குமாறும் உத்தரவிட்டார்.

## அதிக மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் இம்மனித உரிமை மீறல்களும், மனிதப் பேரவலங்களும் அரங்கேறின. சோமா லியா, சூடான், ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலும் சிறுபான்மை மக்கள் நிம்மதியாக இயல்பு வாழ்க்கை வாழ முடியாத சூழலே காணப்படுகின்றது.

## ஐ.நா. சபையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பாகப் பொறுப்புக் கூறச்செய்யும் விவகாரம் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்கான குழுவொன்றை அமைப்பது தொடர்பாக ஆராய்வதற்காகவே அவர் இலங்கைக்கு விஜயம் செய்கிறார் என முதலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் லைன் பஸ்கோவின் விஜயத்துக்கான நிகழ்ச்சி நிரலில் தற்போது அந்த விடயம் இடம்பெறவில்லை.

ஐ.நா.செயலர் பான் - கீ - மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்கான குழுவை நியமிப்பது குறித்து ஐ.நாவில் கடந்த சில வாரங்களாகப் பேச்சுகள் எதுவும் இடம்பெறவில்லை எனத் தெரிவித்துள்ள ஐ.நாவின் உயர் வட்டாரங்கள், இவ்வாறான குழுவொன்று அமைக்கப்படுமா என்பது குறித்து சந்தேகம் வெளியிட்டுள்ளன. எனினும் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கான அனுமதியை பஸ்கோ கோரியுள்ளமையை மாத்திரம் ஐ.நா.வட்டாரங்கள் உறுதிசெய்துள்ளன.

லைன் பஸ்கோ மே இரண்டாவது வாரத்தில் இலங்கைக்கு வருவதற்கான அனுமதியைக் கோரியுள்ளார். எனினும் இலங்கை அரசிடமிருந்து இதற்கான பதில் இதுவரை கிடைக்கவில்லை என ஐக்கிய நாடுகள் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

# தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரி கிளையில் 'ஏரிஎம்' சேவை

யாழ்ப்பாணம், ஏப்.28

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையில் எதிர்வரும் மூன்றாம் திகதி தன்னியக்கி பணப்பரிமாற்ற சேவை (ATM) ஆரம்பிக்கப்படவுள்ளது.

வங்கியில் தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரம் பொருத்தும் பணி இடம்பெற்று வருகின்றது.

ஆரம்ப நாள் நிகழ்வில் வங்கியின் உயர் அதிகாரிகள் கலந்து கொள்வர் என கிளை முகாமையாளர் சி.தனீஸ்வரன் தெரிவித்தார்.

இதே வேளை சங்கானையிலும் வங்கியின் கிளை எதிர்வரும் 3ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ-207)

## பயங்கரவாதத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாகரிக சமூகமொன்றின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்குப் பயங்கரவாதம் கடும் அச்சுறுத்தலாகவுள்ளது.

தென்னாசிய பிராந்தியம் அதிகளவிற்கு இதனால் பாதிக்கப்பட்டுள்ளது.

எமது சமூகத்தைப் பிளவுபடுத்தி பலவீனப்படுத்த முயலும் பயங்கரவாத சக்திகளுக்கு எதிராக அணிதிரள வேண்டிய காலம் வந்துள்ளது.

கடந்த உச்சிமாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட குற்ற விவகாரங்களில் பரஸ்பர உதவி தொடர்பான பிரகடனத்தை அங்கீகரிப்பதன் மூலம் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கான எமது போராட்டத்தில் இணையுமாறு எனது சக தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

சர்வதேச பயங்கரவாதம் தொடர்பான ஐ.நாவின் உத்தேச பிரகடனத்தை விரைவில் பூர்த்தியாக்கவேண்டும்.

இந்தியாவும், இலங்கையும் 'சார்க் பயங்கரவாதிகள் குற்றக்கண்காணிப்புப் பிரிவைப்' பலப்படுத்தி இரு நாடுகளின் படையினர் மத்தியில் தகவல்களைப் பரிமாறுவதில் ஈடுபட்டுள்ளன பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதில் இரு நாடுகளும் கூட்டாக முயன்று வருகின்றன.. இதில் ஏனைய நாடுகளும் இணைய வேண்டும். - எனக் கேட்டுக் கொண்டார். (அ-சி)

Network Engineer
Government Scholarship
System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.
USA,UK பல்கலைக்கழகங்களில் Master Degree
*Carrier Guidance, Student Visa, Work Permit
செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்கள்
Per Module - 15000/= 3800/=
Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
Free Diploma in Hardware Technology-DHT, Diploma in English, COMPUTER DRIVING LICENCE-ICDL
இச்சலுகை இன்னும் சில நாட்கள் வரை மட்டுமே
MCS 324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில் யாழ்ப்பாணம்
Supported By UNDP/JRRP
T.P-772395895

VACANCY
INTERNATIONAL AIR TICKETING/ RESERVATION OFFICER
VACCANCY EXISTS IN A COMPANY IN JAFFNA FOR THE ABOVE POST. PERSONS WITH IATA QUALIFICATION COURSE MAY APPLY. PERSONS WITH G.C.E ORDINARY LEVEL WITH GOOD ENGLISH KNOWLEDGE. ALSO CAN APPLY.
CONTACT: 0772293182, 0777428525
(C/567030)

தேவை
ஓவ்செற் மெசின் மைண்டர்
அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புவர்களும் தேவை.
கணனி ரைப் செற்றிங்
Corel Draw, Pagemaker, Photoshop
அனுபவம் உள்ள இருபாலரும்
யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது
மதி கலர்ஸ் பிறிண்டேர்ஸ்
தொடர்பு : 15/2, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பேசி : 021 2229285

A/L 2012
தமிழ்
திரு. சிவா
ஆரம்பம்: 01.05.2010 சனி 2pm (சனி, ஞாயிறு 2pm)
தனிப்பாட அனுமதி உண்டு
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2012
BIOLOGY
ஆரம்பம் Wed.28.04. 5.30pm
Mr.R.Kugananthan-B.Sc.M.Ed.
Che. Mr.M.A.நிரோஜன் B.Sc
Phy.ஆரியன்
C/ma - Mr.G.கண்ணன் B.Sc

பிரத்தியேக வகுப்பு
புவியியல்
தரம் 6 - O/L வரை, A/L 2010, 2011, 2012
24, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0213207847

மீண்டும் உதயம்
பிரபல தமிழாசிரியர்
O/L, A/Lதமிழ்
கல்வி நிறுவனங்களும், பிரத்தியேகமாகக் கற்க விரும்புபவர்களும் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல:
0217900668; 0774669841, 0778998672.
(97375)

SPOKEN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம்: 01.05.2010
தரம் வாய்ந்த ஆசிரியர்களால், மற்றும் ஆங்கிலத்தில் ஆர்வம் உள்ளவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்.... முடிவில் Certificate வழங்கப்படும். சனி, ஞாயிறு காலை 10மணி - 11 மணி, மாலை 4மணி - 5மணி
(97381)
Sukevi English Language Center,
295, Brown Road, Kalady Junction, Jaffna. (பிரவுண் வீதி)
T.P. 0213207433, 0773452130

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org